# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs - February 2021

© **Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்


வரலாறு 01







20 அரசியல் அறிவியல்

புவியியல் 22







24 பொருளாதாரம்

அறிவியல் 30



தினசரி தேசிய நிகழ்வு 35





46 சர்வதேச நிகழ்வு



தமிழ்நாடு 48




# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| பிப்ரவரி 1 | **45வது ஆண்டு நிறுவன தினத்தை கொண்டாடுகிறது இந்திய கடலோர காவல் படை** | ▪ கடந்த 1978ம் ஆண்டு 7 தளங்களுடன் தொடங்கப்பட்டது.<br>▪ உலகின் நான்காவது பெரிய கடலோர கப்பல் படையான, இந்திய கடலோர காவல் படை, இந்திய கடலோர பகுதிகளை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது. |
| பிப்ரவரி 2 | **உலக சதுப்பு நில தினம்** | ▪ மையக்கருத்து – Wetland and Water |
| பிப்ரவரி 13 | **உலக வானொலி தினம்** | ▪ ஐ.நா. வானொலி 1946–இல் தொடங்கப்பட்ட நாளான பிப்ரவரி 13 உலக வானொலி நாளாக அறிவிக்கப்பட்டது. கடந்த 2011–ஆம் ஆண்டு முதல் உலக வானொலி தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| பிப்ரவரி 21 | **சர்வதேச தாய்மொழி தினம்** | ▪ அனைவரும் தாய்மொழியை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று வெங்கையா நாயுடு வலியுறுத்தியுள்ளார்.<br>▪ சர்வதேச தாய்மொழி தினம், பிப்ரவரி 21 கொண்டாடப்பட்டது.<br>▪ 200 இந்திய மொழியில் அழியும் நிலையில் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் | ▪ மையக்கருத்து – "Future of STI: Impacts on Education, Skills, and Work".<br>▪ ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 28–ம் தேதி தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது. சர்.சி.வி. ராமனை பெருமைப்படுத்தும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ அவர் கண்டுபிடித்த ராமன் விளைவு கோட்பாட்டை உலகுக்கு அறிவித்த நாள் பிப்ரவரி 28. அதனால்தான் அன்றைக்கு தேசிய அறிவியல் தினமாக கொண்டாடப்படுகிறது. |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## தேஜஸ் மார்க்–2

- உள்நாட்டில் தயாரிக்கப்படும் அதிக திறன் வாய்ந்த தேஜஸ் மார்க்–2 போர் விமானம் அடுத்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும் என்று ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) தெரிவித்துள்ளது. அதன் முதல் அதிவேக சோதனை 2023–ஆம் ஆண்டு தொடங்கும். 2025–ஆம் ஆண்டில் அதன் உற்பத்தி தொடங்கும்.

## 45வது ஆண்டு நிறுவன தினத்தை கொண்டாடுகிறது இந்திய கடலோர காவல் படை

- இந்திய கடலோர காவல் படை தனது 45வது நிறுவன தினத்தை பிப்ரவரி 1 கொண்டாடுகிறது.
- கடந்த 1978ம் ஆண்டு 7 தளங்களுடன் தொடங்கப்பட்ட இந்திய கடலோர காவல் படை, தற்போது 156 கப்பல்கள் மற்றும் 62 விமானங்களுடன் ஒரு வலுவான படையாக வளர்ந்துள்ளது. 2025ம் ஆண்டுக்குள் 200 தளங்கள் மற்றும் 80 விமானங்களை பெற இலக்கு நிர்ணயித்துள்ளது.
- உலகின் நான்காவது பெரிய கடலோர காவல் படையான, இந்திய கடலோர காவல் படை, இந்திய கடலோர பகுதிகளை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

## 48,000 கோடியில் தேஜஸ் விமானங்கள் ஒப்பந்தம்

- இந்திய விமானப் படைக்கு ரூ.48,000 கோடி மதிப்பிலான 83 இலகு ரக தேஜஸ் போர் விமானங்களை எச்.ஏ.எல். நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் கையெழுத்தாகவுள்ளது.

## "யுத் அப்யாஸ்"

- அமெரிக்க வீரர்களுடன் இந்திய வீரர்கள் இணைந்து மேற்கொள்ளவிருக்கும் "யுத் அப்யாஸ்" கூட்டு ராணுவப் பயிற்சி, ராஜஸ்தானில் வரும் 8–ஆம் தேதி தொடங்கி 21–ம் தேதி வரை நடைபெற்றது.
- 16–ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த வருடாந்திர கூட்டு ராணுவப் பயிற்சியில் நடைபெற்றது. பிகானேர் மாவட்டம், லூன்கர் நகர் பகுதியிலுள்ள மஹாஜன் துப்பாக்கி சுடும் பயிற்சிக் களத்தில் "யுத் அப்யாஸ்" கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

## பன்னாட்டு இந்திய விமானத்தொழில் கண்காட்சி

- பிப்ரவரி 3ஆம் தேதி தொடங்கி 3 நாள்களாக நடைபெற்று வந்த பன்னாட்டு இந்திய விமானத் தொழில் கண்காட்சி பிப்ரவரி5 நிறைவடைந்தது.
- இந்திய விமானப்படையின் தலைமை தளபதி ரமேஷ் குமாரி சிங் பகௌரியா.

## சிறுகுறு நடுத்தர தொழில்களுக்கான பாதுகாப்பு கண்காட்சி

- சிறு குறு நடுத்தர தொழில்களுக்கான பாதுகாப்பு கண்காட்சி சென்னை வணிக மையத்தில் மூன்று நாள்கள் மார்ச் 19 முதல் 21வரை நடைபெற உள்ளது. இதில் 400 சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

- இந்த கண்காட்சியை ஸ்வதானந்த நிறுவனம், சென்னை கொள்கை ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனம் மற்றும், தமிழ்நாடு விமான மேம்பாட்டு நிறுவன சங்கம் (AIDAT) ஆகியவை இணைந்து எற்பாடு செய்கிறது.
- "MSME21" ன் முக்கிய நோக்கம் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை இந்திய பாதுகாப்பு உற்பத்தி, வெவ்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், டி.ஆ.டி. ஒக்கு கீழ் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஒன்றிணைப்பதே ஆகும்.

**எம்.எஸ்.எம்.இ**

| | |
|---|---|
| தலைமையிடம் | டெல்லி |
| தொடக்கம் | 2007 |
| அமைச்சர்கள் | நிதின் கட்கரி |
| கேபினெட் இணை அமைச்சர் | பிரதீப் சந்தர சாரங்கி |

## சி.ஆர்பிஎப் "கோப்ரா" படைப்பிரிவில் பெண் கமாண்டோக்கள்

- மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் (சிஆர்பிஎப்) "கோப்ரா" கமாண்டோ படைப் பிரிவில், முதல்முறையாக பெண் கமாண்டோக்கள் சேரக்கப்பட்டுள்ளனர்.
- வனப்பகுதிகளில் நக்ஸல்களுக்கு எதிரான தாக்குதல்நடவடிக்கைகளைமேற்கொள்வதற்காக, சிஆர்பிஎப்பில் கோப்ரா கமாண்டோ படைப் பிரிவு கடந்த 2009 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- கோப்ரா கமாண்டோ படைப் பிரிவில் பணியாற்றுவதற்காக, தற்போதுள்ள 6 பட்டாலியன்களிலிருந்தும் 34 பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ஐஎன்எஸ் விராட் போர்க்கப்பல்

- கடற்படையில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்ட ஐஎன்எஸ் விராட் போர்க் கப்பலை உடைக்கும் பணியை நிறுத்திவைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்திய கடற்படையில் சுமார் 30 ஆண்டுகளாக சேவையாற்றிய ஐஎன்எஸ் விராட் போர்க் கப்பலுக்கு கடந்த 2017-ம் ஆண்டு ஓய்வு அளிக்கப்பட்டது.
- பின்னர் இதனை கடல்சார் அருங்காட்சியகமாக மாற்ற முயற்சி எடுக்கப்பட்டது.
- இந்திய கடற்படையில் பணிபுரிவதற்கு முன், எச்.எம்.எஸ். ஹெர்மஸ் என்ற பெயரில் பிரிட்டன் கடற்படையில் இக்கப்பல் சேவையாற்றியது. இதனை இந்தியா கடந்த 1986-ல் விலைக்கு வாங்கியது. பிறகு புதுப்பிக்கப்பட்டு ஐஎன்எஸ் விராட் என்ற பெயரில் இந்திய கடற்படையில் இக்கப்பல் சேவையாற்றியது.

## பாதுகாப்பு ஆலோசகர்

- தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்.

## அர்ஜுன் மார்க் 1 ஏ பீரங்கி

- மத்திய அரசு மேக் இன் இந்தியா திட்டத்துக்கு ஏற்ப தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிநவீன அர்ஜுன் மார்க் 1 ஏ பீரங்கி டாங்கியை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்த அதிநவீன அர்ஜுன் மார்க் 1 ஏ பீரங்கி சென்னை ஆவடியில் உள்ள கனரக ஊர்தி தொழிற்சாலையில், ரூ.8,400 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 100-ஆவது வஜ்ரா கே-9 ஒப்படைப்பு

- குஜராத் மாநிலம், சூரத்தில் உள்ள லார்சன் & டூப்ரோ ராணுவ தளவாட ஆலையில் உற்பத்தியான வஜ்ரா கே-9 பிரங்கிகளை ராணுவ தலைமை தளபதி எம்.எம் நரவணே உள்ளிட்டோரிடம் நூறாவாது வஜ்ரா கே-9 பீரங்கி ஒப்படைக்கப்பட்டது.

## கடலோரக் காவல் படையில் புதிய ரோந்துப் படகு

- இந்திய கடலோரக் காவல்படைக்கு கிழக்கு பிராந்தியத்தில் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ஐசிஜிஎஸ் சி-453 என்ற புதிய இடைமறிக்கும் ரோந்துப் படகு சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது என பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- காட்டுப்பள்ளி எல் அன்ட் டி கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட இந்த ரோந்துப் படகு சுமார் 27.80 மீட்டர் நீளமும் 106 டன் எடையும் கொண்டது.

## கப்பற்படை பாதுகாப்பு கண்காட்சி (NAVDEX-21)

- இந்திய கப்பற்படையான பிரலயா (Pralaya) ஐக்கிய அரபு எமிரெட்ஸில் உள்ள அபுதாபில் நடைபெறும் கப்பற்படை பாதுகாப்பு கண்காட்சி மற்றும் சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி (IDEX-21) ல் கலந்துகொண்டது. இக்கண்காட்சி பிப்ரவரி 20 முதல் 25 வரை நடைபெற உள்ளது.

### உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரு ஏவுகணைகளின் சோதனை வெற்றி

- இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளான ஹெலினா, துருவாஸ்தி ராவின் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது.
- ராணுவ பயன்பாட்டுக்கான ஹெலினா ஏவுகணை, விமானப் படை பயன்பாட்டுக்கான துருவாஸ்திர ஏவுகணை ஆகியவற்றின் கூட்டு சோதனை பாலைவனப் பகுதிகளில் இலகு ஹெலிகாப்டர் தளத்தில் செய்து பார்க்கப்பட்டது.
- உலகில் உள்ள மிகவும் நவீன பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளில் இதுவும் ஒன்றாகும்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (டிஆர்டிஓ) உள்நாட்டிலேயே இந்த ஏவுகணைகள் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டன.

### PASSEX பயிற்சி

- இந்திய கப்பற்படை மற்றும் இந்தோனேஷியா கப்பற்படைக்கும் இடையே PASSEX என்ற பயிற்சி அரேபியக் கடலில் நடைபெற்றது.
- இந்தியாவின் சார்பாக INS Talwar மற்றும் இந்தோனேஷியாவின் சார்பாக KRI Bung TOMO என்ற போர் கப்பல்கள் பங்கேற்றனர்.

### 1971 ஆண்டின் வெற்றி பொன்விழா

- பாகிஸ்தானுடன் 1971–இல் நடைபெற்ற போரில் வெற்றி பெற்று 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி "பொன் விழா ஆண்டு வெற்றி ஓட்டம்", சென்னையில் நடைபெற்றது.
- கடந்த 1971–ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரில் இந்தியா வெற்றி பெற்று வங்கதேசம் நாடு உருவானது.
- இந்த மாரத்தான் ஓட்டத்தை, 1971–ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தப் போரில் பங்கேற்று "வீர் சக்ரா" விருது பெற்ற முன்னாள் ராணுவ அதிகாரி கர்னல் ஏ.கிருஷ்ணசாமி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

### தீ பாதுகாப்பு பயிற்சிக்கான திறன் மேம்பாட்டு மையம்

- உத்திர பிரதேசத்தில் உள்ள பில்குவாவில் தீ பாதுகாப்பு பயிற்சிக்காக டி.ஆர்.டி.ஓ திறன் மேம்பாட்டு மையத்தை அமைத்துள்ளது.
- டெல்லியை சேர்ந்த டி.ஆர்.டி.ஓ. ஆய்வகம் 'Centre for Fire, Explosive and Environment Safety (CFEES)' அமைத்துள்ளது. இது இந்தியாவின் முதன் தீ பாதுகாப்பு பயிற்சிக்கான திறன் மேம்பாட்டு மையம் ஆகும்.

## 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியாவின் செயல்பாடு:

- ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியா உறுப்பினராக இருக்கம் இந்தக் காலக் கட்டங்களில் (2021–22) கண்ணியம், பேச்சவார்த்தை, ஒத்துழைப்பு, அமைதி, வளர்ச்சி என ஐந்து கொள்கைகளின் அடிப்படையில் செயல்பட இந்தியா முடிவெடுத்துள்ளது.

### கரோனா கடுப்பூசி: சீரம் நிறுவனம்– யுனிசெஃப் ஒப்பந்தம்

- சிறுவர்களுக்கான ஐ.நா. அமைப்பான யுனிசெஃப்–க்கு நீண்டகால அடிப்படையில் கரோனா தடுப்பூசியை வழங்குவதற்க வகைசெய்யும் ஒப்பந்தத்தில் சீரம் நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.
- பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்டு கல்கலைக்கழகம் உருவாக்கிய கரோனா தடுப்பூசியை "கோவிஷீல்ட்" என்ற பெயரில் சீரம் நிறுவனம் இந்தியாவில் உற்பத்தி செய்து வருகிறது.
- மேலும், அமெரிக்காவின் நோவாவேக்ஸ் நிறுவனம் உருவாக்கிங கரோனா தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கும் சீரம் நிறுவனம் தயாராகிவருகிறது.

### எச்.ஏ.எல் நிறுவனம் இலகு ரக போர் விமானங்களை ஏற்றுமதி செய்ய திட்டம்

- எச். ஏ.எல் நிறுவனம் தயாரிக்கும் இலகுரக தேஜஸ் போர் விமானங்களை வாங்க தென் கிழக்கு ஆசியா நாடுகள் மற்றும் மேற்கு ஆசியா நாடுகள் ஆர்வம் காட்டுவதாக எச்.ஏ.எல் நிறுவனத்தின் இயக்குநர் மாதவன் தெரிவித்துள்ளார்.

- மேலும் இந்திய விமானப்படை பயிற்சி விமானம் HTT-40 தயாரித்து கொடுக்க வேண்டும் எனவும் எச்.ஏ.எல். நிறுவனத்திடம் முன்மொழிந்து உள்ளது. ஆளில்லா விமானங்களையம் எச்.ஏ.எல் நிறுவனம் உருவாக்க உள்ளது.
- இந்திய விமானப் படைக்கு 83 இலகு ரக தேஜஸ் போர் விமானங்களை எச்.ஏ.எல். நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத்துறை மேற்கொண்டுள்ளது.

HAL நிறுவனம்

தொடங்கியவர் : Walhand Hirachand

தொடக்கம் : 23 டிசம்பர் 1940

தலைமையிடம் : பெங்களூரு

## மீண்டும் மனித உரிமை பேரவையில் இணையும் அமெரிக்கா

- அநீதி மற்றும் கொடுங்கோன்மைக்கு எதிராக போராட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் இணைய உள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

**ஐ.நா. மனித உரிமை ஆணையம்**

- ஐ.நா. மனித உரிமை ஆணையம் கடந்த 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது ஐ.நா. மனித உரிமைகளை மேம்படுத்துவதும், பாதுகாப்பதும் தொடர்பான சர்வதேச மன்றமாகும்.
- தலைமையகம்–ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- தற்போதைய தலைவர் – Nazhat Shameem Khan

## உலக சாலை விபத்துகளில் இந்தியாவின் பங்கு 10 சதவீதம்

- சாலை பாதுகாப்புத் தொடர்பான அறிக்கை ஒன்றை உலக வங்கி வெளியிட்டது. உலகளாவிய அளவில் இருக்கும் வாகனங்களின் எண்ணிக்கையில் இந்தியாவில் உள்ள வாகனங்களின் பங்கு ஒரு சதவீதம்.
- ஆனால் உலக அளவில் சாலை விபத்துகளால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் இந்தியாவின் பங்கு10 சதவீதம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உலக வங்கி அமைப்பு**

நிறுவனம் – உலக வங்கி

தலைமையிடம் – வாஷிங்டன் டி.சி

துவங்கப்பட்ட ஆண்டு – 1945

## தெற்காசியா மாநாடு

- கரோனா வைரஸை எதிர்கொள்வது தொடர்பாக இந்தியா, ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், மாலத்தீவு, மொரீஷியஸ், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, சீசெல்ஸ் ஆகிய 10 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற கருத்தரங்கம் நடைபெற்றது.

## இந்தியாவில் "பிரிக்ஸ்" உச்சிமாநாடு

- இந்த ஆண்டுக்கான "பிரிக்ஸ்" உச்சி மாநாட்டை இந்தியா நடத்துவதற்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.
- பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உறுப்பினராக கொண்டிருக்கும் "பிரிக்ஸ்" கூட்டமைப்பின் 2021–ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியா, இந்த ஆண்டுக்கான உச்சி மாநாட்டையும் நடத்த உள்ளது.
- தலைவர் – S.Marcos Prado Troyjo
- தொடக்கம் – ஜூன் 2006

# 1.4 சிறந்த நபர்கள்

## வேம்பநாடு ஏரியை சுத்தம் செய்தவர்க்கு பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்

- வேம்பாடு ஏரியை தனிநபராக இருந்து சுத்தம் செய்த கேரளாவை சேர்ந்த என்.எஸ். ராஜப்பன் என்பவரை பிரதமர் மான் கீ பாத் நிகழ்ச்சியில் பாராட்டு தெரிவித்துள்ளார். இவர் கேரளாவின் கொட்டயன் பகுதியின் கைப்புழமுட்டு (Kaippuzhamuttu) பகுதியை சேர்ந்தவர்.
- மாற்றுத் திறனாளியான இவர் தனிநபராக இருந்து வேம்பநாடு ஏரியில் உள்ள நெகிழி பாட்டில்களை எடுத்து சுத்தம் செய்தார்.

## "நாசா"வின் முக்கிய பொறுப்பில் இந்தியா–அமெரிக்கா

- அமெரிக்கா விண்வெளி ஆய்வு மையமான "நாசா"வின் இடைக்கால தலைமை பணிக்குழு ஒருங்கிணைப்பு அதிகாரியாக (சீஃப் ஆஃப் ஸ்டாஃப்) இந்திய வம்சாவளி விஞ்ஞானி பவ்யா லால் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2005–ஆம் ஆண்டு முதல் 2020–ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு பகுப்பாய்வு அறிவியல் தொழில்நுட்பக் கொள்கை நிறுவனத்தில் ஆராய்ச்சியாளராக அவர் பணியாற்றியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஜோ பைடனின் ஆட்சி மாற்றக் குழுவில் பவ்யா லால் இடம் பெற்றிருந்தார்.

## தமிழ்த்தாள் தமிழாய்வுப் பெருவிழா

- உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் தமிழ்த்தாய்–73 தமிழாய்வுப் பெருவிழாவை துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடக்கி வைத்தார்.
- மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தில் "தமிழ்த்தாய் 73 தமிழாய்வுப் பெருவிழா" தொடங்கியது.

### நாட்டின் மிக இளம் வயது பெண் விமானி

- நாட்டில் மிகவும் இளம் வயதில் விமானி ஆன பெண் என்ற பெருமையை காஷ்மீரைச் சேர்ந்த 25 வயது ஆயிஷா அஜீஸ் பெற்றுள்ளார்.
- ஆயிஷாவின் தாய், ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

## தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா

- தமிழறிஞர் தேவநேயப் பாவாணர் பிறந்தநாள் விழா, சென்னையில் உள்ள அகரமுதலித் திட்ட இயக்கத்தில் நடைபெற்றது.
- கடந்த 1974–இல் தமிழக அரசு தொடங்கிய செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி இயக்குநராக தேவநேயப் பாவாணர் நியமிக்கப்பட்டார்.

#### தேவநேய பாவணார்

- திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவிலில்ட பிறந்தார். "மொழி ஞாயி" என்று அழைக்கப்படுகிறார். The primary classical language of the world என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார்.

## குழந்தைகள் உரிமை ஆர்வலர் தாமஸ் ஜெயராஜ் இறந்தார்

- சிறுவர் உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மையத்தின் (சி.சி.ஆர்.டி) நிறுவனர் மற்றும் இயக்குநராக இருந்த மூத்த குழந்தை உரிமைகள் செயற்பாட்டாளர் தாமஸ் ஜெயராஜ், மாரடைப்பால் இறந்தார்.
- குழந்தை பெயர்களைக் கொண்ட ஒரு அமைப்பைத் தொடங்கிய நாட்டின் முதல் நபர்களில் இவரும் ஒருவர். அவர் தோசாமியின் நிறுவனர் ஆவார், இது 1882 ஆம் ஆண்டு இந்திய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நம்பிக்கையாக 23 நவம்பர் 2006 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அவர் தமிழ்நாடு சிறுவர் உரிமைகள் கண்காணிப் பகத்தின் (டி.என்.சி.ஆர்.டபிள்யூ) மாநில இணை அழைப்பாளராக பணியாற்றி வந்தார்.

#### குழந்தைகள் உரிமைகளுக்கான ஆணையம்

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையங்கள் (சிபிசிஆர்) சட்டம், 2005, நாடாளுமன்றச் சட்டம் (டிசம்பர் 2005) ஆகியவற்றின் கீழ், குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் (என்சிபிசிஆர்) மார்ச் 2007 இல் அமைக்கப்பட்டது.

## திருமுருக கிருபானந்த வாரியார்

- திருமுருக கிருபானந்த வாரியாரின் பிறந்த தினம் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

#### திருமுருக கிருபானந்த வாரியார்

- இவரது இயற்பெயர் கிருபானந்த வாரி. வேலூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயநல்லூர் என்னும் சிற்றூரில், 25 ஆகஸ்ட் 1906இல் பிறந்தவர்.
- குழந்தைகளுக்கு "தாத்தா சொன்ன குட்டிக் கதைகள்' என்ற நூலை அவர் எழுதினார்.
- "அருள்மொழி அரசு", என்றும் "திருப்புகழ் ஜோதி" என்றும் அனைவராலும் பாராட்டப்பட்டவர்.
- 2021 ஆம் ஆண்டிலிருந்து, இவரது பிறந்தநாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.

## அண்ணாமலைக் கவிராயரின் 130–ஆவது நினைவு தினம்

- தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகேயுள்ள சென்னிகுளத்தில் அண்ணாமலைக் கவிராயரின் 130–ஆவது நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

#### அண்ணாமலைக் கவிராயர்

- இவர் "காவடிச் சிந்து" என்ற இசைப் பாவகையில் ஒன்றை பாடியுள்ளார். இது 24 பாடல்களை கொண்டது. இவரின் ஆசிரியர் முத்துசாமிப் பிள்ளை. சேற்றூர் அரசர் வடமலைத் திருவாத சுந்தரராசு துரையிடம் பாடல் பாடி காண்பித்தார்.
- இவர் நெல்லை மாவட்டத்தில் இருக்கும் சென்னிகுளம் என்ற சிற்றூரில் 1860 ஆம் ஆண்டு பிறந்தார்.

## மகாராஜா சுஹெல்தேவ் நினைவு மண்டபம்

- பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மகாராஜா சுஹெல்தேவ் நினைவு மண்டபம் மற்றும் சிட்டோரா ஏரியின் மேம்பாட்டு பணிகளும் 2021 பிப்ரவரி 16ஆம் தேதி காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.
- உத்தரபிரதேசத்தில் பஹ்ரைனில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளார்.
- சுஹல்தேவ் ஸ்ராவஸ்தியைச் சேர்ந்த ஒரு இந்திய மன்னர் C.E.1034 இல் பஹ்ரைச்சில் கஸ்னவிட் ஜெனரல் காசி சையத் சலார் மசூத்தை தோற்கடித்து கொலை செய்ததாக பிரபலமாக அறியப்படுகிறது.
- 17ஆம் நூற்றாண்டின் பாரசீக மொழியில் மிராட்–இ–மசூடியில் என்ற நூலில் காதல் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்.

## 'பொல்லானுக்கு மணிமண்டபம்'

- ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற தீரன் சின்னமலையின் வெற்றிக்கு உதவியாக செயல்பட்டது அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த படைத் தளபதியான பொல்லான்.
- இவரது வீரத்தைப் போற்றும் வகையில் முழு உருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்.
- மேலும், பொல்லானுக்கு புகழ் சேர்க்கும் வகையில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் எனவும் முதல்வர் கே.பழனிசாமி அறிவித்தார்.

#### சின்னமலை

- 1801–இல் ஈரோடு காவிரிக்கரையிலும், 1802–இல் ஓடாநிலையிலும், 1804–இல் அறச்சலூரிலும் ஆங்கிலேயர்களுடன் நடைபெற்ற போர்களில் சின்னமலை பெரும் வெற்றி பெற்றார்.
- சின்னமலையைக் கைது செய்து சங்ககிரிக் கோட்டைக்குக் கொண்டு சென்று ஜுலை 31,1805 அன்று தூக்கிலிட்டனர்.

## ம.சிங்காரவேலரின் 162–வது பிறந்த தினம்

- 'சிந்தனைச் சிற்பி' ம.சிங்காரவேலரின் 162–வது பிறந்த தினத்தை முன்னிட்டு, தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் அவரது படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.
- தமிழ் சான்றோர், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அவர்களின் பிறந்த தினம் தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் பிப்ரவரி 18 கொண்டாடப்பட்டு வருகிறது.

#### சிங்காரவேலர்

- சிங்காரவேலர் இவர் 1860–ம் ஆண்டு பிப்ரவரி 18ந் தேதி சென்னையில் பிறந்தார்.
- இந்திய வரலாற்றில் முதன் முதலாக "மே" முதல் நாளை தொழிலாளர் தினமாக கொண்டாடினார்.

## ஐ.நா.வின் மனித உரிமை கவுன்சிலில் தேர்வான முதல் இந்தியர்

- ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆலோசனை கவுன்சிலின் தலைவராக தேர்வான முதல் இந்தியர் அஜய் மல்கோத்ரா என்பவர் ஆவார்.

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம்**

- தொடக்கம் – 2006
- தலைமையிடம் – ஜெனிவா
- உறுப்பினர்கள் – 47 உறுப்பு நாடுகளில் 5 குழுக்கள் மூன்று ஆண்டுகள் தலைமை பதவி வகிக்கிறது.
- நோக்கம் – உலகெங்கிலும் உள்ள மனித உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கிறது.

## சட்டப்பேரவையில் வ.உ.சி. சுப்பராயன், ராமசாமி ரெட்டியார் படங்கள்

- சட்டப்பேரவை கூட்ட அரங்கில் வ.உ.சி. சுப்பராயன், ராமசாமி ரெட்டியார் ஆகியோரின் படங்களை பிப. 23ம் தேதி முதல் பழனிசாமி திறந்து வைக்கிறார்.
- அம்பேத்கர், காயிதே மில்லத், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், பெரியார், முன்னாள் முதல்வர்கள் காமராஜர், அண்ணா, எம். ஜி.ஆர், ஜெயலலிதா, ராமசாமி படையாட்சியார் ஆகியோரின் படங்கள் உள்ளன.

**வ..உ.சி.**

- முதல் உள்நாட்டு இந்திய கப்பல் நிறுவனத்தை தொடங்கினார். சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே இயக்கப்பட்டது.
- கண்ணனூர் சிறையில் இருக்கும்பொழுது எழுதிய நூல் "மெய்யறம்" ஆகும்.

**சுப்புராயன்**

- இந்தியாவிலேயே முதன் முதலில் ஊழியர்களை தேர்வு செய்ய சர்வீஸ் கமிஷன் ஏற்படுத்தினார்.
- 1926 ஆம் ஆண்டு தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வென்றார்.
- இவரின் ஆட்சி காலத்தில் தமிழகத்தில் முதன் முறையாக அரசாங்க வேலையில் தலித்துகளுக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு வழங்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை அமல்படுத்தப்பட்டது.
- ராஜாஜி அமைச்சரவையில் சட்டம் (ம) கல்வித்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

**ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்**

- சென்னை மாகாணத்தின் முதல் முதல்வர்.
- இவரின் ஆட்சிக் காலத்தில் சென்னை கோவில் நுழைவு அதிகாரச் சட்டம் 1947 இயற்றப்பட்டது.
- ஜமீன், இனாம்தார் முறை ஒழித்தார்.
- பூரண மதுவிலக்கை அமல்படுத்தினார்.
- இந்து சமய அறநிலை சட்டத்தை இயற்றினார்.
- தேவதாசி முறையை ஒழிக்கவும் சமயம் கொண்டு வந்தார்.

## நாட்டின் மிக இளம் வயது பெண் விமானி

- நாட்டில் மிகவும் இளம் வயதில் விமானி ஆன பெண் என்ற பெருமையை காஷ்மீரைச் சேர்ந்த 25 வயது ஆயிஷா அஜீஸ் பெற்றுள்ளார். ஆயிஷா, ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

**இந்தியாவைச் சேர்ந்தவருக்கு கம்போடியா நாட்டின் உயரிய விருது**

- இந்தியாவைச் சேர்ந்த கௌசிக் பருவா, கம்போடியா அரசின் உயர்ந்த விருதைப் பெற்றுள்ளார்.
- தென்கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவின் வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியத்தின் (ஐ.எஃப்.ஏ.டி) இயக்குநராக பதவி வகிக்கும் அவருக்கு வேளாண் துறை சார்ந்த சேவைகளுக்காக இந்த விருதை வழங்கி அந்நாட்டு அரசு கௌரவித்துள்ளது.

## சர்வதேச வேளாண் மேம்பாட்டு நிதி (International Fund for Agricultural Devel–opment (FAD))

- 1974ம் ஆண்டு உலக உணவு மாநாட்டின் மூலம் 1977ல் உருவாக்கப்பட்டது.
- இதன் தலைமையிடம் ரோமில் அமைந்துள்ளது.
- 177 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.
- இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் உலகம் முழுவதுமான மக்களுக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை போக்குதல்.

## மலையாள கவிஞர் விஷ்ணுநாராயணன் நம்பூதிரி காலமானார்

- கேரளத்தைச் சேர்ந்த பிரபல மலையாள கவிஞர் விஷ்ணுநாராயணன் நம்பூதிரி உடல்நலக் குறைவு காரணமாக திருவனந்தபுரத்தில் காலமானார்.

- மலையாள இலக்கிய உலகில் அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்ட கவிஞர்களில் ஒருவராக திகழ்ந்தவர் விஷ்ணுநாராயணன் நம்பூதிரி. "ஸ்வாதந்திரியத்தே குறிச்சொரு கீதம், பூமி கீதங்கள், இந்தியா என்ற விகாரம், அபராஜிதா, ஆரண்யகம், பிரணய கீதங்கள், உஜ்ஜயினியிலே ராப்பகலுகள் உள்ளிட்ட பல்வேறு கவிதை நூல்களை இவர் எழுதியுள்ளார்.
- இவருடையபடைப்புகள்பாரம்பரியசிந்தனைக்கும், அதே வேளையில் நவீனத்துவத்துக்கும் புகழ் பெற்றவை. இலக்கிய உலகுக்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை பாராட்டி கடந்த 2014–ஆம் ஆண்டு அவருக்கு "பத்ம ஸ்ரீ விருது அளித்து மத்திய அரசு கௌரவித்தது. கேரளத்தின் முக்கிய இலக்கிய விருதுகள் அனைத்தையும் பெற்றுள்ள அவர், மத்திய, மாநில சாகித்ய அகாதெமி விருதுகளையும் பெற்றுள்ளார்.

## உ.வே.சுவாமிநாதர் ஐயர்

- இவர் பிப்ரவரி 19, 1855இல் பிறந்தார்.
- தமிழ் தாத்தா என்று அழைக்கப்படுகிறார்.
- கும்பகோணத்துக்கு அருகே உள்ள "உத்தமதானபுரம்" எனும் சிற்றூரில் வேங்கட சுப்பையர் மற்றும் சரசுவதி அம்மாள் தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார்.
- இவர் 90க்கும் மேற்பட்ட புத்தகங்களை சேகரித்து 3,000க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகளை சேகரித்துள்ளனர்.

### புத்தகங்கள்

- கலாய் மாகல் துதி
- திருலோகமலை
- அனந்தவல்லியம்மாய்
- பஞ்சரத்தினம்

### பதிப்பித்த நூல்கள்

- சீவக சிந்தாமணி – 1887
- சிலப்பதிகாரம் – 1892
- புறநானூறு – 1894
- புறப்பொருள் வெண்பா மாலை – 1895
- மணிமேகலை – 1898
- ஐங்குறுநூறு – 1903
- பரிபாடல் – 1918
- குறுந்தொகை – 1937

### விருதுகள்

- மகாமகோபதியா மற்றும் தட்சிணா இந்திய தபால் துறை 18 பிப்ரவரி 2006 அன்று நினைவு தபால்தலை வெளியிட்டது.

## இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் தா.பாண்டியன் காலமானார்

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் காலமானார்.
- 1961–இல் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜீவானந்தம் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தைத் தோற்றுவித்தபோது, அதன் முதலாவது பொதுச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். 1962–இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்டச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார்.
- சிறந்த எழுத்தாளர் ஜனசக்தி உள்பட பல்வேறு இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்தார். ஜனசக்தியின் ஆசிரியராக பல ஆண்டுகள் இருந்துள்ளார்.
- ரஷிய இலக்கியங்கள் பலவற்றை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். "ஜீவாவும் நானும்", "சே குவேரா", "கார்ல்மார்க்ஸ்", "பாரதியும் யுகப் புரட்சியும்", "அழியும் கருவிகளால் அழியும் மனித இனம்" உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியதியுள்ளார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1925ஆம் ஆண்டு கான்பூரில் தொடங்கப்பட்டது. இதன் முதல் மாநாட்டில் சிங்காரவேலன் தலைமை தாங்கினார்.
- இதன் முக்கிய தலைவர்கள் எஸ்.ஏ.டாங்கே, ராஜேஸ்வர ராவ், ஜீவானந்தம், ஆர்.நல்லகண்ணு உள்ளிட்ட பலரும் ஆவார்.

## பிரதமர் மோடிக்கு சர்வதேச சுற்றுச்சூழல் விருது

- அமெரிக்காவின் ஐஹெச்எஸ் மார்க்கிட் நிறுவனத்தின் வருடாந்திர "செராவீக்" மாநாட்டில், சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான முதன்மை விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு அளிக்கப்படவுள்ளது.

## துறவி ரவிதாஸ் பிறந்தநாள்

- துறவி ரவிதாஸின் பிறந்த நாளை (பிப்ரவரி 27) முன்னிட்டு அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.

**ரவிதாஸ்**

- ரவிதாஸ் 15, 16ஆம் நூற்றாண்டின் பக்தி இயக்கத்தைச் சேர்ந்த கவிஞரும் துறவியுமாவார்.
- பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களால் குருவாக வணங்கப்படுபவர்.
- தோல் பதனிடுவோர் குடும்பத்தைச் சேர்ந்தவரெனக் கூறியுள்ளனர்.
- இராமநாதர் சீடர்களின் ஒருவராவார். சீக்கியரின் மதப் பாடல்களில் ரவிதாசரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.
- சாதி அடிப்படையிலான சமூகப் பிரிவுகள் ஆண், பெண் சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு எதிராகப் பேசினார். ஆன்மீக விடுதலையைப் பெறும் முயற்சியில் ஒற்றுமையை ஊக்குவித்தார்.

# 1.5 விளையாட்டு

## சையது முஷ்டாக் அலி டி20 : தமிழகம் முதலிடம்

- சையது முஷ்டாக் அலி கோப்பை டி20 போட்டியின் இறுதி ஆட்டத்தில் தமிழகம் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பரோடாவை வீழ்த்தி சாம்பியன் ஆனது.
- இப்போட்டியில் தமிழ்கம் சாம்பியன் ஆவது இது 2–ஆவது முறை. முன்னதாக 2006–07 காலகட்டத்தில் தமிழகம் இதே போல் கோப்பை வென்றிருந்தது.
- இப்போட்டி குஜராத் மாநிலம், ஆமதாபாதில் நடைபெற்றது.

## ஆசிய ஆன்லைன் ஷூட்டிங் சாம்பியன்ஷிப்

- ஆசிய ஆன்லைன் ஷீட்டிங் சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி 11 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.

## 'மாதத்தின் சிறந்த வீரர் விருது"

- ஐசிசி புதிதாக அறிவித்துள்ள "மாதத்தின் சிறந்த வீரர் விருது" இந்தியாவின் விக்கெட் கீப்பர்–பேட்ஸ்மேன் ரிஷப் பந்துக்கு வழங்கப்பட்டடுள்ளது.

## ஜோ ரூட் சதம்

- இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து சிறப்பாக ஆடிய ஜோ ரூட், 164 பந்துகளில் சதத்தை எட்டினார். 100–ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் ஜோ ரூட் தனது 20–ஆவது சதத்தைப் பதிவு செய்தார். அவருக்கு பதக்கம் வழங்கப்பட்டது.

## தெரு குழந்தைகள் உலககோப்பை போட்டி

- Joe rout மற்றும் Sam curran என்பவர்கள் தெரு குழந்தைகள் உலககோப்பை (The street child world cup) போட்டியை வென்றுள்ளனர்.
- கருணால்ய என்ற என்.ஐ.ஓ. தெரு மற்றும் வேலை செய்யும் குழந்தைகளுடன் பணிப்புரியும் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் இப்போட்டிக்கு உதவியது.
- இந்திய தெரு குழந்தை கிரிக்கெட் குழு, நாகலட்சுமி மற்றும் சூர்யபிரகாஷ் ஆகியோருடன் ஏற்பாடு செய்யப்பட்டது. பாலுராஜ் என்பவர் கேப்டனாக செயல்பட்டார்.

## உலக பாரா தடகளம்

- துபையில் நடைபெறும் சர்வதேச பாரா தடகள கிராண்ட் ஃப்ரீ போட்டியில் இந்தியாவுக்கு 2 தங்கம் உள்பட 6 பதக்கங்கள் கிடைத்தது.
- இதில் ஆடவருக்கான வட்டு எறிதல் பிரிவில் (எஃப்–44) இந்தியாவின் தேவேந்திர குமார் 50.61 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.
- மகளிருக்கான நீளம் தாண்டுதலில் (எஃப்46/47) இந்தியாவின் நிமிஷா சுரேஷ் 5.25 மீட்டர் தூரம் கடந்து தங்கத்தை தனதாக்கினார்.

## உலக "பாரா" தடகளம் இந்தியாவுக்கு 4 தங்கம்

- துபாயில், 12வது உலக "பாரா" தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டி நடந்தது. இதில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் "எப்44" பிரிவு போட்டியில் அதிகபட்சமாக 61.22மீ தூரம் எறிந்த இந்தியாவின் சந்தீப் சவுத்தரி, முதலிடம் பிடித்து தங்கம் வென்றார்.

- அடுத்து நடந்த ஈட்டி எறிதல் "எப்46" பிரிவு போட்டியில் 58.76 மீ., தூரம் எறிந்து இந்திய வீரர் அஜீத் சிங் தங்கம் வென்று முதலிடம் பிடித்தார். இப்பிரிவில் மற்றொரு இந்திய வீரர் சுந்தர் சிங் குர்ஜார் (57.74 மீ) 3வது இடம் பிடித்து வெண்கலம் வென்றார்.

### உலக பாரா தடகளம்

- உலக பாரா தடகள கிராண்ட்ப்ரீ போட்டி துபையில் நடைபெற்று வருகிறது.
- மகளிர் 100 மீ.டி13 இந்தியாவின் சிம்ரன் 12.74 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார்.
- ஆடவர் வட்டு எறிதல் எஃப் 55 போட்டியில் இந்தியாவின் நீரஜ் யாதவ் தங்கம் வென்றார்.
- ஆடவர் டி44 நீளம் தாண்டுதலில் இந்தியாவின் பிரவீண் குமார், பிரதீப் ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.
- மகளிர் ஈட்டி எறிதல் எஃப் 34 பிரிவில் இந்தியாவின் பாக்யஸ்ரீ வெண்கலம் வென்றார்.

## 1.7 விளையாட்டு

### மணிகா சாம்பியன்

- தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பெட்ரோரலியத் துறை (பிஎஸ்பிபி) சார்பில் விளையாடிய மணிகா பத்ரா மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் ஆனார். இப்பட்டத்தை இவர் வெல்வது இது 2-ஆவது முறையாகும்.

### ஐ.பி.எல். ஏலம்

- கிறிஸ் மோரிஸ் – ராஜஸ்தான் ராயல்
- கைல் ஜேமிசன் – ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்
- கிளென் மேக்ஸ்வெல் – ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்
- ஜை ரிச்சர்ட்சன் – பஞ்சாப் கிங்ஸ்
- கிருஷ்ணப்பா கௌதம் – சென்னை சூப்பர் கிங்ஸ்
- ரிலே மெரிடித் – பஞ்சாப் கிங்ஸ்
- மொயீன் அலி – சென்னை சூப்பர் கிங்ஸ்
- ஷாருக்கான் – பஞ்சாப் கிங்ஸ்
- நாதன் கோல்டர் நீல் – மும்பை இண்டியன்ஸ்
- ஷிவம் துபே – ராஜஸ்தான் ராயல்ஸ்

### ஐபிஎல் ஏலம் கிறிஸ் மோரிஸ் சாதனை

- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் 14-ஆவது சீசனுக்கான வீரர்கள் ஏலத்தில் தென் ஆப்பிரிக்க வீரர் கிறிஸ் மோரிஸ் அதிகபட்சமாக ரூ.16.25 கோடிக்கு வாங்கப்பட்டு சாதனை படைத்தார்.

### ராஜீவ் ராம் – பர்போரா ஜோடி சாம்பியன்

- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ராஜீவ் ராம்–செக் குடியரசின் பர்போரா கிரெஜ்சிகோவா ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

### சர்வதேச குத்துச்சண்டை : ஆல்ஃபியாவுக்கு தங்கம்

- அட்ரியாடிக் பியர்ல் குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் ஆல்ஃபியா பதான் (81 + கிலோ எடைப் பிரிவு) தங்கப்பதக்கம் வென்றார்.
- மான்டேனெக்ரோவின் புத்வா நகரில் இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது.

### ஆஸ்திரேலியா ஓபன்

- ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் சாம்பியன் ஆவார்.

### இளையோர் குத்துச்சண்டை: பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடம்

- மான்டினீக்ரோவில் நடைபெற்ற இளையோர் குத்துச்சண்டை போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா 5 தங்கம் உள்பட 12 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடம் பிடித்தது.
- சிறப்பாகச் செயல்பட்டதற்காக "போட்டியின் சிறந்த பெண் வீராங்கனை" விருது வின்காவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு 2021

- இந்தாண்டிற்கான கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டு 2021 கர்நாடகா மாநிலத்தில் நடைபெற உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் எடியூரப்பா தெரிவித்து உள்ளார்.

### தேசிய டேபிள் டென்னிஸ் சத்யன் சாம்பியன்

- ஹரியாணாவில் நடைபெற்ற 82–ஆவது தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஜி.சத்யன் சாம்பியன் ஆனார்.

### கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டி

- குல்மார்க்கில் 2–வது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இது ஜம்மு–காஷ்மீரை குளிர்கால விளையாட்டு கேந்திரமாக மாற்றுவதற்கான ஒருபடியாகும் என கூறினார்.
- 2–வது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டு போட்டி காஷ்மீரின் குல்மார்க்கில் தொடங்கியது. மார்ச் 2–ம் தேதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் 27 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் வாரியங்களைச் சேர்ந்த 1,200 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

### பிஃபா

- ஃபிஃபா என்பது ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும். இது அசோசியேஷன் கால்பந்து மற்றும் கடற்கரை கால்பந்து ஆகியவற்றின் சர்வதேச நிர்வாக குழுவாக விவரிக்கிறது.
- தலைமையிடம் – சூரிச், சுவிட்சர்லாந்து
- தலைவர் – Gianni Infantino

## 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### 'The Terrible, Horrible, very Bad Good News'

- விருது பெற்ற புகழ்பெற்ற எழுத்தாளர் மற்றும் பேச்சாளரான மேகனா பண்ட் என்பவர் இந்த நாவலை எழுதி உள்ளார்.

### ஒலிப் புத்தகமாகத் தமிழின் முதல் நாவல்

- நவீனத் தமிழ் இலக்கியத்தின் முதல் நாவலாகக் கருதப்படும், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் "பிரதாப முதலியார் சரித்திரம்" இப்போது ஒலிப் புத்தகமாக வந்திருக்கிறது.
- 1857–ல் வெளியான இந்நாவல், தமிழ் இலக்கியத்தின் ஒரு முக்கியமான அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

### கி.ரா.வின் "மிச்சக் கதைகள்" நூல் வெளியீடு விழா

- பிரபல எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி. ரா.) "மிச்சக் கதைகள்" நூல் வெளியீட்டு விழா கோவையில் நடைபெற்றது.

#### கி.ராஜநாராயணன்

- கி.ரா. என்று சுருக்கமாக அறியப்படுபவர். கரிசல் இலக்கியத்தின் தந்தை என அறியப்படுபவர். 1922 ஆம் ஆண்டு கோவில்பட்டியில் உள்ள இடைசெவல் என்னும் சிற்றூரில் பிறந்தார்.
- இவரின் முதல் நாவல் "கோபல்ல கிராமம்" என்பதாகும். 1991 ஆம் ஆண்டு "கோபல்ல கிராமத்து மக்கள்" என்னும் நாவல் சாகித்திய அகாடெமியின் விருது பெற்றது.

## 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### சி.பா.ஆதித்தனார்" விருது

- தினமணி நாளிதழுக்கு அறிவிக்கப்பட்ட, தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் நாளிதழ் விருதை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வழங்கினார்.
- நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிறமொழிக் கலப்பின்றி எழுதியும் தமிழ் வார இதழ் மற்றும் திங்களிதழ் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஒர் இதழைத் தெரிவு செய்து தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் பெயரில், ஆண்டுதோறும் விருது வழங்கப்படும்.
- இந்த விருது ஒவ்வொன்றுக்கும் விருது தொகையாக ரூ.1 லட்சம், கேடயம், பாராட்டுச் சான்றிதழ், பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து முதன் முதலாக 2020–ஆம் ஆண்டுக்கான "தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது" "தினமணி"க்கு வழங்கப்படுகிறது.

## திருவள்ளுவர் திருநாள்–சித்திரைத் தமிழ் புத்தாண்டு விருதுகள்

- தினமணி"க்கு சி.பா.ஆதித்தனார் விருது: விழாவில் தமிழ் மொழியில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றியும், பிற மொழிக் கலப்பின்றி எழுதியும் வெளியிடப்பட்டு வரும் சிறந்த நாளிதழுக்கான தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் நாளிதழ் விருது "தினமணி"க்கு வழங்கப்பட்டது.
- வைகைச் செல்வனுக்கு திருவள்ளுவர் விருது: திருவள்ளுவர் திருநாள் விருதுகளாக 2021–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முன்னாள் அமைச்சர் முனைவர் வைகைச் செல்வனுக்கு வழங்கப்பட்டது.
- 2020–ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது அ.தமிழ்மகன் உசேன்.
- அண்ணல் அம்பேத்கர் விருது வரகூர் அ–அருணாசலம்.
- பேரறிஞர் அண்ணா விருது மறைந்த கடம்பூர் எம். ஆர்.ஜனார்த்தனன்.
- மகாகவி பாரதியார் விருது கவிஞர் பூவை செங்குட்டுவன்.
- பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் அறிவுமதி.
- தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது வி.என்.சாமி.
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது முனைவர் வீ.சேதுராமலிங்கம்.

**வி.ஜி.பி.உலகத் தமிழ்ச் சங்கம்:**

- சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளாக 2020–ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தாய் விருதுக்கும் வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

**அகரமுதலித் திட்ட விருதுகள்:**

- 2020–ஆம் ஆண்டுக்கான செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் விருதான தேவநேயப் பாவாணர் விருதை முனைவர் கு.சிவமணிக்கு முதல்வர் வழங்கினார்.

**மதுரை உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்:**

- மதுரை உலகத் தமிழ்சங்க விருதுகளாக 2020–ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருது பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சேன்மார்க் அலெக்ஸ் தேவராசு சேன்மார்க்குக்கும் வழங்கப்பட்டது.

## பெண் தொழிமுனைவோர்க்கு விருது

- புகழ்பெற்ற சமூக சேவகரான ஜெயா அருணாச்சலததின் 89வது பிறந்த நாள் முன்னிட்டு தென்னிந்திாயவில் சிறந்த பெண் தொழில்முனைவோர்க்கு விருது வழங்கப்பட்டது.
- இவ்விருதை உழைக்கும் பெண்கள் மன்றம் வழங்கியது. இது ஒரு சமூக அமைப்பாகும்.

**உழைக்கும் பெண்கள் மன்றம்** (Working women's Rorum)

- உழைக்கும் பெண்கள் மன்றம் தென்னிந்தியாவில் கடந்த 1978 ஆம் ஆண்டு ஜெயா அருணாச்சலம் என்பவரால் மெட்ராஸில் தொடங்கப்பட்டது.
- பெண்களுக்கு சுகாதாரம், வணிகம் சிறுநிதி உதவி, அளிப்பதன் மூலம் அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றுவதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கம்.
- ஜெயா அருணாச்சலம் பல பெண் தொழில்முனைவோர்களை உருவாக்க முன்முயற்சி மேற்கொண்டவர்.

## ஆமை பாதுகாப்பு நிபுணர் கௌரவிக்கப்பட்டார்

- TREE நிறுவனத்தின் உரிமையாளர் தலைவருமான சுப்ரியா தரணி என்பவர், உலகை மாற்றும் ஆரம்ப ஆய்வாளர்கள் கிளை–50–ல் கௌரவிக்கப்பட்டார். கடல் ஆமைகளை பாதுகாப்பதற்காக கௌரவிக்கப்பட்டார்.

TREE Foundation

- கடந்த 2002 ஆம் ஆண்டு கடல் ஆமைகளை பாதுகாப்பதற்காக தொடங்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

## 'மிஸ் இந்தியா 2020"

- "மிஸ் இந்தியா 2020" போட்டியில், தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தை சேர்ந்த 23 வயது மானசா வாரணாசி பட்டம் வென்றார். 2021–ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் உலக அழகி போட்டியில் இந்தியா சார்பில் இவர் பற்கேற்பார்.

## 10 ஆண்டுகளில் 143 மத்திய அரசு விருதுகள்

- தமிழக உள்ளாட்சித் துறை கடந்த 10 ஆண்டுகளில் 143 மத்திய அரசின் விருதுகளை பெற்றுள்ளது.
- இதில், ஊரக வளர்ச்சித் துறை மட்டும் 122 விருதுகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
- முக்கிய விருதுகள்: ஊரகத் தூய்மைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் கடந்த 2019–ஆம் ஆண்டில் தமிழகம் ஒட்டு மொத்த பிரிவில்

சிறந்த மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதமர் நரேந்திர மோடியால் விருது வழங்கப்பட்டது.

- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ், மின் சேமிப்புக்காக தேசிய மின் சேமிப்பு விருதும், தூய்மை நகரத்துக்கான விருதை 5 முறை திருச்சி மாநகராட்சியும், டிஜிட்டல் இந்தியா விருதை கோவை, மதுரை மாநகராட்சியும் பெற்றுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சியும், டிஜிட்டல் இந்தியா விருதை கோவை, மதுரை மாநகராட்சியும் பெற்றுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மத்திய அரசின் முன்னேறும் தலைநகரம், மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம், நகர்ப்புற வறுமை ஒழிப்பு துறை, சீர்மிகு நகர கவுன்சில் ஆகிய 5 துறைகளின் தேசிய விருதுகளை பெற்றுள்ளன.

## 20 பேரின் உயிரை காப்பாற்றிய விவசாயிக்கு வீரதீர செயல் விருது

- கடந்த 2019–ம் ஆண்டு ஜூலை 8–ம் தேதி உ.பி. அரசு பஸ் ஒன்று யமுனா விரைவு சாலையில் சென்று கொண்டிருந்த போது, பாலத்தில் இருந்து குறுகிய கால்வாய்க்குள் விழுந்து நொறுங்கியது.
- அந்த நேரத்தில் துணிச்சலாக செயல்பட்டு பஸ் கதவு, ஜன்னல்களை உடைத்து 20 பயணிகளின் உயிரைக் காப்பாற்றினார் நிஹால் சிங் (27). இவர் உத்தர பிரதேச மாநிலம் ஆக்ரா அருகே உள்ள சவுகான் பாகெல் கி தர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி.

## Prani Mitra விருது

- ஃபுளு கிராஸ் இந்தியாவின் துணை நிறுவனர் எஸ்.சின்னி கிருஷ்ணா அவர்களுக்கு 2021ஆம் ஆண்டுக்கான Prani Mitra விருது வழங்கப்பட்டது. விலங்குகள் நலவாரியம் மூலம் விலங்குகளுக்கு இவர் செய்த தனது வாழ்நாள் சேவைக்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- Prani Mitra என்பது விலங்கு நலத்திற்காக வழங்கப்படும் நாட்டின் மிகப்பெரிய விருதாகும்.

## 'மித்ரா சௌர்யா'

- துணிச்சல் வீர தீரச் செயல்களுக்கான பிராணி "மித்ரா சௌர்யா" விருது கோவையைச் சேர்ந்த மறைந்த கல்பனா வாசுதேவனுக்கும், தில்லியை அடுத்த குருகிராமத்தைச் சேர்ந்த அனில் கந்தாஸுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## எழுச்சி தமிழர் விருது – 2020

- எழுச்சித் தமிழர் இலக்கிய விருதுகள் (2020) அறிவிக்கப்பட்டிருக்கின்றன.
- சிறந்த கவிதைத் தொகுப்பாக கதிர்பாரதியின் "உயர்திணைப் பறவை, சிறந்த சிறுகதைத் தொகுப்பாக அருண்.மோவின் "அநீதிக் கதைகள்", சிறந்த நாவலாக சீனிவாசன் நடராஜனின் "தாளடி, சிறந்த பெண்ணிய எழுத்துக்காக தேன்மொழி தாஸ், சிறந்த ஓவியத்திரட்சிக்காக அமுதன் பச்சைமுத்து, சிறந்த பௌத்தக் கருத்தியல் எழுத்துக்காக க.ஜெயபாலன்.
- கடந்த ஐந்தாண்டுகளில் வெளியான மிகச் சிறந்த அரசியல்–கருத்தியல் பனுவலாக தொல். திருமாவளவனின் "அமைப்பாய்த் திரள்வோம்" நூல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## கலைமாமணி விருதுகள் அறிவிப்பு

- தமிழகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளை முதல்வர் பழனிசாமி வழங்குகிறார்.
- 2019–ஆம் ஆண்டு பட்டியல் பெறுவோர் விவரம்.
- வள்ளி கும்மி–ஒயிலாட்டம், யோகிபாபு – நகைச்சுவை நடிகர், தேவதர்ஷினி – திரைப்பட நடிகை, லியாகத் அலிகான்

### 2020–ஆம் ஆண்டு விருதுகள்

- அபர்ணா ரமேஷ் (பரத நாட்டிய கலைஞர்), கன்னியப்பன் – தெருக்கூத்து, சிவகார்த்திகேயன் – நடிகர், ஐஸ்வர்யா ராஜேஷ் – நடிகை, மதுமிதா – நகைச்சுவை நடிகை, டி.இமான்– இசையமைப்பாளர், காதல் மதி – பாடலாசிரியர்.

### கலைமாமணி விருதுகள்

- கலைமாமணி விருது என்பது 1954 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசினால் ஆண்டுதோறும் கலை மற்றும் பண்பாட்டினை வளர்த்தெடுக்கவும் தொன்மையான கலைவடிவங்களை பேணும் கலைஞர்களுக்கு வழங்கப்படும் ஒரு உயர் மதிப்பான விருதாகும்.

### சீனி விஸ்வநாதனுக்கு பாரதி விருது

- தமிழக அரசின் பாரதி விருதானது, பாரதி ஆய்வாளர் சீனி விஸ்வநாதனுக்கு அளிக்கப்படுகிறது. மேலும், பழம்பெரும் நடிகைகள் சரோஜா தேவி, சௌகார்ஜானகி ஆகியோருக்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெயரிலான சிறப்பு விருது வழங்கப்பட உள்ளது.

**அகில இந்திய விருது**

- 2019–ஆம் அண்டுக்கான பாரதி விருது சீனி விஸ்வநாதனுக்கும், எம்.எஸ். சுப்புலட்சுமி விருது எஸ்.ராஜேஸ்வரிக்கும், பாலசரஸ்வதி விருது, அலர் மேல் வள்ளிக்கும் அளிக்கப்பட உள்ளது.
- 2020–ஆம் ஆண்டுக்கான பாரதி விருது, சுகி சிவத்துக்கும், எம்.எஸ். சுப்புலட்சுமி விருது வாணி ஜெயராமுக்கும், பாலசரஸ்வதி விருது சந்திர தண்டாயுதபாணிக்கும் அளிக்கப்பட உள்ளது.

### பிஎம்–கிசான் தேசிய விருதுக்கு ஆந்திரத்தின் அனந்தபுரமு மாவட்டம் தேர்வு

- ஆந்திர மாநிலம் அனந்தபுரமு மாவட்டம் பிரதமரின் விவசாயிகள் (பிஎம்–கிசான்) தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்தப் பணியை 99.6% நிறைவு செய்வதற்காக பிரதமரின் விவசாயிகள் தேசிய விருதுக்கு அனந்தபுரமு மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**பிஎம்–கிசான்**

- பிரதமரின் விவசாய நிதி உதவி திட்டம் கடந்த 2019 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.
- நாடு முழுவதும் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 6000 நிதியுதவி மூன்று தவணையாக வழங்கப்படுகிறது.

### 18–ஆவது சென்னை சர்வதேச திரைப்பட நிறைவு விழா

- சென்னை சர்வதேச திரைப்பட நிறைவு விழாவில் சிறந்த படங்களாக "என்றாவது ஒரு நாள்", "சியான்கள்", க/பெ.ரணசிங்கம்" ஆகிய படங்கள் விருது பெற்றன. 18–ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழா, கடந்த பிப்ரவரி 18–ஆம் தேதி முதல் பிப்ரவரி 25 வரை சென்னையில் நடைபெற்றது. இதில் 53 நாடுகளில் இருந்து 91 திரைப்படங்கள் பங்குபெற்றன. இந்தோ சினி அப்ரிசியேஷன் பவுண்டேஷன் நடத்தும் திரைப்பட விழாவை இம்முறை பி.வி.ஆர் உடன் இணைந்து வழங்கியது.

## 1.8 கலாச்சாரம்

### பாலாற்று படுகையில் பழங்கால பெருமாள் கற்சிலை கண்டெடுப்பு

- மதுராந்தகம் அருகே அரசர் கோயில் பகுதி ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் பாலாற்றுப் படுகையில், பனங்கிழங்குகளை தோண்டி எடுத்த போது, சுமார் 4 அடி உயர பழங்கால பெருமாள் கற்சிலை கண்டெடுக்கப்பட்டது.

### பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் கண்டுபிடிப்பு

- உத்திரமேரூர், சாலவாக்கம் அருகே உள்ளது எடமச்ச கிராமம். இந்த கிராமத்தில் உள்ள சின்னமலையில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால வகையைச் சேர்ந்த கல்திட்டை, கல் வட்டங்கள் போன்ற ஈம சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- இந்த கல்திட்டைகள் பெருங்கற்கால பண்பாட்டை சார்ந்த இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னங்களின் ஒரு வகையாகும். இது பொதுவாக மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட செங்குத்தான கற்களையும் அவற்றின் மீது சமநிலையில் தட்டையான ஒரு பலகை போன்ற ஒரு கல்லையும் வைத்திருக்கும் ஓர் அமைப்பாகும்.

### கீழடி, மணலூர், கொந்தகை, அகரத்தில் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள்

- கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகங்கை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம்–மளிகைமேடு ஆகிய பகுதிகளில் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய நிலைக் குழு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.
- சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் மணலூர், கொந்தகை, அகரம் ஆகிய பகுதிகளில் 7ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்க உள்ளன.

# 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

## இந்தியாவிடம் பெற்ற 400 மில்லியன் டாலர் கடன் திருப்பிச் செலுத்தியது இலங்கை

- இந்தியாவிடம் இருந்து பெற்ற 400 மில்லியன் அமெரிக்க டாலர் கடனை திருப்பி தந்துவிட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தில் இந்தியா, ஜப்பான், இலங்கை கூட்டு முயற்சியில் கிழக்கு கொதிகலன் முனையம் அமைக்கும் திட்டம் (இசிடி) மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த திட்டத்தில் இருந்து வெளியேறுவதாக இலங்கை அறிவித்து இந்தியா மற்றும் ஜப்பானுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.
- அதே சமயம் (இசிடி) திட்டத்திற்காக அளிக்கப்பட்ட தொகையை 2020 ஆம் ஆண்டு கோவிட்–19 தாக்கத்தால் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கில் செலவிற்காக பயன்படுத்தியது. இந்நிலையில் இந்த பணத்தை தற்போது திருப்பி செலுத்திவிட்டது இலங்கை.

## பாங்காங் ஏரி

- இந்தியாவின் லடாக் ஒன்றியப் பகுதியில் உள்ள லே மாவட்டத்தின் கிழக்கில் இந்திய–திபெத் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.
- இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே உள்ள எல்லை கட்டுப்பாட்டுப் பகுதியில், இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினைக்குரிய பகுதியில் அமைந்துள்ளது. இதன் நடுவே எல்லை கட்டுப்பாட்டுக் கோடு செல்கிறது.
- இது ராம்சர் ஈரநிலங்களுக்கான சாசனப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

**ராம்சர் ஈரநிலங்களுக்கான சாசனம்**

- ராம்சர் சாசனம் என்பது, ஈரநிலங்களின் பாதுகாப்பு, அவற்றின் தாங்குநிலைப் பயன்பாடு என்பவை தொடர்பான ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆகும்
- 1971ல் இவ்வொப்பந்தம் ஈரானில் உள்ள ராம்சர் என்னும் நகரில் கையெழுத்தானது. இந்த நகரின் பெயரைத் தழுவியே ராம்சர் சாசனம் என்னும் பெயர் ஏற்பட்டது.

## இந்துப்புக்கு புவிசார் குறியீடு : பாகிஸ்தான் முடிவு

- இந்துப்பை அனுமதியின்றி பிற நாடுகள் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, அந்த உப்புக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.
- இந்துப்பு, இமாலய உப்பு, பாறை உப்பு என்று அழைக்கப்படும் இந்த உப்பானது, பாகிஸ்தான், இமயமலைத் தொடர் பஞ்சாப் உள்ளிட்ட வடமாநிலங்களில் பாறைகளில் இருந்து வெட்டி எடுக்கப்படுகிறது.
- பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்த இந்த உப்பு, சித்த மருத்துவத்தில் மருந்தாகப் பயன்படுகிறது.
- இந்தியாவின் எதிர்ப்பை மீறி, பாசுமதி அரிசிக்கு பாகிஸ்தான் அரசு கடந்த ஜனவரியில் புவிசார் குறியீடு பெற்றது. இதை எதிர்த்து, ஐரோப்பிய யூனியனில் இந்தியா முறையிட்டுள்ளது. இந்த விவகாரம் முடிவுக்கு வந்ததும், இந்துப்புக்கு புவிசார் குறியீடு பெறும் முயற்சியை பாகிஸ்தான் தொடங்கும்.

## இந்தியா–மாலத்தீவு இடையே ரூ. 362 கோடி ராணுவ ஒப்பந்தம் கையெழுத்து

- கடல்சார் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு அளிக்கும் வகையில் இந்தியா–மாலத்தீவு இடையே ரூ. 362.80 கோடி (5 கோடி டாலர்) மதிப்பீட்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆவார்.
- மாலத்தீவு பாதுகாப்புத் துறை அமைச்சர் மரியா தீதி ஆவார்.

# 1.10 நியமனங்கள்

## அரசு ஆலோசகராக க.சண்முகம் நியமனம்

- ஒய்வு பெற்ற தலைமைச் செயலாளர் க.சண்முகம், தமிழக அரசின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தலைமைச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற க.சண்முகம், பிப்ரவரி 1–ஆம் தேதி முதல் தமிழக அரசின் ஆலோசகராக நியமிக்கப்படுகிறார்.

## புதிய தலைமைச் செயலர் ராஜீவ் ரஞ்சன்

- தமிழக அரசின் 47–ஆவது தலைமைச் செயலாளராக ராஜீவ் ரஞ்சன் பொறுப்பேற்றார்.

## சிபிஐ பொறுப்பு இயக்குநராக பிரவீண் சின்ஹா நியமனம்

- மத்திய புலனாய்வு அமைப்பின் (சிபிஐ) பொறுப்பு இயக்குநராக பிரவீண் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவரின் நியமனத்துக்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையின் நியமனங்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய உயர்நிலை குழு சிபிஐ இயக்குநரை தேர்வு செய்யும்.
- அந்தக் குழு கூடாததால் பணி மூப்பு அடிப்படையில் பொறுப்பு இயக்குநராக பிரவீண் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

**சிபிஐ – மத்திய புலனாய்வு பிரிவு**

- 1963 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- சந்தானம் குழுவின் பரிந்துரையின்படி உருவாக்கப்பட்டது.
- உள்துறை அமைச்சகத்தின் தீர்மானம் மூலம் கொண்டுவரப்பட்டது.
- கேபினட் செயலகத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஓர் அலுவலகமாகும்.
- தேசிய அல்லது உலக அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்களை விசாரிக்கிறது.

**தேர்வுக் குழு**

- பிரதமர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

## மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவராகிறார் கார்கே

- மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த குலாம் நபி ஆசாத்தின் பதவிக் காலம் நிறைவு பெறுவதையடுத்து, அப்பதவிக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே நியமிக்கப்படவுள்ளார். கார்கே, கர்நாடக மாநிலம் குல்பர்காவைச் சேர்ந்தவர்.

## உலக வர்த்தக அமைப்புக்கு முதல் பெண் தலைவர்

- உலக வர்த்தக அமைப்பின் (டபிள்யூடிஓ) முதல் பெண் தலைவராக நிகோசி ஓகோஞ்சோ இவேலா நியமிக்கப்பட்டுள்ளார்.
- இதன் மூலம் டபிள்யூடிஓ தலைவரான ஆப்பிரிக்க கண்டத்தைச் சேர்ந்த முதல் நபர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.
- 164 உறுப்பு நாடுகளைக் கொண்ட உலகின் முதன்மையான வர்த்தக அமைப்பான டபிள்யூடிஓ, நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்பான விதிகளை முடிவு செய்கிறது.

**உலக வணிக அமைப்பு (WTO)**

- தொடக்கம் – 1 ஜனவரி 1995
- தலைமையகம் – ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- தலைவர் – Ngozi Okonjo–Iweala

## அதிபர் பைடனின் சிறப்பு உதவியாளராக இந்தியர் நியமனம்

- தொழிலாளர் விவகாரங்களில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் சிறப்பு உதவியாளராக இந்திய வம்வாளியைச் சேர்ந்த பிரணீதா குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

## சீனாவில் ஐ.நா. ஒருங்கிணைப்பாளராக இந்தியர் பொறுப்பேற்பு

- சீனாவில் ஐ.நா. ஒருங்கிணைப்பாளராக இந்தியாவின் சித்தார்த் சாட்டர்ஜி பொறுப்பேற்றார். அந்நாட்டில் ஐ.நா.வின் 27 அமைப்புகள், அதன் நிதி மற்றும் திட்டங்களை அவர் மேற்பார்வையிடுவார்.

**ஐக்கிய நாடுகள் சபை**

- தொடக்கம் – 24 அக்டோபர் 1945
- தலைவர் – அந்தோனியா குத்தேரசு
- தலைமையகம் – நியூயார்க்

## சர்வதேச சூரிய ஒளி கூட்டமைப்பின் புதிய தலைவர்

- சர்வதேச சூரிய ஒளி கூட்டமைப்பின் இயக்குநராக டாக்டர் அஜய் மாத்தூர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மார்ச் 15, 2021 அன்று பதவியேற்க உள்ளார். உபேந்திர திரிபாதி என்பவர்க்கு பதிலாக பதவியேற்க உள்ளார்.

**சர்வதேச சூரிய ஒளி கூட்டமைப்பு**

- டெல்லியில் நடைபெற்ற இந்தியா–ஆப்பிரிக்கா உச்சி மாநாட்டின்போது சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு என்னும் அமைப்பை அவர் உருவாக்கினார். இதை தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் பாரிஸ் நகரில் கடந்த 2015–ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டிலும் இதே கொள்கையை அவர் முன்வைத்தார்.
- டெல்லி அருகேயுள்ள குர்கான் நகரில் சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பின் தலைமை செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. நிதி ஆணையத்தின் தலைமை பதவிக்கு இந்திய வசம்சாவளியைச் சேர்ந்த பிரீத்தி சின்ஹா நியமனம்

- ஐ.நா. மூலதன மேம்பாட்டு நிதி ஆணையத்தின் நிர்வாக செயலாளராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதலீடு மற்றும் மேம்பாட்டு வங்கியாளரான பிரீத்தி சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.
- கடந்த 1966ம் ஆண்டு அமெரிக்காவின் நியூயார்க் நகரை தலைமையிடமாக கொண்டு தொடங்கப்பட்ட இந்த நிதி அமைப்பு பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் பெண்கள், இளைஞர்கள் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு சிறிய அளவிலான நிதியுதவி வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.

**ஐக்கிய நாடுகள் மூலதன மேம்பாட்டு நிதி**

- 1966 ஆம் ஆண்டு தொடக்கம்
- தனியார் மற்றும் பொதுத்துறைகளுக்கு நிதி உதவி வழங்குகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் தன்னாட்சி அமைப்பாகும்.

## தேசிய தூய்மை பணியாளர் ஆணைய தலைவர் நியமனம்

- தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவராக தமிழகத்தைச் சேர்ந்த ம.வெங்கடேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர்கள் நியமனம்

- தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையர்களாக பி.தனசேகரன், எம்.ஸ்ரீதர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை செயலாளர் பிறப்பித்துள்ளார். அதன்படி, இருவரும் தகவல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தகவல் ஆணையர்கள் இருவரும் பதவியேற்கும் நாளில் இருந்து மூன்று ஆண்டுகள் அல்லது 65 வயது என இரண்டில் எது முதலில் வருகிறதோ அதுவரை பொறுப்பில் இருப்பர்.

**மாநில தகவல் ஆணையம்**

- 2005ஆம் ஆண்டின் தகவல் உரிமைச் சட்டம் கீழ் மாநில அளவில் ஒரு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது.

## இணை தலைமைத் தேர்தல் அதிகாரிகள் நியமனம்

- தமிழகத்தில் தேர்தல் பணிகளை விரைந்து மேற்கொள்ள வதியாக இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், இணை தலைமைத் தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- டி.ஆனந்த்–இணை தலைமைத் தேர்தல் அதிகாரி – தேர்தல் தொடர்பான பணிகள் (வேளாண்மைத் துறை இணைச் செயலாளர்). அஜய் யாதவ் – இணை தலைமைத் தேர்தல் அதிகாரி – தகவல் தொழில்நுட்பம் (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணைச் செயலாளர்).

**தேர்தல் –Election**

- பகுதி – XV – விதி 324 – 329 A

**பதவிக் காலமும், பதவி நீக்கமும்**

- தலைமை மற்றும் பிற தேர்தல் ஆணையாளர்கள், தாங்கள் பதவியேற்ற தேதியிலிருந்து 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை இருப்பர்.
- உச்சநீதிமன்ற நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்வதற்குரிய காரணங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் அடிப்படைகளின் மீது தவிர வேறு எவ்வகையிலும் தலைமைத் தேர்தல் ஆணையரை பதவி நீக்கம் செய்ய முடியாது.

### சென்னை போக்குவரத்துப்பிரிவு முதல் பெண் கூடுதல் ஆணையர் பொறுப்பேற்பு

- சென்னை பெருநகர காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவின் முதல் பெண் கூடுதல் ஆணையராக கே.பவானீஸ்வரி பொறுப்பேற்றார்.

### சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் தலைவர் (AEA)

- சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் தலைவராக ரஃபேல் குரோஸி ஆவார். இதன் தலைமையிடம் ஆஸ்திரியா தலைநகரான வியன்னாவில் உள்ளது. 1957 ஜூலை 29 அன்று தொடங்கப்பட்டது.

### கௌரி அசோகன்

- தமிழ்நாடு மாநில பெண்கள் ஆணையத்தின் தலைவராக கௌரி அசோகன் நியமனம் செய்யப் பட்டுள்ளார். R.ஜமுனா, T.தீபா, B.தாக்ஷாயனி மற்றும் மனிஷா சோர்டியா ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாகவும் செயல்படுவர் என அரசின் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில பெண்கள் ஆணையம்

- 1993ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

### தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் புதிய தலைவர்

- தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராகவிஜய்சம்ப்லாபதவிஏற்றுக்கொண்டார்.

தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம்:

- அரசியலமைப்பின் விதி எண் 338Aன் கீழ் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.
- முன்னர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின ஆணையமாக செயல்பட்ட அமைப்பு 2003ம் ஆண்டு 89வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேசிய பழங்குடியின ஆணையம் மற்றும் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணைம் என இரண்டு அமைப்பாக பிரிக்கப்பட்டது.

### இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் புதிய தலைவராக டாக்டர் சக்திவேல் தேர்வு

- இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (ஃபியோ) புதிய தலைவராக டாக்டர் ஏ.சக்திவேல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- டாக்டர் ஏ.சக்திவேல் தற்போது ஆடைகள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் (ஏஇபிசி) தலைவராக உள்ளார். அத்துடன், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் நிறுவன தலைவராகவும் உள்ளார்.
- நாட்டின் ஜவுளித்துறை வளர்ச்சிக்கு சக்திவேல் ஆற்றிய பங்கை கவுரவிக்கும் விதமாக, மத்திய அரசு கடந்த 2009–ம் ஆண்டு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

### ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பின் தலைவராக இந்திய பொருளாதார நிபுணர் நியமனம்

- ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் நியூயார்க் பிரிவு தலைவராகவும், அந்த அமைப்பின் துணை பொதுச் செயலாளராகவும் இந்திய பொருளாதார நிபுணர் லிகியா நோரோன்ஹாவை ஐ.நா. பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் நியமித்துள்ளார்.

## 1.11 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

### சவரி சவுரா நூற்றாண்டு விழா தொடக்கம்

- சுதந்திரப் போராட்ட காலத்தில் 1922–ம் ஆண்டில் ஒத்துழையாமை போராட்டம் நடந்தது. பிப்ரவரி 4–ம் தேதி உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூர் மாவட்டம் சவரி சவுரா என்ற இடத்தில் போலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் சிலர் உயிரிழந்தனர். இதனால், ஆத்திரமடைந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அப்பகுதியில் இருந்த காவல் நிலையத்துக்க தீ வைத்தனர்.
- சதந்திரப் போராட்ட வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கருதப்படும் இந்த சவுரி சவரா சம்பவத்தின் நூற்றாண்டு விழா கோரக்பூரில் தொடங்கியது. இந்நிகழ்ச்சிகளை பிரதமர் தொடங்கி வைத்தார். அப்போது சிறப்பு தபால் தலையையும் அவர் வெளியிட்டார்.
- 2021 பிப்ரவரி 4ஆம் தேதி முதல் 2022 பிப்ரவரி 4 வரை, உத்திரப் பிரதேச மாநிலத்தின் அனைத்து 75 மாவட்டங்களிலும் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களையும், பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்த அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள்

### வாக்குச் சாவடிக்கு வராமலேயே வாக்களிக்கும் முறை

- தொலை தூரத்தில் இருந்தே தேர்தலில் வாக்கு அளிக்க தொழில்நுட்ப ரீதியான அம்சங்களை இந்திய தேர்தல் ஆணையம் ஆராய்ந்து வருகிறது.
- இதற்காக சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் (ஐஐடி) தேர்தல் ஆணையம் இணைந்து பணியாற்றி வருகிறது.
- சென்னை ஐ.ஐ.டியுடன் இணைந்தது ரிமோட் ஓட்டிங் என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் வாக்குச் சாவடிக்கு வராமல் இருந்த இடத்தில் இருந்தே வாக்கினைப் பதிவு செய்யும் முறையை தேர்தல் ஆணையம் ஆராய்ந்து வருகிறது

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### ஜல் ஜீவன் திட்டம் மூலம் நகர்ப்புறங்களில் குடிநீர் வழங்கல்

- ஜல்ஜீவன் திட்டம் மூலம் நகர்ப்புறங்களில் குழாய் மூலம் குடிநீர் வழங்கல் திட்டம் 20% அதிகரித்து உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- ரூ.2.68 கோடி செலவில் 4,378 நகராட்சிகளுக்கு குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. அம்ருத் திட்டத்துடன் இணைந்து ரூ.264 கோடியில் சுமார் 500 நகரங்களுக்கு குழாய் குடிநீர் இணைப்பு வழங்குவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும்.

### பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி திட்டம்

- பிரதான் மந்திரி கிசான் திட்டம் கடந்த 2019 பிப்ரவரி 24 அன்று மத்திய அரசு அறிமுகம் செய்தது.
- அனைத்து மாநிலங்களும் இத்திட்டத்தில் இணைந்துள்ளன. ஆனால் மேற்கு வங்க மாநிலம் இத்திட்டத்தில் இணையவில்லை.
- மத்திய வேளாண்மை மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.
- ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கும் சிறு, குறு நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.6000 நிதி உதவி இத்திட்டம் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.
- 100% மத்திய அரசால் வழங்கப்படும் நிதி உதவி திட்டமாகும்.

### தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம்

- வீடற்ற நடைபாதை வாசிகளுக்காக தீனதயாள் அந்தியோதியா யோஜனா என்கிற திட்டத்தை (தேசிய நகர்ப்புற வாழ்வாதார இலக்கு) 2014–15 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.
- இதன்படி இவர்களுக்கு சமூக பாதுகாப்பு, குழந்தைகளை பள்ளிகளில் படிக்க வைத்தல், வேலைவாய்ப்பிற்கான அறிவுத்திறன் பயிற்சி போன்றவை மாநில அரசுகள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது.

**தேசிய ஊரக வாழ்வாதார திட்டம்**

- தீனதயாள் அந்தோதய யோஜனா என்ற தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் கடந்த 2014 செப்டம்பர் 25ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம் நகரப்புற மற்றும் கிராமப்புற வறுமையை ஒழிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## மேற்கு வங்கம்: 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், விதவைகளுக்கு ஒய்வூதியம்

- "கிருஷக் பந்து" திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு விவசாயி குடும்பத்துக்கும் வழங்கப்பட்டு வரும் ஆண்டு உதவித் தொகை ரூ.5,000–லிருந்து ரூ.6,000–ஆக உயர்த்தப் படுகிறது.

## கிசான் ரயில்

- வேளாண் பொருட்களை பிற இடங்களுக்குக் கொண்டு செல்லும் வகையில் இயக்கப்படும் பிரத்யேக கிசான் ரயில் சேவையைத் தமிழகத்திலும் தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
- இந்தியாவிலேயெ முதல் முறையாக, விவசாய விளைபொருட்களை மட்டும் கொண்டு செல்லக்கூடிய பிரத்யேக கிசான் ரயில் சேவை, மகாராஷ்டிராவிலிருந்து பிஹாருக்குத் தொடங்கப்பட்டது.
- தற்போது வரை 18 வழித்தடங்களில் கிசான் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

## தூத்துக்குடியில் கிராம கௌசல்யா திட்டம்

- கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த மத்திய அரசு தீனதயாள் உபாத்யாய கிராம கௌசல்யா திட்டத்தை கொண்டு வந்துள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில் தீனதயாள உபாத்யாய கிராம கௌசல்யா திட்டத்தின் கீழ் இதுவரை 300 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தம் 11,655 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## பிரதான் மந்திரி மாத்ரூ வந்தன் யோஜனா

- மகப்பேறு நலஉதவி திட்டம் அல்லது பிரதான் மந்திரி மாத்ரூ வந்தன் யோஜனாவின் கீழ் 1.75 கோடி பெண்கள் 2020 ஆம் ஆண்டு நிதியாண்டில் தேர்ந்துதெடுக்கப்பட்டுள்ளனர்.
- இத்திட்டத்தில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அவர்களுடைய முதல் குழந்தைகளுக்கு மூன்று தவணை மூலம் ரூ.5,000 வழங்கப்படுகிறது.
- இத்திட்டம் டிசம்பர் 31, 2016 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது.

## இந்திரா தனுஷ் 3.0 திட்டம்

- COVID–19 தொற்றுநோய்களின் போது தடுப்பூசிகளை தவறவிட்ட குழந்தைகள் மற்றம் கர்ப்பிணிப் பெண்களை மையமாகக் கொண்டு சுகாதார அமைச்சர் ஹர்ஷ்வர்தன் தீவிரப்படுத்தப்பட்ட மிஷன் இந்திராதனுஷ் 3.0 திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- மிஷன் இந்திராதனுஷ் 3.0 திட்டம் பிப்ரவரி 22 மற்றும் மார்ச் 22 முதல் இரண்டு சுற்றகளைக் கொண்டிருக்கும்.
- நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் மலிவு மற்றும் அணுகக்கூடிய சுகாதார சேவையை வழங்குவதற்காக மிஷன் இந்திரா தனுஷ் 2014இல் தொடங்கப்பட்டது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### அந்தமானுக்கு மெகா சிட்டி திட்டம்

- "லிட்டில் அந்தமானுக்கான நிலையான வளர்ச்சி – தொலைநோக்கு ஆவணம்" நிதி ஆயோக் தயாரித்துள்ளது.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் குழுவில் உள்ள 680 சதுர கி.மீ. உடையக்கூடிய லிட்டில் அந்தமான் தீவின் நிலையான மற்றும் முழுமையான வளர்ச்சிக்கான திட்டம் உருவாக்கி உள்ளது.
- மண்டலம் 1–லிட்டில் அந்தமானின் கிழக்கு கடற்கரையில் 102 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. இது நிதி மாவட்டமாகவும், மத்திய நகரமாகவும் இருக்கும்.
- மண்டலம் 2, – 85 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள காடுகள், ஓய்வு மண்டலம், ஒரு திரைப்பட நகரம், ஒரு குடியிருப்பு மாவட்டம் மற்றும் சுற்றுலா SEZ ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.
- மண்டலம் 3–52 சதுர கி.மீ ஒரு இயற்கை மண்டலமாக இருக்கும்.

### ஸ்ரீவில்லிபுத்தூர் – மேகமலை புலிகள் காப்பகமாக அறிவிப்பு

- மேகமலை வன உயிரின சரணாலயம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியவற்றை இணைத்து தமிழகத்தின் 5–ஆவது புலிகள் காப்பகமாக ஸ்ரீவில்லிபுத்தூர்–மேகமலை புலிகள் காப்பகத்தை அரசு அறிவித்துள்ளது.
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணாலயம், தேனி மாவட்டத்திலுள்ள மேகமலை வன உயிரின சரணாலயம் ஆகியவற்றில் வனத்துறை சார்பில் கடந்த 2017–18 ஆம் ஆண்டு வன விலங்குகள் கணக்கெடுப்பு நடைபெற்றது.
- மேகமலையை அடுத்துள்ள கேரள வனப் பகுதியில் ஏற்கெனவே பெரியாறு புலிகள் காப்பகம் அமைந்துள்ளது.
- தற்போது தமிழகத்தின் 5–ஆவது மற்றும் இந்தியாவின் 51–ஆவது புலிகள் காப்பகமாக ஸ்ரீவில்லிபுத்தூர் – மேகமலை புலிகள் காப்பகம் உதயமாகிறது.

**தமிழ்நாட்டில் உள்ள புலிகள் சரணாலயம்**

| | |
|---|---|
| களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் | திருநெல்வெலி மற்றும் கன்னியாகுமரி |
| ஆனைமலை புலிகள் காப்பகம் | கோவை |
| முடுதுமலை புலிகள் காப்பகம் | நீலகிரி |
| சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் | ஈரோடு (சிறப்பாக மேலாண்மை செய்யப்படும் புலிகள் காப்பகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது) |

- கடந்த 1973 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திராகாந்தி புலிகள் திட்டம் (Project tiger) என்ற முன்னெடுப்பை தொடங்கினார்.
- புலிகள் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாநிலங்களில் ஐந்தாவது இடத்தில் தமிழகம் உள்ளது.

### 'மரம் நகரம்"

- ஹைதராபாத் நகரம் இந்திய நகரங்களிடையே பசுமையான நகரம் என உருவெடுத்துள்ளது. "உலகின் மர நகரங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது". ஆர்பர் தின அறக்கட்டளை மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு இத்தகவலை தெரிவித்துள்ளது.
- உலகின் 23 நாடுகளில் 120 நகரங்கள் கலந்து கொண்டன. இதில் ஹைதராபாத் நகரம் பசுமை நகரம் (மரங்களின் நகரம்) என பெருமையை பெற்றுள்ளது.

## காற்று மாசுபாட்டினால் டெல்லியில் அதிக மக்கள் பாதிப்பு

- கீரீன்ஸ்பீஸ் தென்கிழக்கு ஆசியா காற்று மாசுபாடு காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்படும் செலவுகள் 2020 என்ற ஆய்வை வெளியிட்டுள்ளது.
- இதில் காற்று மாசுபாட்டினால் உயிரிழந்து உள்ளதாக தெரிவித்து உள்ளது. மேலும் ஹைதராபாத், டெல்லி, மும்பை, லக்னோ, சென்னை, பெங்களூரு ஆகிய ஆறு நகரங்களும் மிக அதிகமாக காற்று மாசுபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

Green Peace

- க்ரீன்பீஸ் இந்தியா என்பது உலகளாவிய சுற்றுச்சூழல் குழுவாகும். இது ஒரு இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனமாகும். இது ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆசியா முழுவதும் 56 நாடுகளில் உள்ளது.
- கிரீன்பீஸ், பெங்களூரில் அதன் தலைமையகமும் மற்றும் பிற கிளைகளை டெல்லி, சென்னை, பாட்னாவிலும் கொண்டுள்ளது.

## சிவப்பு காது, ஆமை (Red–eared tortoise)

- இது கேரளாவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- டிராக்கெமிஸ் ஸ்கிரிப்டா எலிகன்ஸ் என்று அறிவியல் பூர்வமாக அழைக்கப்படுகிறது.
- இந்த ஆமை உலகின் மிக மோசமான இனங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

## குளிர்கால மாசு

- குளிர்காலத்தில் நகரங்களில் வெளியாகும் மாசுவின் அளவு மொத்தம் கணக்கிடப்பட்ட 99 நகரங்களில் 43 நகரங்களில் மிகவும் அபாய நிலையில் உள்ளதாக அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) என்ற தன்னார்வ நிறுவனம் தெரிவித்துள்ளது.
- ஊரடங்கு காலத்தில் மாசு வெளியீட்டில் ஏற்பட்ட மாபொரும் முன்னேற்றம் தற்போது பின்னடைவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நுண்துகள்களான 2.5 மற்றும் 10ன் அளவுகள் காற்றில் அதிகரித்துள்ளது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### திருக்குறள் மேற்கோள் காட்டிய நிதி அமைச்சர்

- பட்ஜெட் தாக்கலின் போது திருக்குறளை மேற்கோள் காட்டி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு" – அதிகாரம்: இறைமாட்சி**

- "பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும் காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவனே அரசன்" என்பது மேற்கொண்ட திருக்குறளின் பொருளாகும்.

### முதன் முறையாக டிஜிட்டல் நிதிநிலை அறிக்கை

- பட்ஜெட்டின் தூண்கள்: சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, நிதி மூலதனம் மற்றும் கட்டமைப்பு, நாட்டு மக்களை உள்ளடக்கிய வளர்ச்சி, மனிதவளத்தின் வலிமை, புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி, அரசின் குறைந்தபட்ச தலையீடு மற்றும் அதிகபட்ச நிர்வாகம் ஆகிய 6 தூண்களை அடித்தளமாகக் கொண்டு, வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் மக்களவையில் தாக்கல் செய்தார்..
- சுதந்திர இந்தியாவின் 74 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக காகிதப் பயன்பாடு அல்லாத "டிஜிட்டல்" வடிவிலான பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.
- **மித்ரா திட்டம்:** நாட்டில் 13 துறைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக அறிவிக்கப்பட்டிருந்த உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.1.97 லட்சம் கோடி செலவிடப்படும் என்று மத்திய அரசு பட்ஜெட்டில் தெரிவித்துள்ளது.
- ஜவுளித்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் மெகா முதலீட்டு ஜவுளி பூங்காக்கள் (மித்ரா) என்ற திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தவுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் அடுத்த 3 ஆண்டுகளில் நாட்டில் 7 ஜவுளி பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- **மூலதன செலவு:** அடுத்த நிதியாண்டில் மத்திய அரசின் மூலதன செலவு ஜி.டி.பி–யில் 2.5 சதவீதமாக அதிகரிக்கும் என்று பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது 17 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.

**மத்திய பட்ஜெட்டின் 2021–2022 முக்கிய அம்சம்**

- கரோனா பரவலை தடுக்க ஜிடிபியில் 13 சதவீதம் நிதி ஒதுக்கீடு, கரோனா தடுப்பூசிக்கு ரூ.35,000 கோடி ஒதுக்கீடு.
- ரூ.1.41 லட்சம் கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற தூய்மை இந்தியா திட்டம்.
- ரூ.64,180 கோடியில் பிரதமரின் சுயசார்பு ஆரோக்கிய திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- இந்தியாவில் உலக சுகாதார அமைப்பின் கிளை தொடங்க திட்டம், சுகாதாரத் துறைக்கு கடந்த ஆண்டைவிட கூடுதலாக 137% நிதி அதாவது ரூ.2.23 லட்சம் கோடி ஒதுக்கீடு.
- வருமான வரி விகிதங்கள் மற்றும் கார்ப்பரேட் வரிகளில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.
- 75 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் வருமான வரி கணக்குத் தாக்கல் செய்ய வேண்டியதில்லை.

- பங்குச் சந்தைகளை ஒழுங்குப்படுத்த புதிய சட்டம்.
- 8,500 கி.மீ. நெடுஞ்சாலைகளுக்கு 11,000 கி.மீ தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம். சாலை மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு ரூ.1.18 லட்சம் கோடி ஒதுக்கீடு.
- தமிழகத்தில் ரூ.1.03 லட்சம் கோடியில் சாலை மேம்பாட்டு திட்டங்கள் அமைக்கப்படும்.
- ரயில்வே துறைக்கு ரூ.1.15 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு.
- சென்னையில் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ரூ.63,246 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
- 27 நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்கள் விரிவாக்கம்.
- சிறு குறு தொழில் வளர்ச்சிக்கு ரூ.15,000 கோடி ஒதுக்கீடு.
- அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்யப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.
- புலம்பெயர் தொழிலாளர்களின் தகவல்களை சேகரிக்க தனி இணையதளம். மேலும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மலிவான வாடகையில் வீடுகள் வழங்க திட்டம்.
- 15 ஆயிரம் பள்ளிகளின் தரம் மேம்படுத்தப்படும். 100 புதிய சைனிக் பள்ளிகளும் 750 ஏகலைவா மாதிரி பள்ளிகளும் உருவாக்கப்படும்.
- ஆதிதிராவிட மாணவ–மாணவியரின் நலனுக்காக ரூ.35,219 கோடி நிதி ஒதுக்கப்படும்.
- விவசாயிகளிடமிருந்து ரூ.1.72 லட்சம் கோடி மதிப்பிலான விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்படும்.
- விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்துக்கு ரூ.16.5 லட்சம் கோடி ஒதுக்கீடு.
- வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை தொடரும் என கூறப்பட்டுள்ளது. நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை இரண்டு மடங்கு உயர்த்தப்படும்.

## தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தை மாற்றியமைக்க ரூ.3,000 கோடி

- தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டத்தை மாற்றியமைக்க ரூ.3,000 கோடி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.
- இவர்களின் தொழில் திறமைகளை அதிகரித்து, மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்க ஐக்கிய அரபு அமீரக நாட்டுடன் இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.
- இதே போன்ற கூட்டு பயிற்சி திட்டம் இந்தியா–ஜப்பான் இடையே மேற்கொள்ளப்படவுள்ளது.

## தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (National Research Foundation)

- நாட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் வளர்ச்சிபெற ரூ.50,000 கோடியில் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- கடந்த 2015ஆம் ஆண்டு பட்ஜெட் தாக்கல் செய்த போதே புதிய கல்வி கொள்கையில் இம்முன்னேற்றம் கொண்டு வரப்படும் என தெரிவித்தார்.

## பொதுத்துறை நிறுவனங்களில் தனியார் மய கொள்கை அறிவிப்பு

- சமூக மற்றும் வளர்ச்சி திட்டங்கள் பலவற்றுக்காக, அரசு பொதுத்துறை நிறுவனங்களில், தனியார்மய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தனியார் முதலீட்டை கொண்டுவரவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இது முக்கியம் மற்றும் முக்கியமற்ற துறைகளில் தனியார்மயத்துக்கான தெளிவான திட்டத்தை வழங்கும்.
- இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், பொதுத்துறை வங்கிகள் மற்றும் பொதுத்துறை காப்பீடு நிறுவனங்கள் வரவுள்ளன.
- 2 வகை துறைகள் தனியார் மயமாக்கப்படவுள்ளன:
- முக்கிய துறை: குறைந்த அளவிலான பொதுத்துறை நிறுவனங்கள் மட்டும் இருக்கும் மற்றவை தனியார் மயமாக்கப்படும் அல்லது மற்ற பொதுத்துறை நிறுவனங்கள் இணைக்கப்படும் அல்லது மூடப்படும்.

முக்கிய பிரிவுகளின் கீழ் வரும் துறைகள் :

- அணுசக்தி, விண்வெளி மற்றும் பாதுகாப்பு.
- போக்குவரத்து மற்றும் தொலை தொடர்பு.
- மின்சாரம், பெட்ரோலியம், நிலக்கரி மற்றும் இதர கனிமவளங்கள்.
- வங்கித்துறை, காப்பீடு மற்றும் நிதி சேவைகள்.

முக்கியமற்ற பிரிவு:

- இந்தப் பிரிவில் உள்ள மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்படும், அல்லது மூடப்படும்.

## தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கியின் லாபம் ரூ.180 கோடி

- தூத்துக்குடியை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி (டிஎம்பி) டிசம்பர் மாதத்துடன் முடிவடைந்த மூன்றாவது காலாண்டில் ரூ. 180.81 கோடியை லாபமாக ஈட்டியுள்ளது. 16 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் 509 கிளைகளையும்,48 லட்சம் வாடிக்கையாளர் களையும் கொண்டு வங்கி செயல்பட்டு வருகிறது.
- சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், கல்வி, வீடு கட்டுதல் போன்றவற்றுக்கும், விவசாயத்துக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## RBI – இந்திய ரிசர்வ் வங்கி

- 1934ஆம் ஆண்டு சட்டவிதி படி 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 தேதி அமைக்கப்பட்டது. ஜனவரி 1, 1949 ஆண்டு தேசியமயமாக்கப்பட்டது.
- 1937ல் தலைமை அலுவலகம் கல்கத்தாவில் இருந்து மும்பைக்கு மாற்றியது. முதல் ஆளுநர் Osborne smith. நிர்வாக குழு உறுப்பினர்கள்: ஆளுநர் மற்றும் நான்கு துணை ஆளுநர்
- **பணிகள் :** அந்நிய செலவாணியின் பாதுகாவலன் கடன் அளிப்பை நெறிப்படுத்தும் இந்திய வங்கிகளை நெறிப்படுத்தும்.

## ஜிஎஸ்டி இழப்பீட்டுத் தொகை: தமிழகத்துக்கு ரூ.339 கோடி ஒதுக்கீடு

- ஜிஎஸ்டி இழப்பீட்டுத் தொகையின் 14–வது தவணையாக ரூ.6,000 கோடியை மாநிலங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இதில் தமிழகத்துக்கு ரூ.339.78 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி

- ஜி.எஸ்.டி 101வது திருத்த சட்டம் மூலம் கொண்டு வரப்பட்டது.
- கடந்த 2017 ஜூலை 1 அன்று சரக்கு மற்றும் சேவை வரி அமல்படுத்தப்பட்டது.
- இது ஒரு மறைமுக வரி ஆகும்.
- ஷரத்து 279 (A) குறிக்கிறது.
- இதன் நோக்கம் "ஒரு தேசம் ஒரு வரி" என்பதாகும்.

## ஜிடிபி வளர்ச்சி 10.5% ஆக உயரும்

- வரும் நிதி ஆண்டில் (2021–22) இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) 10.5 சதவீத அளவுக்கு இருக்கும் என ரிசர்வ் வங்கி கணிப்பு வெளியிட்டுள்ளது.
- வரும் நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் இந்தியாவின் ஜிடிபி 8.3 சதவீதம் முதல் 26.2 சதவீதமாக இருக்கும் என கணித்துள்ளது.
- நிதி அமைச்சகம் வளர்ச்சி விகிதம் 11 சதவீதம் என்று கணித்துள்ளது.
- இந்தியாவின் வளர்ச்சி விகிதம் ஆங்கில எழுத்து வி போன்று இருக்கும் என பட்ஜெட்டுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மார்ச்சுடன் முடிவடையும் நிதிஆண்டில் இந்தியாவின் வளர்ச்சிவிகிதம் மைனஸ் 7.7 சதவீதமாக இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் நிதி பற்றாகுறை மிகவும் மோசமாக உள்ளது

- தமிழ்நாட்டின் நிதிப்பற்றாக்குறை மிகவும் மோசமாக உள்ளதாக 15வது நிதிகுழு தெரிவித்துள்ளது.
- 2012–13 ஆம் ஆண்டில் வருவாய் உபரி மாநிலமாக இருந்த தமிழ்நாடு தற்போது வருவாய் பற்றாக்குறை மாநிலமாக உள்ளது என நிதி குழுவின் அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- 2018–19 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கடன் வாங்கும் அளவு அதிகரித்து உள்ளதாக நிதி குழு தெரிவித்துள்ளது.
- தமிழ்நாட்டின் கடன் மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கு இடையிலான வித்தியாசம் 22.6% ஆக உயர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.
- வருவாய் மற்றும் நிதி பற்றாக்குறை அளவு விகிதங்கள் 50%அளவிற்கு உயர்ந்து இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிதி குழு நிதி 280

- 1951ஆம் ஆண்டு நவம்பர் 22ல் உருவாக்கப்பட்டது.
- நிதிக்குழுவானது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே வரி பகிர்ந்தளிப்பதையும் மாநில நிதிக்குழு பரிந்துரைத்த உள்ளூர் அமைப்புகளுக்கான நிதி பங்கீட்டிலும் இந்திய ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்கிறது.
- முதல் நிதி குழு தலைவர் Kshitish Chandra Neogy ஆவார்.

## சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்க 91 லட்சம் கடன் உத்தரவாத ஒப்புதல்

- கரோனா பாதிப்பிலிருந்து சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்க அவசர கால கடன் உதவித் திட்டத்தை (Emergncy Credit Line Gurantee–இசிஎல்ஜி) மத்திய அரசு அறிவித்தது.
- இதன்படி ஜனவரி 25ம் தேதி வரையான காலத்தில் மொத்தம் 91 லட்சம் கடன் உத்திரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அத்துறையின் மத்திய அமைச்சர் நிதிகட்கரி மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் கீழ் மொத்தம் 31,923 சிறு, குறு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இது தவிர ஸ்டார்ட்அப்களை உருவாக்க தனி நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## கிரிப்டோ கரன்சி மசோதாவை விரைவில் கொண்டு வர முடிவு

- கிரிப்டோ கரன்சி மசோதாவை மத்திய அரசு விரைவில் கொண்டு வர உள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் அனுராக் தாக்குர் தெரிவித்தார்.
- 2018–ம் ஆண்டு ரிசர்வ் வங்கி அனைத்து வகையான கிரிப்டோ கரன்சிகளையும் தடை செய்வதாக அறிவித்தது. ஆனால் கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் இந்த தடையை நீக்கியது.
- கிரிப்டோ கரன்சிகளைக் கட்டுப்படுத்த சட்டரீதியான அதிகாரம் ரிசர்வ் வங்கிக்கோ அல்லது செபி அமைப்புக்கோ இல்லை.

## பணவீக்கம் 4.06% ஆக குறைவு

- மத்திய புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில், கடந்த ஜனவரி மாத சில்லறை பணவீக்க விகிதம் 4.06 சதவீதமாக குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.
- இதே நுகர்வோர் விலை குறை குறியீட்டு விகிதம் கடந்த டிசம்பர் 2020ல் 4.59 சதவீதமாகவும் உள்ளது.
- பொருளாதாரத்தில் பண வீக்கம் என்பது சந்தையிலுள்ள பொருட்களின் பொதுவான விலை உயர்வால், அந்த நாட்டின் நாணயத்தின் பொருட்களை வாங்கும் திறன் உள்நாட்டுச் சந்தையில் குறைந்து போவதை குறிக்கும்

**மொத்த விலை குறியீடு (Wholesale Price Index)**

- இந்தியாவில் பணவீக்கம் பற்றி குறிக்கும் குறியீடு ஆகும்.
- வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகர் அலுவலகத்தால் வெளியிடப்படுகிறது.
- உள்நாட்டு அனைத்து சந்தை மதிப்புகளை மதிப்பிடுகிறது.
- அனைத்திந்திய மொத்த விலை குறியீட்டின் அடிப்படை ஆண்டு 2004–2005 இருந்து 2011–12 என மாற்றி 2017ல் திருத்தம் செய்யப்பட்டது.

**நுகர்வோர் விலை குறியீடு (Consumer Price Index)**

- நுகர்வு பொருட்களின் சில்லறை வணிகத்தின் விலைகளைக் (வரி உட்பட) கொண்டு கணக்கிடப்படுகிறது.
- அடிப்படை ஆண்டு 2012 ஆகும்.

**தொழில்துறை உற்பத்தி அட்டவணை (Index of Industrial Production)**

- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான தொழில்துறை உற்பத்தியை குறிக்கிறது.
- மத்திய புள்ளியல் அமைப்பால் மாதந்தோறும் கணக்கிடப்படுகிறது.

## தமிழக அரசின் நீர்பாசனத் திட்டங்களுக்காக நபார்டு வங்கி கடன்

- நீர்பாசனத் திட்டங்களுக்காக தமிழக அரசுக்கு ரூ.2,978 கோடி கடன் உதவியை நபார்டு வங்கி வழங்கியுள்ளது.
- NABARD – (National Bank for Agriculture and Rural Development)

**நபார்டு வங்கி**

- நபார்டு வங்கி 1982 ஆம் ஆண்டு 1981 பாராளுமன்ற சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்ட ரீதியிலான அமைப்பாகும்.
- தலைமையிடம் – மும்பை
- தலைவர் – Dr. G. R. சின்தாலா

**பண மசோதா (Money Bill)**

- பண மசோதா எனப்படும் Money Bill –ஐ லோக்சபாவில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். ராஜ்ய சபாவில் அறிமுகப்படுத்த முடியாது. மேலும், ராஜ்ய சபா 14 நாட்களுக்குள் பண மசோதாவுக்கு ஒப்புதல் வழங்க வேண்டும்.

- பண மசோதாவை அறிமுகப்படுத்துவதற்கு முன் குடியரசுத் தலைவரிடம் முன் அனுமதி பெற வேண்டும். ஆனால், பண மசோதா லோக் சபா, ராஜ்ய சபாவில் நிறைவேறிய பின் குடியரசுத் தலைவர் கட்டாயம் தன் ஒப்புதலை வழங்க வேண்டும். மற்ற மசோதாக்களைப் போல் பண மசோதாவை குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்ப முடியாது. ஒரு மசோதா பண மசோதாவா? இல்லையா? என முடிவு செய்யும் அதிகாரம் கொண்டவர் லோக் சபா சபாநாயகர்.

**மசோதா மூன்று வகைப்படும்**

- பண மசோதா (விதி 110)
- நிதி மசோதா I (விதி 117 (1))
- நிதி மசோதா II (விதி 117 (3))

## செபி அமைப்பு

- இந்தியாவில் பங்குச் சந்தைகள், நிதிச் சந்தைகள் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்தும் கட்டுப்பாட்டு அமைப்பு, மும்பை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இவ்வமைப்பு 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

## நடப்பு ஆண்டில் ஊதிய உயர்வு 7.3 சதவீதமாக இருக்க வாய்ப்பு

- பிரிட்டனின் 'டெலாய்ட் டச்சே தோமட்சு' நிறுவனத்தின் இந்திய பிரிவு, இந்தியாவின் வேலை நிலவரம் மற்றும் ஊதிய உயர்வு தொடர்பாக 400 நிறுவனங்களிடம் கள ஆய்வு மேற்கொண்டது.
- சராசரியாக 7.3 சதவீதம் அளவில் ஊதிய உயர்வு இருக்கும் என்று அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தனியார்மய பரிசீலனையில் ஓரியண்டல், யுனைடெட் இந்தியா நிறுவனங்கள்

- மத்திய அரசின் தனியார் மய பரிசீலனையில் பொதுக் காப்பீட்டு நிறுவனங்களான ஓரியண்டல் இன்சூரன்ஸ், யுனைடெட் இந்தியா ஆகிய இரு நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.
- வரும் 2021–22 ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஏதேனும் ஒரு பொதுக்காப்பீட்டு நிறுவனத்தை தனியார்மயபடுத்தப் போவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## ஸ்டேட் பாங்க் ஆஃப் சிக்கிமை ரிசர்வ் வங்கி கீழ் கொண்டு வந்துள்ளது

- ஸ்டேட் பாங்க் ஆஃப் சிக்கிமை இந்திய ரிசர்வ் வங்கியின் கீழ் அதன் ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளது.
- இப்போது சிக்கிம் வங்கி மற்ற வங்கிகளுடன் இணையாக ரிசர்வ் வங்கியால் கட்டுப்படுத்தப்படும்.
- மாநில அரசுகளும் வங்கியாளராக செயல்பட ரிசர்வ் வங்கி உரிமை வழங்குகிறது.

**இந்திய ரிசர்வ் வங்கி**

- 1934 – ரிசர்வ் வங்கி சட்டம்
- 1935 – இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையிடம் கொல்கத்தாவில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.
- 1949 – தேசிய மயமாக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு 1934 ஆம் ஆண்டின் ரிசர்வ் வங்கி சட்டம் திருத்தப்பட்டது.

## இந்தியப் பொருளாதாரம் 13.7% வளர்ச்சியை எட்டும்: மூடிஸ் கணிப்பு

- இந்தியப் பொருளாதாரம் வரும் 2022–ஆம் நிதியாண்டில் 13.7 சதவீத வளர்ச்சியை எட்டும் என சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான மூடிஸ் தெரிவித்துள்ளது.
- மூடிஸ் நிறுவனத்தின் கடந்தாண்டு நவம்பர் மாத மதிப்பீட்டில் இந்தியப் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 10.6 சதவீதம் அளவுக்கு பின்னடைவைக் காணும் என மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இதன் வளர்ச்சி விகிதம் 2021–22ஆம் நிதியாண்டில் 10.8 சதவீதம் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.
- மேலும், வரும் 2021–22–ஆவது நிதியாண்டில் இந்தப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 13.7 சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மூடிஸ் தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

- இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் அல்லது IRDAI என்பது இந்தியாவில் காப்பீட்டுத் துறையை ஒழுங்குப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் பொறுப்பான உச்ச அமைப்பாகும்.
- இது ஒரு தன்னாட்சி அமைப்பு

- காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் சட்டம் 1999 நாடாளுமன்றத்தினால் நிறுவப்பட்டது. இது ஒரு சட்டரீதியான அமைப்பு.
- ஐ.ஆர்.டி.ஏ.ஐ தலைமையகம் தெலுங்கானாவில் ஹைதராபாத்தில் உள்ளது.
- தலைவர் – சுபாஷ் சந்திர குந்தியா.

## முக்கிய 8 துறைகள் உற்பத்தி 0.1% உயர்வு

- முக்கிய 8 உள்கட்டமைப்பு துறைகளின் உற்பத்தி சென்ற ஜனவரியில் 0.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.
- உரம், உருக்கு மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் உற்பத்தி நடப்பாண்டு ஜனவரியில் வளர்ச்சி கண்டுள்ளது. அதன் காரணமாக, முக்கிய 8 உள்கட்டமைப்பு துறைகளின் உற்பத்தி விகிதம் ஜனவரியில் 0.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே சமயம், 2020 ஜனவரியில் இந்த வளர்ச்சி விகிதமானது 2.2 சதவீதமாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது. நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு பொருள்கள் சிமெண்ட் ஆகியவற்றின் உற்பத்தி ஜனவரியில் எதிர்மறை நிலையைக் கண்டுள்ளது.

எட்டு முக்கிய துறைகள்

- நிலக்கரி, கச்சா எண்ணெய்
- இயற்கை எரிவாயு, சுத்திகரிப்பு பொருள்கள்
- உரம், உருக்கு
- சிமெண்ட், மின்சாரம்

## இந்தியப் பொருளாதாரம் 0.4 சதவீதமாக வளர்ச்சி

- கரோனா தொற்று பரவலுக்கு மத்தியில், 2 காலாண்டுகளாக வீழ்ச்சி கண்டிருந்த பொருளாதாரம், 2020 டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் 0.4 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது.
- கரோனா நோய்த்தொற்று பரவலைத் தடுப்பதற்காக, கடந்த 2020–ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டதால் பொருளாதாரச் செயல்பாடுகள் முடங்கின. இதனால், 2020–21–ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) நாட்டின் பொருளாதாரம் 23.9 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. அதைத் தொடர்ந்து, இரண்டாவது காலாண்டில் (ஜூலை–செப்டம்பர்) வீழ்ச்சியில் இருந்து சற்று மீண்டு, பொருளாதார வளர்ச்சி மைனஸ் 7.5 சதவீதமாக இருந்தது.
- இந்த காலகட்டத்தில் வேளாண் துறை 3.9 சதவீதமும், உற்பத்தித்துறை 1.6 சதவீதமும், கட்டுமானத்துறை 6.2 சதவீதமும், மின்சாரம், எரிவாயு, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட துறைகள் 7.3 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளன. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தின் நாட்டின் பொருளாதார வளர்ச்சி (ஜிடிபி) 3.3 சதவீதமாக இருந்தது என்று அந்த புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'Liink' என்ற பிளாக்செயின் தொழில்நுட்பத்தில் இணைந்த முதல் இந்திய வங்கி

- அமெரிக்காவை அடிப்படையாக இயங்கும் JPMorgan என்ற நிறுவனத்துடன் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதையடுத்து 'Liink' என்ற பிளாக்செயின் பணப் பரிவர்த்தனையில் இணைந்துள்ளது.
- பிளாக்செயின் பரிவர்த்தனையில் இணைந்த முதல் வங்கி ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா ஆகும்.

# 5.அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### காய்கறியில் இருந்து மின்சாரம் தயாரித்தல்

- காய்கறி சந்தையில் இருந்து வீணாகும் காய்கறிகளை கொண்டு ஹைதராபாத்தின் போன்பாலியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் வேளாண்மை சந்தையில் வீணாகும் காய்கறிகளை கொண்டு மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 500 அலகு மின்சாரம் வீணாகும் பழங்கள், காய்கறிகளில் இருந்து தயாரிக்கப்படுகிறது. மேலும் 30 கிலோ பசுமை உரம் தயாரிக்கப்படுகிறது.
- இதையடுத்து ஜனவரி 31 அன்று நடைபெற்ற பிரதமரின் வானொலி நிகழ்ச்சியான மான் கீ பாத்தில் காய்கறியிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுவதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

### பென்னாத்தூர் அரசுப் பள்ளி மாணவர்கள் உருவாக்கிய சிறிய செயற்கைக்கோள்

- மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி. ஜெ. அப்துல் கலாம் நினைவாக ராமேசுவரத்தில் இருந்து சாதனை முயற்சியாக அரசு, தனியார் பள்ளி மாணவர்கள் தயாரிக்கும் மிகச்சிறிய அளவிலான 100 செயற்கைக்கோளள்கள் ஒரே நேரத்தில் வரும் பிப்ரவரி 7–ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டன.
- இதற்காக வேலூர் மாவட்டத்தில் உள்ள பென்னாத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களான டி.தேவேந்திரன் (பிளஸ்1) ஆகியோர் இணைந்து 40 கிராம் எடை கொண்ட மிகச்சிறிய செயற்கைக்கோளை தயாரித்துள்ளனர்.

### பிஎஸ்எல்வி–சி51 ராக்கெட்

- 'பிரேசில் நாட்டின்' அமேசானியா–1" உட்பட 21 செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி–சி51 ராக்கெட் மூலம் வரும் பிப்ரவரி 28ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளன. முதன்மை செயற்கைக்கோளான அமேசானியா–1, 700 கிலோ எடை கொண்டது. இது பிரேசிலின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் வடிவமைக்கப்பட்டது. புவி ஆய்வு மற்றும் அமேசான் காடுகளை கண்காணிப்பது இதன் முக்கிய பணியாகும்.

**இதர முக்கிய செயற்கைக் கோள்கள் இஸ்ரோ தயாரித்த "ஐஎன்எஸ்".**

- இந்திய தனியார் நிறுவனங்களான பிக்ஸல் ஸ்டார்ட் அப் மையத்தின் "ஆனந்த்", ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் "சதீஷ் சாட்", சென்னை ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி, நாக்பூர் ஜி.எச். ரைசோனி பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஸ்ரீசக்தி பொறியியல், தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்கள் கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்ட "யுனிட்டிசாட்".

### ராமேசுவரத்திலிருந்து ராட்சத பலூன்களில் பறக்கவிடப்பட்ட 100 மிகச் சிறிய செயற்கைக்கோள்கள்

- வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த ஆயிரம் பள்ளி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட 100 மிகச் சிறிய செயற்கைக் கோள்கள் ராமேசுவரத்திலிருந்து 2 ராட்சத பலூன்களில் விண்ணில் பறக்கவிடப்பட்டன.
- 12 பிராம் முதல் 60 கிராம் வரை எடை கொண்டதாக 100 விதமான செயற்கைக் கோள்களை அவர்கள் உருவாக்கினர்.

## இதுவரை 33 நாடுகளில் இருந்து 328 செயற்கைக்கோள்களை இந்தியா ஏவியுள்ளது

- 33 நாடுகளில் இருந்து 328 செயற்கைகோள்களை இந்தியா இது வரை ஏவியுள்ளது என்று மக்களவையில் மத்திய அணு சக்தி மற்றும் விண்வெளித் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.
- திறன் வளர்த்தலுக்காகவும், செயற்கைக் கோள்களை ஏவுவதற்காகவும் இந்திய விண்வெளி ஆய்வு மையத்துக்கு 2020-21 நிதியாண்டில் ரூ.900 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ)**

- 1969 இல் உருவாக்கப்பட்டது.
- தலைமையகம் – பெங்களூர்
- தலைவர் – கே. சிவன்.

### பாபா ஏவுகணை: பாகிஸ்தான் சோதனை

- தரையிலிருந்து 450 கி.மீ. தொலைவில் உள்ள தரை இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடிய தனது பாபர் ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதனை செய்தது. 3-ஆவது ஏவுகணை சோதனை இது.
- 290 கி.மீ. தொலைவு வரை தாக்கும் கஜ்னாவி ஏவுகணையையும் 2,750 கி.மீ. தொலைவு இலக்குகளைத் தாக்கக் கூடிய ஷாஹீன்-3 ஏவுகணையை பாகிஸ்தான் சோதித்துப் பார்த்தது.

## செவ்வாய் கிரக ஆய்வு: முதல் படத்தை வெளியிட்டது யுஏஇ

- ஐக்கிய அரபு அமீரக விண்கலம் எடுத்து அனுப்பிய செவ்வாய் கிரகத்தின் (Hope Mission) படத்தை அந்த நாடு முதல்முறையாக வெளியிட்டது.
- செவ்வாய் கிரகத்தின் வடபுலமும் அந்த கிரகத்தின் மிகப் பெரிய எரிமலையான ஒலிம்பஸ் மான்ஸும் இடம் பெற்றுள்ளது

## 'புவன்" இஸ்ரோ நிறுவனம் உருவாக்க உள்ளது

- இஸ்ரோ புவன் என்ற செயற்கைக் கோளை உருவாக்கியுள்ளது. இது கூகுள் எர்த்தை போன்ற 3டி புகைப்பட கருவி சார்ந்தது ஆகும். இதற்காக 'Map My India' உடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**இஸ்ரோ**

- தலைவர் – சிவன்
- தலைமையகம் – பெங்களூரு
- தொடக்கம் – 15 ஆகஸ்ட் 1969

## எய்ட்ஸை குணப்படுத்த மருந்து : சென்னை ஐஐடி விஞ்ஞானிகள் சாதனை

- எய்ட்ஸ்யைக் குணப்படுத்தும் புதிய மருந்தை கண்டுபிடித்து சென்னை உயிரி தொழில்நுட்பத் துறை விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.
- இந்தநிலையில் சென்னை ஐஐடி உயிரி தொழில்நுட்பத் துறை பேராசிரியர் சந்தீப் சேனாபதி தலைமையில் ஆராய்ச்சியாளர்கள் எம்.முகமது ஹாசன், சின்மய்பிந்தி ஆகியோர் அடங்கிய ஆய்வுக் குழு எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்தும் புதிய மருந்தை கண்டுபிடித்துள்ளது.
- மருந்துகளை செயல்படாமல் செய்யும் எய்ட்ஸ் நோய்க்கு அதன் பலவீனமான பகுதியைக் கண்டறிந்து மூலக்கூறு அமைப்பை ஆராய்ந்து அழிக்கக் கூடிய மருந்தை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

## செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது அமெரிக்க ஆய்வுக் கலம்

- அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அனுப்பிய 'பெர்சிவரன்ஸ்" ஆய்வுக் கலம் செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.
- வேற்று கிரகத்துக்கு அனுப்பப்பட்டதிலேயே மிகப் பெரியதும் அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டதுமான அந்த ஆய்வுக் கலம் தரையிறங்கியது. அது "ஜெஸெரோ" பள்ளப்பகுதியில் பதிரமாகத் தரையிறங்கியது.

**இந்திய – அமெரிக்க விஞ்ஞானிக்கு முக்கிய பங்கு**

- நாசாவின் பெர்சிவரன்ஸ் ஆய்வுத் திட்டத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி ஸ்வாதி மோகன் முக்கியப் பங்கு வகிக்கிறார்.
- செவ்வாய் கிரகத்தில் அந்த ஆய்வுக் கலத்தைக் கட்டுப்படுத்தி வழி நடத்தும் பிரிவுக்கு அவர் தலைமை வகிக்கிறார்.
- ஒட்டுமொத்த செவ்வாய் கிரக ஆய்வுக் திட்டம் 2031-ஆம் ஆண்டு நிறைவடையும்.

## சந்திரயான்–3 விண்கலம் 2022–ல் ஏவப்படும்

- சந்திரயான்–3 திட்டப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. அனைத்துவித பரிசோதனைகளையும் முடித்து 2022–ம் ஆண்டில் அது விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

## ராணுவ வீரர்களுக்கான சூரிய மின்னாற்றல் வெப்ப கூடாரம்

- கடுங்குளிர் பிராந்தியமான லடாக்கில் முகாமிட்டுள்ள ராணுவ வீரர்களுக்கு உதவும் வகையில் சூரிய ஒளியில் மின்னுற்பத்தி செய்து கதகதப்பாக வைக்கும் கூடாரத்தை சோனம் வாங்கங் உருவாக்கியுள்ளார்.
- லடாக் போன்ற கடுங்குளிர் பிராந்தியத்தில் முகாமிட்டுள்ள ராணுவ வீரர்களுக்கு உதவும் வகையிலான கூடாரத்தை வடிவமைத்துள்ளார். இது எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் 30 கிலோ எடை கொண்டதாக உள்ளது. இந்தக் கூடாரத்தில் ஒரே நேரத்தில் 10 ராணுவ வீரர்கள் தங்க முடியும். இந்த கூடாரம் உறைபனி நிலை 0 முதல் மைனஸ் 14 டிகிரி வரையிலான குளிர் நிலவும் பிராந்தியங்களில் பயன்படுத்த மிகவும் ஏற்றது.

## இஸ்ரோவுக்காக சேலம் மாணவர்கள் உருவாக்கிய செயற்கைக்கோள்

- இஸ்ரோவுக்காக கோவையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய "ஸ்ரீ சக்தி சாட்" செயற்கைக்கோள் பிப்ரவரி 28–ஆம் தேதி விண்ணில் செலுத்தப்படவுள்ளது. கோவை சின்னியம்பாளையம் ஸ்ரீ சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு, "ஸ்ரீ சக்தி சாட்" என்ற செயற்கைக்கோளை உருவாக்கியுள்ளது.
- ஸ்ரீ சக்தி சாட் 460 கிராம் மட்டுமே எடையுள்ளது. ஆனால், 10 கிலோ வரை எடையுள்ள மற்ற நானோ செயற்கைக்கோள்களைப் போலச் செயல்படும் திறன் கொண்டது. இது பூமியிலிருந்து 500 முதல் 575 கி.மீ. தொலைவில் சுற்றுவதால் லியோ செயற்கைக்கோளாகவும் உள்ளது.

## தேசிய தொலைத்தொடர்பு கடல்வான்வழி வரைப்படம்

- தேசிய பெருங்கடல் இந்திய தகவல் மையம் (INCOIS) அந்தமான் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் உள்ள கடலின் வரைப்படம் உருவாக்க தேசிய தொலைத்தொடர்பு கடல் வான்வழி வரைப்படம் உருவாக்க உள்ளது.

INCOIS

- Indian National Centre for Ocean Information Services மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ளது. 1999ஆம் ஆண்டு தொடக்கம். ஹைதராபாத்தில் அமைந்துள்ளது. இதன் கிளை அமைப்பான Earth System Science Organization டெல்லியில் அமைந்துள்ளது.

## பிஎஸ்எல்வி சி–51 ராக்கெட் விண்ணில் பாய்கிறது

- பிரேசில் நாட்டுக்கு சொந்தமான அமேசானியா–1 உட்பட 19 செயற்கைக்கோள்கள், பிஎஸ்எல்வி சி–51 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட உள்ளன.
- முதன்மை செயற்கைக்கோளான அமேசானியா 637 கிலோ எடையுடையது. இதன் ஆயுட்காலம் 4 ஆண்டுகள். இது பிரேசிலின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் வடிவமைக்கப்பட்டது.
- இது தவிர இஸ்ரோ தயாரித்த சிந்து நேத்ரா, ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் சதிஷ் சாட், சென்னை ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி, நாக்பூர் ஜிஎச் ரைசோனி பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஸ்ரீசக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கூட்டமைப்பில் உருவான யுனிட்டி சாட் ஆகிய 5 செயற்கைக்கோள்கள் இந்த ஏவுதலில் இடம் பெற்றுள்ளன.
- அமெரிக்காவுக்கு சொந்தமான 13 நானோ செயற்கைக்கோள்களும் செலுத்தப்படுகின்றன.

## சூரியக்காற்று காரணமாக செவ்வாய் கிரகம் வளிமண்டலத்தை இழந்திருக்கக்கூடும் – விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

- செவ்வாய் கிரகம் தனது வளி மண்டலத்தை (காற்று மண்டலத்தை) இழக்க காரணமாக, சூரிய காற்று இருந்திருக்கக்கூடும் என்று கம்ப்யூட்டர் அடிப்படையிலான ஆய்வைக் கொண்டு இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.
- இந்த ஆய்வை நடத்திய கொல்கத்தாவை சேர்ந்த இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த கண்டுபிடிப்பானது, பிற கிரகங்களில் உயிரினங்கள் வாழும் வகையில், பாதிப்பை விளைவிக்கும் கதிரியக்க வீச்சுகளை தடுப்பதற்காக பாதுகாப்பான காந்தப்புலம் தேவை என்ற விஞ்ஞானிகளின் நீண்டகால நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# 5.3 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

## COVID19BWM

- மருத்துவக் கழிவுகளை எரித்து அழிக்கும் 8 ஆலைகள் உள்ளன. அவற்றில் தினமும் 42 டன் மருத்துவக் கழிவுகளை எரிக்க முடியும். மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கியுள்ள "COVID19BWM" என்ற செயலியில் மருத்துவக் கழிவுகளை உருவாக்குவோரை பதிவு செய்து, கரோனா மருத்துவக் கழிவுகள் சரியான இடத்துக்கு கொண்டு செல்வது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## Co-WIN App

- கோவின் செயலியின் முதன்மையான நோக்கம் கோவிட்-19 தடுப்பூசி திட்டத்தை கண்காணிக்க அரசுத்துறைகளுக்கு உதவுவது இந்த செயலி மூலமே தடுப்பூசி பெற விரும்புவோர் தங்களின் விவரத்தை பதிவு செய்து கொண்டு விண்ணப்பிக்க முடியும்.
- சுகாதார மற்றும் குடும்பநலத்துறை அமைச்சகம் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இச்செயலியை அறிமுகம் செய்தது.

## கிரண் உதவி எண்

- கடந்த 2020 செப்டம்பரில் அறிமுகம் செய்த கிரண் உதவி எண் 74% பேர் உபயோகித்து உள்ளனர் என சமூக நீதி மற்றும் அதிகாரத்துவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- "மனநல பிரச்சனைகளால் அவதிப்படுவோருக்கு உதவிட கிரண் என்ற பெயரில் 18005990019 என்ற உதவி எண் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது
- மனநல பிரச்சனனைகளால் அவதிப்படுவோருக்கு உதவிட "கிரண்" உதவி எண்ணை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

## சைபர் குற்றங்களை தடுப்பதற்காக மாவட்டம்தோறும் தனி காவல் நிலையம்

- சைபர் குற்றங்களை கண்டறிந்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்காக தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தனிகாவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- சைபர் குற்றங்கள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் கர்நாடகா முதலிடத்திலும், உத்தர பிரதேசம் 2-வது இடத்திலும், தமிழகம் 3-வது இடத்திலும் உள்ளது.
- சைபர் குற்றங்களில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 7 சதவீதம் அதிகரித்து உள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்துள்ளது.
- மேலும், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 7 மாநகரங்களுக்கான தனியாக 7 சைபர் கிரைம் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**மேம்படுத்தப்பட்ட கனிணி வளர்ச்சி மையம்** (CDAC Centre for Development of Advanced computing Technology)

- 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- வெளிநாடுகளில் இருந்து சூப்பர் கம்ப்யூட்டர் கொள்முதல் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஆராய்ச்சி (R&D) அமைப்பு ஆகும்.

## கூ பயன்பாடா (Koo App)

- இந்த "கூ" பயன்பாட்டை கடந்த 2020ஆம் ஆண்டு அப்ரமேயா ராதாகிருஷ்ணா மற்றும் மாயங்க் பிடாவட்கா ஆகியோர் உருவாக்கியுள்ளனர்.
- இது முக்கியமாக பயனர்கள் தங்கள் கருத்து களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்த ஏற்ற ஒரு தளமாகும். இது ட்விட்டரின் இந்தியப் பதிப்பை போலவே இருக்கிறது. தமிழ் & கன்னடம் போன்ற பல்வேறு இந்திய மொழிகளில் இந்த பயன்பாடு கிடைக்கிறது.
- இது தெலுங்கு, கன்னடம், பெங்காலி, இந்தி, மலையாளம், குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, ஒரியா மற்றும் அஸ்ஸாமி போன்ற பிற மொழிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயன்பாடு சமீபத்தில் நடந்த பிரதமர் மோடியின் ஆத்மநிர்பர் ஆப் சேலஞ்சிலும் வென்றுள்ளது.

## e-chhawani portal

- பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் பிப்ரவரி 16, 2021 அன்று புதுதில்லியில் மின்-சவானி என்கிற போர்டல் மற்றும் மொபைல் செயலியை அறிமுகப்படுத்தினார்.

- இதன் மூலம், நாடு முழுவதும் 62 கண்டோன்மென்ட் போர்டுகளில் வசிக்கும் 20 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆன்லைன் குடிமை சேவைகளை வழங்குவதற்காக இந்த போர்ட்டல் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த போர்டலை eGov அறக்கட்டளை, பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL), பொது பாதுகாப்பு தளவாடங்கள் இயக்குநரகம் (DGDE) மற்றும் தேசிய தகவல் மையம் (என்ஜசி) இணைந்து உருவாக்கியுள்ளது.

## ஜம்மு–காஷ்மீரில் ஆர்பிஐ மூலம் ஊதியம் அளிக்கும் திட்டம் தொடக்கம்

- ஜம்மு–காஷ்மீரில் அரசு ஊழியர்களுக்கு நேரடியாக ஊதியத்தொகை செலுத்தும் புதிய திட்டமான "இ–குபேர் பேமண்ட் சிஸ்டம்" (பணப் பரிவர்த்தனை முறை) அறிமுகம் செய்யப் பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே நேரத்தில் 50,000 பரிவர்த்தனைகளை மேற்கொள்ள முடியும்.

## வாட்ஸ் அப் செயலிக்கு மாற்றாக "சன்டேஸ்" அறிமுகம்

- வாட்ஸ் அப் நிறுவனம் தனது பயனாளர்களின் தகவல்களை பிற நிறுவனங்களுக்கு விற்பதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து சன்டேஸ் செயலியை தேசிய தகவல் மையம் (என்ஜசி) வடிவமைத்துள்ளது.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## மத்திய அலுவலகங்களுக்கு மும்மொழி கொள்கை பொருந்தாது

- மத்திய அலுவலகங்களுக்கு மும்மொழி கொள்கை பொருந்தாது என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- அண்மையில் சிவமொகா மாவட்டம் பத்ரவதியில் நடைபெற்ற சிஆர்பிஎஃப் நிகழ்வு குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கேள்விக்கு அமைச்சகம் பதில் தெரிவித்துள்ளது. இவ்விழாவில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழியில் மட்டும் அறிவிப்பு பலன்கள் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.
- மேலும் ஜனவரி 16 அன்று பத்ராவதியில் அதிரடி படையின் 97வது பட்டாலின் பிரிவுக்கு உள்துறை அமித்ஷா அடிக்கல் நாட்டினார்.

### மும்மொழிக் கொள்கை

- 1963ல் மும்மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது. மும்மொழிக் கொள்கை என்பது தாய்மொழி அல்லது வட்டார மொழி (அதாவது மாநில மொழி) ஆங்கிலம் அல்லது வேறொரு அயல்மொழி மற்றொரு இந்திய மொழி கற்பது ஆகும்.

## மக்கள் தொகை கணக்கெடுப்பு 2022–ம் ஆண்டுக்கு ஒத்திவைக்க வாய்ப்பு

- நாட்டின் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியை நடப்பு ஆண்டில் மேற்கொள்ளாமல் 2022ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட வாய்ப்புள்ளதாக மத்திய அரசு தெரிவிக்கின்றன.
- முதல் கட்டமாக கடந்த 2020–ம் ஆண்டு ஏப்ரல் 1–ம் தேதி சில மாநிலங்களில் என்பிஆர் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி நடத்தத் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால், கரோனா வைரஸ் பரவல் காரணமாக அந்தப் பணி நிறுத்தப்பட்டது. முதல் கட்டம் 2020 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை வீடுகளில் கணக்கெடுப்பு, மற்றும் பட்டியலிடுதலும், 2021 பிப்ரவரி 9 முதல் 28–ம் தேதி வரை மக்கள்தொகை கணக்கீடும் நடத்த முடிவு செய்யப்பட்டு இருந்தது.

## சபஹார் துறைமுகத்துக்கு கிரேன்கள்: ஈரானிடம் இந்தியா ஒப்படைப்பு

- துறைமுகங்களில் 140 டன் எடையைக் கையாளும் திறன் கொண்ட கிரேன்களை ஈரானின் சாபஹார் துறைமுக அதிகாரிகளிடம் இந்திய அதிகாரிகள் முறைப்படி ஒப்படைத்தனர்.
- இந்தியா, ஈரான், ஆப்கானிஸ்தான் இடையே வணிகத்தை மேம்படுத்தும் நோக்கில், ஈரானில் சிஸ்தான்–பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள சபஹார் துறைமுகத்தை மூன்று நாடுகளும் இணைந்து கட்டமைத்து வருகின்றன. ஈரானின் சாபஹாரில் உள்ள ஷாஹித் பெஹஷ்டி துறைமுகத்தில் பகுதி–1 திட்டத்தின் கீழ் 140 டன் எடையை கையாளும் இரண்டு கிரேன்களை வெளியுறவுத் துறை அமைச்சகம் ஒப்படைத்தது.

## 'வாசுகி" என்று பெயரிடப்பட்ட மிகவும் நீளமான சரக்கு ரயில்

- தென்கிழக்கு மத்திய ரயில்வே மண்டலத்தில் "வாசுகி" என்று பெயரிடப்பட்ட மிகவும் நீளமான சரக்கு ரயில் வெற்றிகரமாக இயக்கப்பட்டது. இந்த சரக்கு ரயில் 3.5 கி.மீ. தூரத்துக்கு (Bhilai to Korba) இணைக்கப்பட்டது.

## புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக ஒரே நாடு ஒரே ரேஷன் திட்டம் அமல்

- புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டத்தின் கீழ் ரேஷன் பொருட்களை வாங்க அனுமதிக்கப்படுவார்கள் என்று மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டம் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 4 தொழிலாளர் சட்டங்கள் அமல்படுத்தப்படும்.
- உலக அளவில் முதன்முறையாக ஒப்பந்த மற்றும் நடைபாதை தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்புக்கான பலன்கள் விரிவுப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## உத்தரகாண்டில் தாவரவியல் பூங்கா

- உத்தரகாண்ட் மாநில அரசு சிவாலிக் பகுதியில் உள்ள 210 வகையான தாவரங்களை பாதுகாக்க 'Shivalik Arboretum' என்ற பெயரில் தாவரவியல் பூங்காவை அமைக்க உள்ளது.

## இந்தியாவில் அதிக அளவிலான புதிய தொழுநோயாளிகள் எண்ணிக்கை

- இந்தியாவில் அதிக அளவிலான புதிய தொழுநோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. பிரேசில் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் அடுத்து அதிக அளவில் தொழு நோயாளிகள் எண்ணிக்கை இந்தியாவில் அதிகம் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## புறஊதா கதிர்களை பயன்படுத்தி ரயில்களை சுத்தம் செய்த முதல் மெட்ரோ ரயில் நிலையம்

- புற ஊதா கதிர்களை பயன்படுத்தி ரயில் நிலையங்களை சுத்தம் செய்த நாட்டின் முதல் மெட்ரோ ரயில் நிலையம் லக்னோ மெட்ரோ ரயில் நிலையம் ஆகும்.
- நியூயார்க் நகர மெட்ரோ நிலையத்தில் பயன்படுத்தியதை அடிப்படையாக கொண்டு லக்னோ மெட்ரோ ரயில் நிலையத்தை புற ஊதா கதிர் விளக்குகளை கொண்டு ரயில் நிலையங்களை சுத்தம் செய்தனர்.
- இதற்கு முன்பு அனைத்து ரயில் பெட்டிகளை ஏழு நிமிடத்தில் சுத்தம் செய்ததற்காக டி.ஆ.ஆர்.ஓ அமைப்புக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## ஊக்கமருந்து எதிர்ப்புக்கான குறிப்புப் பொருள் அறிமுகம்

- மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஸ்ரீ கிரன் ரிஜிஜு ஊக்கமருந்து எதிர்ப்புத் துளையில் ரசாயன பரிசோதனையில் பயன்படுத்த ஒரு திருப்புமுனை குறிப்புப் பொருளை (Reference Material) அறிமுகப்படுத்தினார்.
- இந்த ஊக்கமருந்து எதிர்ப்பு குறிப்பு பொருள் (ஆர்.எம்) குவாஹாத்தியின் தேசிய டோப் சோதனை ஆய்வகம் (என்.டி.டி.எல்) மற்றும் தேசிய மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (என்.ஐ.பி.ஆர்) ஆகியவற்றின் கூட்டு முயற்சிகளால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- இந்த குறிப்பு பொருள் (ஆர்.எம்) உலகளவில் அரிதாக கிடைக்கக்கூடிய ஆர்.எம்.களில் ஒன்றாக என்.டி.டி.எல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 8வது இந்தியா சர்வதேச பட்டு கண்காட்சி

- 8வது இந்தியா சர்வதேச பட்டு கண்காட்சியை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி திறந்து வைத்தார். இந்த கண்காட்சி இந்தியாவின் மிகப்பெரிய பட்டு கண்காட்சியாக கருதப்படுகிறது.
- மல்பெரி, எரி, டாசர் மற்றும் முகா ஆகிய நான்கு முக்கிய வகை பட்டுக்களை உற்பத்தி செய்யும் ஒரே நாடு இந்தியா ஆகும்.

## கேரளத்தின் முதல் தாய்ப்பால் வங்கி

- கேரளத்தின் முதல் தாய்ப்பால் வங்கியை, எர்ணாகுளம் பொது மருத்துவமனையில் சுகாதாரத் துறை அமைச்சர் கே.கே.சைலஜா பிப்ரவரி 5–ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
- கொச்சி ரோட்டரி கிளப் உதவியுடன் உடல்நலக் குறைவாலோ, போதிய பால் சுரக்காததாலோ தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைப்பதை உறுதி செய்யும்.
- இந்தியாவில் தாய்ப்பால் வங்கி என்ற திட்டம் 32 ஆண்டுகளுக்கு முன்னரே வந்துவிட்டதாகவும் கேரளத்தில் இப்போதுதான் முதல்முறையாகத் தொடங்கப்படுகிறது.

## டிஜிட்டல் சுகாதாரத் திட்டம்

- கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தனது சுதந்திர தின உரையில் தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தை அறிவித்தார். அந்த திட்டத்தின்படி, குடிமக்கள் ஒவ்வொருக்கும் டிஜிட்டல் சுகாதார அட்டை இலவசமாக வழங்கப்படும். அந்த அட்டையில், சம்பந்தப்பட்ட நபரின் சுகாதார விவரங்கள் டிஜிட்டல் வடிவில் இடம் பெற்றிருக்கும்.
- இந்த திட்டம், சோதனை முறையில் அந்தமான்–நிகோபார் தீவுகள், சண்டீகர், தத்ரா நகர் ஹவேலி, டாமன் மற்றும் டையூ, லடாக், லட்சம் தீவுகள், புதுச்சேரி ஆகிய யூனியன் பிரதேசங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, கடந்த ஜனவரி 21–ஆம் தேதி வரை, 6,30,478 சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 13–வது சர்வதேச விமான கண்காட்சி தொடக்கம்

- மத்திய அரசின் பாதுகாப்புத் துறை சார்பில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும்

"ஏரோ இந்தியா' சர்வதேச விமான கண்காட்சி பெங்களூரு எலஹங்கா விமானப்படை தளத்தில் நடைபெற்றது. கர்நாடக முதல்வர் எடியூரப்பா தலைமையில் நடக்கும் தொடக்க விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சிறப்பு விருந்தினராக பங்கேற்று 13–வது "ஏரோ இந்தியா" கண்காட்சியை தொடங்கி வைத்தார்.

## சென்னை ஐஐடியின் "சாராங்" கலைவிழா தொடக்கம்

- சென்னை ஐஐடியின் "சாரங்" கலைவிழா நடைபெற்றது. கரோனா சூழல் காரணமாக முதல்முறையாக இந்த ஆண்டு இணையவழியில் இவ்விழா நடைபெற்றது. கல்லூரி மாணவர்களின் திறமைகள், படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் "சாரங்" என்ற கலைவிழாவை சென்னை ஐஐடி ஆண்டுதோறும் நடத்துகிறது.

## 2020–ம் ஆண்டின் சிறந்த ஆக்ஸ்போர்ட் இந்தி வார்த்தையாக "ஆத்மநிர்பார்" தேர்வு

- கடந்த 2020–ம் ஆண்டின் சிறந்த ஆக்ஸ்போர்ட் இந்தி வார்த்தையாக ஆத்மநிர்பார் பாரத் என்ற வார்த்தை தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- கரோனா வைரஸ் பெருந்தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளை சமாளிக்க, பிரதமர் மோடி ஆத்மநிர்பார் பாரத் (தற்சார்பு இந்தியா) என்னும் திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த திட்டம் அறிமுகம் செய்யப்படுவதாக அறிவித்தார்.
- கடந்த 2020–ம் ஆண்டின் மனநிலை, சமூகப் பிணைப்பு, கலாச்சார முக்கியத்துவம் ஆகியவற்றின் வெளிப்பாடாக இந்த ஆத்மநிர்பார் பாரத் வார்த்தை அமைந்துள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன்பு, ஆதார் (2017), நாரி சக்தி (2018), சம்விதான் (2019) ஆகிய இந்தி வார்த்தைகள் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள மொழிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய வேளாண் சந்தை விரிவடைகிறது

- விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் "இ–நாம்" எனப்படும் தேசிய வேளாண் சந்தை தளம் கூடுதலாக 1,000 மண்டிகளுடன் விரிவடைகிறது.
- விவசாயிகள் டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் பல்வேறு சந்தைகள் மற்றும் வாங்குவோரை சென்றடைவதற்காக தொடங்கப்பட்ட "இ–நாம்" எனப்படும் தேசிய வேளாண் சந்தை, "ஒரே நாடு ஒரு சந்தை" என்ற லட்சியத்தை அடைய உதவி வருகிறது.
- நாட்டில் 18 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் உள்ள 1,000 சந்தைகள் இதுவரை இ–நாமில் இணைந்துள்ளன.

## நீதி ஆயோக் நிர்வாக கவுன்சில் கூட்டம்

- பிரதமர் மோடி தலைமையில் வரும் 20–ஆம் தேதிநீதி ஆயோக் நிர்வாக கவுன்சில் கூட்டம் நடைபெறவுள்ளது.
- "நீதி ஆயோக் அமைப்பின் தலைவராக பிரதமர் மோடி பதவி வகிக்கிறார்.
- இந்தக் கூட்டத்தில் மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், மூத்த அரசு அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.
- இதில் சுகாதாரம், பொருளாதாரம், தொழிலாளர் நலன் உள்ளிட்ட துறைகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளது.
- நீதி ஆயோக் நிர்வாக கவுன்சில் கூட்டம் முதல் முறையாக கடந்த 2015–ஆம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் தேதி நடைபெற்றது.

## அப்போலோ மருத்துவமனை கை அச்சு பிரச்சாரத்தை தொடங்கியது

- உலக புற்றுநோய் தினத்தை (பிப்ரவரி 4) முன்னிட்டு அப்பல்லோ மருத்துவமனை கை அச்சு (Hand print canpaign) பிரச்சாரத்தை நடத்தியது. சுகாதார பணியாளர்கள், புற்று நோயிலிருந்து மீண்டுவந்தவர்கள், கோவிட்–19 உடன் போராடியவர்கள், ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் 'The (hand Print Canpaign) ஏற்பாடு செய்யப்பட்டது.

## இடி, மின்னலை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி நிலையம்

- நாட்டிலேயே முதன் முறையாக இடி, மின்னலை ஆய்வு செய்யும் ஆராய்ச்சி நிலையம் ஒடிஸா மாநிலம், பாலேசுவரத்தில் அமைய உள்ளது.
- மின்னலால் உயிரிழப்போரின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில் இந்த ஆராய்ச்சி நிலையம்

அமைக்கப்பட உள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

- இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் மிருத்யுஞ்ஜய் மொஹபத்ரா, "இந்தியாவின் சூறாவளி மனிதர்" என்று அழைக்கப்படுபவர்.
- பருவமழை ஆராய்ச்சி மையம் விரைவில் மத்திய பிரதேச மாநிலம், போபாலில் அமைக்கப்பட உள்ளது.

## 22 உணவுப் பூங்காக்கள் செயல்பாட்டில் உள்ளன

- நாடு முழுவதும் 37 உணவுப் பூங்காக்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் 22 இடங்களில் உள்ள உணவுப் பூங்காக்கள் செயல்பட்டு வருவதாக உணவு பதப்படுத்துதல் துறை இணை அமைச்சர் ராமேஸ்வர் தேலி தெரிவித்தார்.
- மெகா உணவுப் பூங்கா திட்டத்தின் கீழ் 42 பூங்காக்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.
- அஸ்ஸாம், பஞ்சாப், ஒடிஸா, மிஸோரம், மகராஷ்டிரம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் மெகா உணவுப் பூங்காக்கள் செயல்பட்டு வருகின்றன.
- மேகாலயம் மற்றும் தமிழகத்தில் இரு பூங்காக்கள் அமைக்க கொள்கை ரீதியான ஒப்புதலையும் அமைச்சகம் வழங்கியுள்ளது.
- தற்போது வரை தெலங்கானா உள்பட பிற மாநிலங்களில் புதிய மெகா உணவுப் பூங்காக்களை நிறுவுவதற்கான எந்தத் திட்டமும் இல்லை என்றால் அவர்.
- வேளாண் பொருள்களின் கொள்முதல், பதப்படுத்துதல், சேமிப்பு, சந்தைப்படுத்துதலுக்கான அமைப்பு உணவுப் பூங்கா எனப்படுகிறது.

## ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம்

- 2018–19 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் எவ்வளவு நன்கொடைகள் பெற்றுள்ளது என்ற தகவலை ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ஏடிஆர்) திரட்டி உள்ளது.
- தேர்தல் ஆணையத்தில் அரசியல் கட்சிகள் சமர்பித்த நன்கொடை கணக்குகள் அடிப்படையில் இந்த தகவல்கள் திரட்டப்பட்டு உள்ளது.
- இது போன்ற நன்கொடைகளில் தேசிய கட்சிகள் மொத்தம் ரூ.1.951.66 கோடியை கணக்கு காட்டி உள்ளது. இது 78 சதவிகிதம் அதிகமாகும்.
- இந்த கட்சிகளின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இது 2010ல் 1,112 ஆக இருந்து 2019 ல் 2,301 ஆக அதிகரித்துள்ளது.
- இந்திய தேர்தல் ஆணையத்தில் 2,360 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 2,301 அல்லது 97.50% அங்கீகரிக்கப்படாதவை.
- ஏடிஆர் பகுப்பாய்வு செய்த அறிக்கைகள் 2018–19ஆம் ஆண்டில் ₹65.45 கோடி மதிப்புள்ள 6,860 நன்கொடைகளையும் 2017–18ஆம் ஆண்டில் 6,138 நன்கொடைகள் 24.6 கோடியையும் அறிவித்தன.
- உத்தரபிரதேசத்தின் அப்னா தேஷ் கட்சி இந்த நிதியாண்டுகளுக்கும் மிக உயர்ந்த நன்கொடைகளை 65.63 கோடி பெற்று உள்ளது.

**ஜனநாயக சீர்திருத்த சங்கம்**

- தொடக்கம் – 1999
- நிறுவனர் – ராஜேஸ் அகர்வால், அஜித் ராணடே, பிரிஜ் கோதாரி
- ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்பது அரசு சாரா அமைப்பாகும். இது தேர்தல் மற்றும் அரசியல் சீர்திருத்தங்களில் செயல்படுகிறது.

## பொது நூலக இயக்கம்

- பொது நூலக இயக்கத்தால் ஜார்கண்ட் மாநிலம் ஜம்தாரா மாவட்டத்தில் பல மாணவர்கள் கல்வி கற்க உதவிகரமாக உள்ளது.
- பொது நலக இயக்கம் 19ம் நூற்றாண்டு இடையில் இங்கிலாந்து நாட்டில் உதயமானது. ஒவ்வொரு தனிநபரிடம் நூலக அறிவு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியது.

## மடிக்கேரியில் ஜெனரல் திம்மையா அருங்காட்சியகம்

- மடிக்கேரியில் ஜெனரல் திம்மையா அருங்காட்சியகத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- 1957 முதல் 1961–ஆம் ஆண்டு வரையில் இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியாக விளங்கியவர் கே.எஸ்.திம்மையா.
- இவரது சொந்த ஊரான குடகு மாவட்டம், மடிக்கேரியில் அமைந்துள்ள அவரது பூர்வீக இல்லம் புதுப்பிக்கப்பட்டு அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.

## உணவுகளில் டிரான்ஸ் கொழுப்புகள் குறைக்க விதிகள் திருத்தம்

- உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் (FSSAI) உணவுகளில் டிரான்ஸ் கொழுப்புகள் அளவுகள் அதிகரிக்கும் பொருள்கள் பயன்படுத்துவதை குறைக்க வேண்டுமென தனது விதிகளை திருத்தம் செய்துள்ளது.
- உலகளவில் உணவுகளில் டிரான்ஸ் கொழுப்புகளை உருவாக்கும் அமிலத்தின் பயன்பாட்டை 2% 2023 க்குள் குறைக்க உலக சுகாதார அமைப்பு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI)**

- தலைமையகம் – டெல்லி
- தொடக்கம் – 2008
- சட்டம் – 2006
- தலைவர் – அருண் சின்ஹா
- டிரான்ஸ் கொழுப்பு (Trans Fatty acids) உடலில் நல்ல கொழுப்பின் அளவை குறைத்து கெட்ட கொழுப்பின் அளவை அதிகரிக்கிறது.

## உடான் திட்டத்தின் கீழ் 1,000 விமான வழித்தடங்கள்

- உடான் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 1,000 விமான வழித்தடங்களை கொண்டு வருவதே அரசின் இலக்காக உள்ளது என உள்நாட்டு போக்குவரத்துத் துறையின் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்தார்.
- உடான் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் இல்லாத மற்றும் பயன்பாட்டில் உள்ள 100 விமான நிலையங்களை இயக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## "அஸ்ஸாம் மாலா" திட்டம்

**அசாம்**

- முக்கிய தேசிய பூங்காக்கள் – காசிரங்கா, மனாஸ், திப்பூர், நாமேரி, ஓராங், கங்கோவா
- சோனித்பூர் மாவட்டம் தெகியாஜூலி நகரில் மாநில நெடுஞ்சாலைகளை தரம் உயர்த்தும் "அஸ்ஸாம் மாலா" திட்டத்தை தொடங்கிவைத்தார்.

## குருபா சமூகம்

- கர்நாடகாவின் குருபா சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியினர் (ST) அந்தஸ்து வழங்க வேண்டும் என போராட்டம் நடத்தினர் அதில் மூன்று அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

**குருபா சமூகம்**

- குருபா (Kuruba) என்றால் "போர்வீரன்" என்று பொருள். இவர்கள் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர். விவசாயம் செய்வது இவர்களின் தொழில் ஆகும்

## உத்தரகண்டில் பனிப்பாறை உடைந்து வெள்ளப்பெருக்கு

- கங்கையின் கிளை நதிகளான தௌலி கங்கை ரிஷி கங்கை அலகநந்தாவிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
- இதன் காரணமாக, அந்த ஆறுகளின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த தேசிய அனல்மின் கழகத்தின் **தபோவன்விஷ்ணுகட் நீர்மின் திட்டம் மற்றும் ரிஷி கங்கை நீர்மின் திட்டம்** ஆகிய இரு மின் திட்ட கட்டமைப்புகளும் முழுமையாக சேதமடைந்தன.
- நந்தா தேவி 7,816 மீட்டர் உயர கடல் மட்டத்திலருந்து உத்தரகண்ட் மாநிலத்தின் மிக உயர்ந்த நிலப்பரப்பாகும்.
- ஷார்தா சாகர் நீர்த்தேக்கம் 190 மீட்டர் உயரத்துடன் உத்தரகண்ட் மாநிலத்தின் மிகக் குறைந்த நிலப்பரப்பாகும்.

## மும்பையில் வீரசிவாஜி சிலையை காண கடலுக்கு அடியில் மெட்ரோ ரயில் சேவை

- மும்பையில் அமையவுள்ள பிரம்மாண்ட வீர சிவாஜி சிலையை சுற்றுலாப் பயணிகள் காண வசதியாக கடலுக்கு அடியில் மெட்ரோ ரயில் அமைக்க மகாராஷ்டிரா அரசு திட்டமிட்டுள்ளது.
- மும்பை மரைன் டிரைவ் கடற்கரையில் இருந்து ஒன்றரை கிலோ மீட்டர் உள்ளே அரபிக் கடலில், மகாராஷ்டிரா அரசு சார்பில், மகாராஷ்டிர மன்னர் சத்ரபதி வீர சிவாஜிக்கு பிரம்மாண்டமான நினைவிடம் அமைக்கப்படுகிறது.

## காரைக்காலில் ரூ. 2,000 கோடியில் "மெடி சிட்டி"

- காரைக்காலில் ரூ.2,000 கோடி செலவில் "மெடி சிட்டி" அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- அதில் அலோபதி, சித்தா, ஹோமியோபதி, ஆயுர்வேதா, யுனானி மருத்துவம், யோகா, இயற்கை வைத்தியம், மூலிகைச் செடிகள் வளர்ப்பு என்ற திட்டமாகும்.

- சிங்கப்பூர் துபை, அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்த இசைந்துள்ளன.

## நீடித்த நிலையான மேம்பாடு

- இப்போதுள்ள சந்ததியினர்க்கு மட்டுமின்றி, எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்.
- மேல்தட்டு நீடித்த நிலையான வளர்ச்சியாகும்.
- வரும் 2030–ஆம் ஆண்டுக்குள் அனைத்து நிலை மக்களுக்கும் சமத்துவமான சுகாதார வசதிகளைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான 3–வது இலக்கு
- 2030க்குள் 17 குறிக்கோள்களைச் சாதிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை (UNO) மூன்று இணைந்துபோகிய கொள்கைகளை நிறுவியிருக்கிறது.
- உலகப்பொதுமை (Universality)
- ஒருங்கிணைப்பு (Integration)
- மாற்றம் (Transformation)

## சர்வதேச தரவரிசை பட்டியலில் 5 இந்திய கல்வி நிறுவனங்கள்

- சர்வதேச அளவில் மேலாண்மை படிப்புகளுக்காக சிறந்த கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியலில் 5 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன.
- அமெரிக்காவை மையமாக கொண்டு இயங்கும் "பைனான்சியல் டைம்ஸ்" என்ற நிறுவனம் சர்வதேச அளவில் முதுநிலை மேலாண்மை படிப்பான எம்பிஏ–வை வழங்கும் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளின் தரவுகளை ஆய்வு செய்து, அதில் சிறந்த 100 கல்வி நிறுவனங்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களான பெங்களூரு இந்திய மேலாண்மை நிறுவனம் (ஐஐஎம்பி) 35–வது இடத்தையும், ஐஐஎம் கொல்கத்தா 44–வது இடத்தையும், ஐஐஎம் அகமதாபாத் 48–வது இடத்தையும் பிடித்துள்ளன. மேலும், ஐஐஎம் இந்தூர் 94–வது இடத்தை பிடித்து முதல் முறையாக பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

## ஊரடங்கின்போது பெண்கள் உதவி எண்ணுக்கு 2.47 லட்சம் அழைப்புகள்

- கரோனா ஊரடங்கு காலத்தில் பெண்களுக்கான உதவி எண்ணுக்கு 2.47 லட்சம் அழைப்புகள் வந்ததாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கான உதவி எண்களை ஒருங்கிணைக்கும் (181) திட்டம் 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைமுறையில் உள்ளன.

## 'கூழாங்கல்" நாயகனின் முதல் நாவல்

- நெதர்லாந்து நாட்டில் நடந்த 50–வது சர்வதேசத் திரைப்பட விழாவில் டைகர் விருதைப் பெற்றிருக்கிறது 'கூழாங்கல்' திரைப்படம். அவ்விருதைப் பெறும் தமிழின் முதல் திரைப்படம், இரண்டாவது இந்தியத் திரைப்படம். இந்த ஆண்டு திரையிடலுக்குத் தேர்வான ஒரே இந்தியத் திரைப்படம் என்ற பெருமைகளையும் பெற்றுள்ளது.

## நாடாளுமன்றத்துக்கு அடிக்கல் நாட்டி 100 ஆண்டுகள் நிறைவு

- தில்லியிலுள்ள நாடாளுமன்றத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.
- கடந்த 1921–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ஆம் தேதி பிரிட்டன் இளவரசர் ஆர்தரால் நாடாளுமன்றத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- 6 ஆண்டுகள் கட்டப்பட்ட நாடாளுமன்றம், 1927–ஆம் ஆண்டில் இந்தியாவுக்கான அப்போதைய வைஸ்ராய் இர்வின் பிரபுவால் திறந்து வைக்கப்பட்டது.
- எதிர்கொண்ட தாக்குதல்கள்: பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் கடந்த 1929–ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் வெடிகுண்டு வீசினார். அதற்காகக் கைது செய்யப்பட்ட அவர், 1931–ஆம் ஆண்டில் தூக்கிலிடப்பட்டார்.

## முல்லைப் பெரியாறு அணை

- முல்லைப் பெரியாறு அணையின் நீர் கொள்ளளவைக் குறைக்க உத்தரவிடக் கோரி தாக்கலான இடைக்கால மனுவை உச்சநீதிமன்றம் முடித்துவைத்தது.

### முல்லைப் பெரியாறு அணை தீர்ப்பு

- முல்லைப் பெரியாறு அணை பென்னிகுவிக் கட்டி முடித்தார். முல்லைப் பெரியாறு அணையானது கேரள மாநிலம் இடுக்கியில் 1887 முதல் 1895 வரையிலான காலகட்டத்தில் அணை கட்டப்பட்டது.
- அணையின் கிழக்கு பகுதியில் உள்ள தமிழகத்தின் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீர் ஆதாரமாகும்.

- பெரியாரின் முக்கிய துணை நதிகள் முதிராபுஷா, முல்லையார், செருத்தோனி, பெரிஞ்சன்கூட்டி. கேரள மாநிலத்தில் 244 கி.மீ மிக நீளமான நதியாகும்.

## உங்கள் நாட்டினை பாருங்கள் என்ற பெயரில் இணையதளம் கருத்தரங்கம்

- சுற்றுலாத்துறை அமைச்சகம் Dekho Apna Desh' என்ற பெயரில் 76வது இணையத்தள கருத்தரங்கை நடத்தியது.
- Vocal for Local: Empowering Local communities–Gujarat Experience' என்ற பெயரில் இந்த இணையத்தளத்தை நடத்தியது.

## கேரளத்தில் பெட்ரோ கெமிக்கல் நிறுவனம் நாட்டுக்கு அர்ப்பணிப்பு

- கேரள மாநிலம், கொச்சியில் ரூ.6,000 கோடியில் கட்டப்பட்டுள்ள பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் பெட்ரோ கெமிக்கல் உற்பத்தி வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- **படகுசேவை தொடக்கம்:** வில்லிங்டன்–போல்காட்டி இடையே பயணிகள் படகு சேவையையும் பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- **சர்வதேசகப்பல்முனையம்:** கொச்சிதுறைமுகத்தில் சர்வதேச கப்பல் முனையம், கடல்சார் பொறியியில் கல்வி நிறுவனம் ஆகியவற்றையும் பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- **மீனவர்களுக்கான திட்டங்கள்:** மீனவள சமுதாயத்தினரின் தேவையை பூர்த்தி செய்வதற்காக, பிரதமரின் மீன்வளத் திட்டம் (பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பட யோஜ்னா) தொடங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடன் அட்டை திட்டத்தில் மீனவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## கர்நாடகாவில் "டெஸ்லா"

- டெஸ்லா நிறுவனத்தின் தயாரிப்பு ஆலை கர்நாடக மாநிலத்தில் அமைய இருப்பதாக முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார்.
- அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டது டெஸ்லா நிறுவனம்.

## நாட்டின் முதல் மின் அமைச்சரவை

- இமாச்சலப் பிரதேச அமைச்சரவையின் மொத்த செயல்பாட்டையும் காகிதமற்ற பணியாக அந்த மாநில அரசு மாற்றியது. இதன் மூலம் நாட்டின் முதல் மின் அமைச்சரவை என்கிற பெருமையை இமாச்சலப் பிரதேச அமைச்சரவை பெற்றது.

## நாஸ்காம் மாநாடு பிரதமர் உரை

- மென்பொருள் நிறுவன சங்கங்களின் தேசிய கூட்டமைப்பான "நாஸ்காம்" மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.
- பிப்ரவரி 17 முதல் 19–ஆம் தேதி வரை இந்த மாநாடு நடைபெறுகிறது.

## 56 லட்சம் ஆசிரியர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி

- 'நிஸ்தா' திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 56 லட்சம் ஆசிரியர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிஅளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து துறைகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு, கற்பிக்கும் திறனை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளவும், தொழில்நுட்பத்தை கையாளுவதை கற்றுக்கொள்ளவும் பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கான தேசிய முயற்சி (நிஸ்தா) என்ற திறன் வளர்ப்பு பயிற்சி திட்டத்தை மத்திய அரசு கடந்த 2019–ம் ஆண்டு கொண்டு வந்தது.
- இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மத்திய, மாநில அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு (உயர்கல்வி, மேல்நிலை) தமிழ், தெலுங்கு உள்ளிட்ட 10 மொழிகளில் பணியிடைப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## சென்னை–பெங்களூரு அதிவிரைவு சாலை

- சென்னை–பெங்களூரு அதிவிரைவு சாலை அமைக்கும் பணிக்கு பிரதமர் நரேந்திர மோடி விரைவில் அடிக்கல் நாட்ட உள்ளதாக மத்திய சாலை மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

## ஜல் ஜீவன் திட்டம் மூலம் கிராமப்புறங்களில் 3.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு

- ஜல் ஜீவன் திட்டம் மூலம் கிராமங்களில் 3.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி ஜல் ஜீவன் திட்டத்தை

தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்படி, 2024–ஆம் ஆண்டுக்குள் கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 100 சதவீதம் குடிநீர் குழாய் இணைப்பு பெற்ற முதல் மாநிலமாக கோவா உள்ளது. இதற்கு அடுத்தப்படியாக தெலங்கானா உள்ளது.

## நாட்டின் அனைத்து நகரங்களையும் சென்றடையும் வகையில் ஜல் ஜீவன் இயக்கம்

- "பே ஜல் சர்வேஷன்" என்னும் மாதிரி திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டது.
- ஆக்ரா, கொச்சி, மதுரை, பாட்டியாலா, ரோஹ்தக், சூரத் மற்றும் தும்கூர் ஆகிய 10 நகரங்களில் சோதனை முறையில் பே ஜல் சர்வேக்ஷன் தொடங்கப்பட்டுள்ளது.
- குறிக்கோள்: நீரின் சமமான விநியோகம், கழிவுநீரை மறுபயன்பாடு செய்தல் மற்றும் நீர்நிலைகளின் வரைபடம் ஆகியவற்றின் மூலம் நீரின் அளவு மற்றும் தரம் குறித்து அறிந்து கொள்வது.

## ரூ.363 கோடியில் விளைபொருள்களை பதப்படுத்துதல் திட்டங்கள்

- பிரதமரின் கிஸான் சம்பதா திட்டத்தின் கீழ் வேளாண் பொருள்கள் பதப்படுத்தும் கட்டமைப்புத் தொகுப்பு மற்றும் பாதுகாப்புத்திறன்களை உருவாக்குதல் மற்றும் விரிவுப்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும் இரு குழுக்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.
- உணவுப்பதப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு திறன்கள்: இந்தத் திட்டத்தில் புதிதாக உருவாக்குதல் அல்லது விரிவுப்படுத்துதல் திட்டங்களின் கீழ் ஹிமாசலப் பிரதேசம், மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், கர்நாடகம், மிஸோரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் ரூ.113.08 கோடியிலான 11 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- வேளாண் பொருள்கள் பதப்படுத்தும் கட்டமைப்பு தொகுப்பு: இந்தத் திட்டங்கள் மத்தியப் பிரதேசம், ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் 9 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**பிரதம மந்திரி கிஸான் சம்பதா யோஜனா**

- மத்திய உணவு பாதுகாப்பு தொழிற்சாலைகள் அமைச்சகம் 2014ல் கடல்சார் பொருள்கள் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்கள் பதப்படுத்தும் மையங்கள் (SAMPADA) என்ற திட்டத்தை 2016ஆம் ஆண்டு துவங்கியது.
- பின்னர் 2017ல் இத்திட்டத்திற்கு பிரதம மந்திரி கிஸான் சம்பதா யோஜனா என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது முழுவதுமாக மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

## இந்தியாவின் மிக நீளமான சாலைப் பாலம்

- அசாமில் துப்ரி–புல்பரி இடையே பிரம்மபுத்ரா ஆற்றின் மீது ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த ஆற்றுப்பாலம் 18 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைய உள்ளது. இந்தியாவின் மிக நீளமான சாலைப் பாலமான இதற்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுகிறார்.
- இதன் சில பகுதிகள் அசாமிலும், சில பகுதிகள் மேகாலயாவின் காரோ குன்றுகள் பகுதியிலும் உள்ளன. மேலும் இது வங்காள தேசத்தின் சர்வதேச எல்லையையொட்டி 11 கிலோமீட்டர் தொலைவில் அமைகிறது.

## 'ஸ்னேக்பீடியா" மொபைல் பயன்பாடு (Snakepedia)

- பாம்புக் கடித்தலுக்கு சிகிச்சையளிப்பதில் பொதுமக்களுக்கு மருத்துவர்களுக்கும் உதவுவதற்காக, பாம்புகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் உள்ளக்கிய "ஸ்னேக்பீடியா" என்ற மொபைல் பயன்பாட்டை கேரளா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

## நாதுலா கணவாய்

- சிக்கிம் – திபெத் எல்லையில் நாதுலா கனவாய் அமைந்து உள்ளது. நாதுலா கனவாயின் ஒரு பகுதி சிக்கிம் மாநிலத்தில் அமைந்துள்ளது
- இது கடல் மட்டத்தில் இருந்து 4,310 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

## திறன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளது (Skill University)

- அஸ்ஸாம் மாநிலத்தில் டாரங் மாவட்டத்தின் மங்கல்டோய் என்ற இடத்தில் உலகத் தரம் வாய்ந்த திறன் பல்கலைக்கழகத்தை அமைக்க

"அசாம் திறன் மேம்பாட்டு பல்கலைக்கழக மசோதாவுக்கு அசாம் அரசு ஒப்புதல் அளித்து இருந்தது, இதையடுத்து திறன் பல்கலக்கழகம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

### கம்பாலா

- கர்நாடக மாநிலத்தில் பாரம்பரிய கம்பாலா போட்டி நடத்தப்படுகிறது

## நாட்டின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் கேரளத்தில் திறப்பு

- டிஜிட்டல் அறிவியல் புத்தாக்க தொழில்நுட்ப பல்கலைக்கழகம் என்று பெயரிடப்பட்டுள்ள அந்தப் பல்கலைகழகமானது தலைநகர் திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள மங்களாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- டிஜிட்டல் பல்கலைக்கழகமானது 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1,200 மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வகையில் பல்கலைக்கழகம் மேம்படுத்தப்படவுள்ளது. கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி உள்ளிட்டவற்றில் சர்வதேச கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பல்கலைக்கழகம் செயல்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## குஜராத்தில் பெரிய உயிரியல் பூங்கா

- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் குழுமம் தனது பூர்வீக மாநிலமான குஜராத்தில் உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்காவை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.
- இந்த உயிரியல் பூங்கா 2023ல் திறக்கப்படும்.
- கொமோடோ டிராகன், சிறுத்தைகள், பறவைகள் என 100க்கும் மேலான பல அரிய உயிரினங்கள் இந்தப் பூங்காவில் இடம்பெற உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## பிரதமர் தலைமையில் புதிய நிர்வாகக் குழு

- பிரதமர் மோடி தலைமையில் நீதி ஆயோக்கின் புதிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது,
- அனைத்து மாநிலங்கள், புதுச்சேரி, தில்லி, ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள் புதிய நிர்வாகக் குழுவின் முழு நேர உறுப்பினர்களாக இருப்பர்.
- அந்தமான்–நிகோபார் தீவுகள் லடாக் துணைநிலை ஆளுநர்கள், சண்டீகர், தாத்ரா–நகர் ஹவேலி, டாமன் டையூ, லட்சத்தீவு ஆகியவற்றின் தலைமை நிர்வாகிகள் புதிய குழுவின் சிறப்பு அழைப்பாளர்களாக இருப்பர்.
- நீதி ஆயோக் நிர்வாகக் குழு தேவையின் காரணமாக மறுசீரமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹோஷாங்கபாத் நகரின் பெயர் மாறுகிறது

- போபால் ம.பி.யின் ஹோஷாங்கபாத் நகரில் நடைபெற்ற நர்மதா ஜெயந்தி விழாவில் முதல்வர் சிவராஜ் சவுகான் பங்கேற்றார்.
- முதல்வர் சவுகான், "ஹோஷாங்கபாத் நகரின் பெயர் நர்மதாபுரம் என மாற்றப்படும். இது தொடர்பாக மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்பி வைக்கப்படும்" என்றார்.

## 100% குழாய் நீர் இணைப்பு பெற்ற பள்ளிகள்

- தெலுங்கானா மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கு 100% குழாய் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இந்திய கடல்சார் உச்சி மாநாடு

- இணைய வழியில் நடைபெற உள்ள இந்திய கடல்சார் உச்சி மாநாட்டில் சென்னைத் துறைமுகம் சார்பில் 15 புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.
- துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் சார்பில் மார்ச் 2 முதல் 4–ம் தேதி வரை இந்திய கடல்சார் உச்சிமாநாடு நடைபெற உள்ளது.
- சாகர்மாலா திட்டத்தின் கீழ் மத்திய கடல்சார் பல்கலைக்கழகத்துடன் இணைத்து திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

### 1971 போர்

- கடந்த 1971–ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக நடந்த போரில் இந்தியா வெற்றி பெற்று 50 ஆண்டுகள் ஆகிறது. இப்போரில் பங்கேற்ற வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், இந்தியா விமானப்படையில் உள்ள "சூர்யகிரண்" என்ற குழு சார்பில், வான்வெளி சாகச நிகழ்ச்சி சென்னை மெரினாவில் நடந்தது. இக்குழு உள்நாடு மட்டுமின்றி சீனா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியாவின் பல்வேறு நாடுகளில் இதுவரை 600 சாகச நிகழ்ச்சிகளை நடத்தி உள்ளது.

**1971 இந்தியா–பாகிஸ்தான் போர்**

- இந்த போரின் வெற்றியின் மூலம் கிழக்கு பாகிஸ்தான் பிரிக்கப்பட்டு வங்கதேசம் என்ற புதிய நாடு இந்தியாவில் உருவாக்கப்பட்டது.
- இந்தியா வெற்றி பெற்ற டிசம்பர் 16 ஒவ்வொரு ஆண்டும் விஜய் திவாஸ் என கொண்டாடப்படுகிறது.

## உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் அரங்கம்

- குஜராத்தில் உள்ள உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் அரங்கத்துக்கு பிரதமர் நரேந்திர மோடியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் அரங்கத்தைக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.

## "Eat Right வளாகங்கள்"

- தமிழ்நாடு சென்னை கால்நடை மருத்துவ கல்லூரி விடுதி வளாகம் மற்றும் கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள அப்போலோ மருத்துவமனை போன்ற பகுதிகள் Eat Right வளாகங்களாக இந்திய உணவு பாதுகாப்பு தர கட்டுப்பாட்டு அமைப்பால் (FSSAI) சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்திய உணவு பாதுகாப்பு தர கட்டுப்பாட்டு அமைப்பின் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றியமைக்காக இந்த சான்றிதழ் அளிக்கப்பட்டு உள்ளது.

Eat Right Movement

- 2019ம் ஆண்டில் மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு அமைப்பால் துவங்கப்பட்டது.
- FSSAI (இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு அமைப்பு)
- உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டம் – 2006ன் கீழ் இந்த அமைப்பு 2011ம் ஆண்டில் துவங்கப்பட்டது.

## மக்கள் நீதிமன்றம் எனப்படும் "லோக் அதாலத்"

- "லோக் அதாலத்" எனப்படும் மக்கள் நீதிமன்றம் சமாதானம் அல்லது சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க இந்திய அரசால் உருவாக்கப்பட்ட நீதிமன்றம் ஆகும். இது உரிமையியல் விசாரணை முறைச் சட்டப்பிரிவு 89–ன் கீழ் வருகின்றது.

**லோக் அதாலத் செயல்படும் முறை**

- சட்டப்பணிகள் ஆணைக் குழு பிரிவு 19ன் படி மக்கள் நீதிமன்றம் என்பது 3 பேர் கொண்ட அமர்வாக இருக்கும். அதில் ஒருவர் பணியில் இருக்கும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி. மற்றொருவர் சமூக நலப்பணியாளர் அல்லது பொது நல ஊழியர், மூன்றாம் நபர் வழக்கறிஞர் எனும் வரிசையில் இதற்கான நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**இவர்களின் பணி:**

- நீதிமன்றத்திலிருக்கும் நிலுவையிலுள்ள வழக்குகளில் சம்மந்தப்பட்ட இருதரப்புக்கும் இடையே சமரசத் திர்வு ஏற்படுத்துதல்.
- நீதிமன்றத்திற்கு அப்பாற்பட்ட சில பிரச்சனைகளுக்கும் பேசித் தீர்வு காண முயலுதல்.
- வழக்குத் தரப்பாளர்களுக்குக் குறைந்த செலவில் விரைவாக நீதி கிடைக்க வழிவகை செய்தல்.

**நீதிமன்றங்கள் இருக்க தனியாக லோக் அதாலத் எதற்கு?**

- 1980இல் உச்ச நீதிமன்றத்தின் நீதிரயசர் பி.என். பகவதி அவர்கள் தலைமையில் தேசிய அளவில் சட்ட உதவிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழுவுக்கு "CILAS – (Committee for implementing Legal Aid Schemes) என்று பெயர். அதன் பரிந்துரையின் பேரில் 1987இல் Legal Services Authorities Act என்ற சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் இந்தியா முழுவதும் உள்ள சட்ட உதவி மையங்கள் ஒரே வடிவங்களில் செயல்பட வழிவகுத்தது. இந்தச் சட்டம் இறுதியாக 1995 நவம்பர் ஒரு சில திருத்தங்களுக்குப் பின் செயல்பாட்டிற்கு வந்தது. அதன்படி National Legal Services Authority (NALSA) – என்ற ஆணையம் தேசிய அளவில் நிறுவப்பட்டு பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்காக சட்ட உதவி வழங்கிடவும், விரைவாக நீதி வழங்கும் லோக் அதாலத் (Lok Adalat) ஏற்படுத்தவும் செயல்படுகின்றது.

**முதல் மக்கள் நீதிமன்றம் எங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது?**

- இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் ஜுனகார் என்ற இடத்தில் மார்ச் 14, 1982 அன்று "லோக் அதாலத்" எனப்படும் மக்கள் நீதிமன்றம் முதன்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

**லோக் அதாலத்தின் சிறப்பு**

- இங்கு தீர்வு காணப்பட்டால் அதற்கு மேல் மேல்முறையீட்டிற்குப் போக முடியாது என்பது இதற்கான சிறப்புகளில் ஒன்று.

## தேசிய நுகர்வோர் குறைகள் தீர்வு ஆணையம் (NCDRC)

- 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் படி அமைக்கப்பட்டது.
- தலைமையிடம் – டெல்லி
- தலைவர் – நீதிபதி R.K.அகர்வால்

## அறிவுசார் சொத்துரிமைகளின் வணிகம் தொடர்பான அம்சங்கள் குறித்த ஒப்பந்தம் (TRIPS)

- அறிவுசார் சொத்துரிமைகளின் வணிகம் தொடர்பான அம்சங்கள் குறித்த ஒப்பந்தம் என்பது ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆகும்.
- உலக வணிக அமைப்பினால் நிர்வகிக்கப்படும் இந்த ஒப்பந்தம்.
- இது 1994 ஆம் ஆண்டில் உருகுவே நாட்டில் இடம்பெற்ற வரிகள் மற்றும் வணிகம் தொடர்பான பொது ஒப்பந்தம் குறித்த சுற்றுப் பேச்சுகளின் முடிவில் இணைத்து கொள்ளப்பட்டது.

**டிரிப்ஸ் கவுன்சில் (TRIPS)**

- இந்தியாவும், தென்னாப்பிரிக்காவும் இணைந்து உலக வர்த்தக அமைப்பின் டிரிப்ஸ் கவுன்சிலில் ஒரு முன்மொழிவை வைத்துள்ளது.
- தொற்று நோய்களின் போது குறைந்த செலவில் உலக நாடுகளுக்கு தடுப்பூசிகள் வழங்க வேண்டும் என்ற முன்மொழிவை வைத்துள்ளது.

**இந்தியா**

- இந்தியா உலக வர்த்தக அமைப்பில் உறுப்பினராக உள்ளது அறிவுசார் சொத்துகளின் வர்த்தக தொடர்பான அம்சங்கள் (டிரிப்ஸ் ஒப்பந்தம்) தொடர்பான ஒப்பந்தத்தில் உறுப்பினராக உள்ளது.
- உலகெங்கிலும் உள்ள அறிவுசார் சொத்துரிமை களைப் பாதுகாப்பதை மேம்படுத்துவதற்கு பொறுப்பான ஒரு அமைப்பான உலக அறிவுசார் சொத்து அமைப்பில் இந்தியாவும் உறுப்பினராக உள்ளது.

**தேசிய கொள்கை**

- நாட்டில் ஐபிஆர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஆவணமாக தேசிய அறிவுசார் சொத்துரிமை கொள்கை மே 2016 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சாதனைகள்**

- ஜிஐஐ தரவரிசையில் முன்னேற்றம்: விஐபிஓ வழங்கிய உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 2015இல் 81வது இடத்திலிருந்து 2019 இல் 52வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

WTO

- தொடக்கம் – 1995
- தலைமையகம் – சுவிட்சர்லாந்து
- தலைவர் – என்கோசி ஓகோன்ஜோ–இவெலா

# 7 சர்வதேச நிகழ்வு



## மியான்மரில் ஒரு வருடத்திற்கு அவசரநிலை பிரகடனம்

- நவம்பர் 2020-ல் மியான்மரில் நடந்த பொதுத் தேர்தலில் National League for Democracy கட்சியின் ஆங் சான் சூகி வெற்றிப்பெற்றார்.
- ஆனால், பொதுத்தேர்தலில் முறைகேடு நடந்ததாக அந்நாட்டு இராணுவம் குற்றம்சாட்டியது.
- இந்நிலையில் சோதனையில் ஈடுபட்ட மியான்மர் இராணுவம், மியான்மரின் தலைவர் ஆங்சான் சூகி மற்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்த மற்ற மூத்த தலைவர்கள் அனைவரையும் சிறை பிடித்து தடுப்பு காவலில் வைத்துள்ளது.
- மேலும், மியான்மரில் ஒரு வருடத்திற்கு அவசரநிலை பிரகடன் அமுல்படுத்தப்படுவதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

## ரஷ்யாவின் ஸ்பூட்னிக்-வி கோவிட் 19 தடுப்பூசி 91.6% பாதுகாப்பானது

- ரஷ்யாவின் ஸ்பூட்னிச்-வி கோவிட் 19 தடுப்பூசி 91.6% பாதுகாப்பானது என தி லான்செட் இதழ் வெளியிட்டுள்ளது. இத்தடுப்பூசி 2.80 C வெப்பநிலையில் வைத்து உலகம் முழுவதும் ரஷ்யா சுகதாரத்துறை விநியோகம் செய்கிறது.
- மூன்று கட்ட ஆய்வுகள் கடந்த பிறகு இந்த தடுப்பூசி பாதுகாப்பானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக பொருளாதார மன்றம் (World Economic Forum)

- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.
- கடந்த 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- தற்போதைய தலைவர் : Borge Vrende (2021)
- உலக பொருளாதார மன்றத்தின் மாநாடு சமீபத்தில் டாவோஸ் நகரில் (ஜனவரி 28, 2021) நடைபெற்றது.
- உலக பொருளாதார மன்றம் "உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையை (Global Gender gap Report) வெளியிடுகிறது.

## ஈரான்

- ஈரான் தலைவர் (2021) – சுசன் ரவ்கானி
- ஈரான் தலைநகரம் – தெஹ்ரான்

## இஸ்ரேல்

- தலைநகரம் – ஜெருசலேம்
- அதிபர் – Recuven Rivlin
- மேற்கு ஆசியாவின் மத்திய தரைக்கடலின் கிழக்கு முனையில் இஸ்ரேல் அமைந்துள்ளது.
- மேறும் இஸ்ரேலின் 273கி.மீ கடற்கரை தொலைவில் Gaza Strip அமைந்துள்ளது.
- சிவப்பு கடலுக்கு தெற்கே ஒரு சிறிய நாடாக இஸ்ரேல் அமைந்துள்ளது.

## உக்ரைன் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல்

- உக்ரைன் நாடு இந்தியாவில் இருந்து பாதுகாப்பு உபகரணங்களை வாங்க $ 70 அமெரிக்க டாலர் ஒப்பந்தம் மேற்கொண்டு உள்ளது.

## இத்தாலியின் புதிய பிரதமர்

- பிரதமர் – Mario Draghi
- தலைவர் – Sergio Mattarella
- தலைநகரம் – ரோம்

## உலகின் மிக பழைமையான மது ஆலை கண்டுபிடிப்பு

- 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் இயங்கி வந்த மது ஆலையை எகிப்தில் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். கிமு 3150 முதல் கிமு 2613 வரை இருந்த முதலாம் பேரரசை உருவாக்கிய மன்னர் நார்மர் காலத்தில் அந்த மதுஆலை அமைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## எப்.ஏ.டி.எப். அமைப்பு

- ஐரோப்பிய நாடான பிரான்சின் பாரிசை தலைமையிடமாக வைத்து செயல்படும்

எப்.ஏ.டி.எப். அமைப்பு சர்வதேச அளவில் பயங்கரவாதத்துக்கு நிதி கிடைப்பதை தடுக்கவும் பண மோசடிகளை தடுக்கவும் அந்தந்த நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

- இதன் 'கிரே' எனப்படும் மோசமான நாடுகள் பட்டியலில் இடம் பெறும் நாடுகளுக்கு உலக வங்கி சர்வதேச நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் நிதி உதவி கிடைக்காது. 37 உறுப்பு நாடுகளை கொண்டுள்ளது.

Financial Action Task Force

- G7 நாடுகளுக்கிடையேயான 1989ஆம் ஆண்டு பாரிஸ் மாநாட்டில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- சாம்பல் பட்டியல் மற்றும் கருப்பு பட்டியல் என்ற இரு வகைப்பாடுகளில் தவறான செயல்பாடுகளுக்கு நிதியுதவி அளிக்கும் நாடுகள் வகைப்படுத்தப்படுகின்றன.

## அமெரிக்காவின் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளி இந்தியா

- "க்வாட்" எனப்படும் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்த நாற்கர கூட்டமைப்பின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.
- அமெரிக்காவின் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளியாக இந்தியா திகழ்வதாக அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- குவாட் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களிடையே நடைபெறவிருக்கும் மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## வளர்ந்து வரும் இளம் தலைவர்கள்; 100ல் 6 இந்தியர்களுக்கு இடம்

- அமெரிக்காவின் நியூயார்க் நகரில் இருந்து வெளியாகும், 'டைம்' இதழ், எதிர்காலத்தை வடிவமைக்கக் கூடிய, 100 வளர்ந்து வரும் தலைவர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இதில், ஒரு இந்தியர் மற்றும் ஐந்து இந்திய வம்சாவளியினர் இடம்பெற்றுள்ளனர். 'பீம் ஆர்மி' அமைப்பின் தலைவர் சந்திர சேகர ஆசாத் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள, ஒரே இந்தியர்.
- இவரைத் தவிர, ஐந்து இந்திய வம்சாவளியினர் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். 'டுவிட்டர்' சமூக வலைதளத்தின் வழக்கறிஞர் விஜய் கட்டே, ஐரோப்பிய நாடான பிரிட்டனின் நிதி அமைச்சர் ரிஷி சுனாக், 'இன்ஸ்டாகார்ட்' நிறுவனர் அபூர்வா மேத்தா ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.
- டாக்டரும், அரசு சாரா அமைப்பான, கெட் அஸ் பி.பி.இ., செயல் இயக்குனருமான ஷிகா குப்தா; அரசு சாரா அமைப்பான, 'அப்சால்வ்' நிறுவனர், ரோஹன் பவுலூரி இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்க ஐ.நா.வில் ஜாவடேகர் வலியுறுத்தல்

- பருவநிலை மாற்றம் ஒர் எச்சரிக்கை மணி என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் குறிப்பிட்ட மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், 2030–ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை உலக நாடுகள் பாதியாக குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.
- 'சர்வதேச அமைதி, பாதுகாப்பு பேணுதல்" என்ற தலைப்பில் ஐ.நா.வில் நடைபெற்ற விவாதத்தில் அமைச்சர் ஜாவடேகர் பேசுகையில், "2030–ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை உலக நாடுகள் பாதியாக குறைக்க வேண்டும். 2050–ஆம் ஆண்டுக்கு முன்னதாக கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் குறைத்து பாரீஸ் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முன்வர வேண்டும்.
- பாரீஸ் ஒப்பந்த்தை அமல்படுத்துவதிலும் இந்தியா முனைப்புடன் செயலாற்றி வருகிறது. பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், சூரியஒளி மின் திட்டத்தில் இந்தியா விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தியாவில் 8 கோடி வீடுகளில் பசுமை எரிவாயு திட்டம் செயல்படுத்தப்படும் நெகிழிக்குத் தடை, ரயில்வே துறை முழுமையாக மின்மயமாக்கல் உள்ளிட்டவை பருவநிலை மாற்றத்துக்கு எதிராக இந்தியா நடவடிக்கை எடுத்து வரும் முக்கிய நடவடிக்கை.

**பருவகால ஒப்பந்தம்**

- 2015 – பாரிஸ் பருவகால மாற்ற ஒப்பந்தம்
- 2015ம் ஆண்டு பருவகால ஒப்பந்தம் UNFCCC (United Nations Frame Work Convention on Climate Change) முன்னிலையில் 195 இணைந்து கையெழுத்திடப்பட்டது).
- இதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட கால இடைவெளியில் பூமியின் வெப்பத்தை 2°செல்சியஸ் குறைத்தல் மற்றும் பூஜ்ஜிய பசுமை இல்லா வாயு உமிழ்வை நோக்கி அனைத்து நாடுகளும் செயல்பாடுகளை முன்னெடுத்தல்.

# 8 தமிழ்நாடு



## நகர்புறத்தில் முதல் மியாவாக்கி காடுகள்

- முதல் மியவாக்கி காடுகள் சென்னையில் எம்ஆர்டிஎஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கோட்டூர்புரத்தில் மியவாக்கி காடுகள் ஒரு வருடம் முன்பு உருவாக்கப்பட்டன.
- நகராட்சியில் சுமார் 1000 மியவாக்கி காடுகள் உருவாக்கப்பட வேண்டும் என சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. இதற்கு 20 இடங்களை தேர்வு செய்து உள்ளது.
- இதையடுத்து குடியிருப்பு பகுதியில் மியவாக்கி காடுகள் உருவாக்கப்பட வேண்டும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

**மியவாக்கி முறை**

- ஜப்பானைச் சேர்ந்த தாவரவியலாளரும், சுற்றுச்சூழல் வல்லுனருமான அகிரா மியவாக்கி என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த நவீன காடு வளர்ப்பு முறை 'இடைவெளி இல்லாத அடர்ந்த காடு' என்பதே இவருடைய தத்துவம். அதாவது குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் மரங்களை நடவு செய்து ஒரு காட்டை உருவாக்க வேண்டும்.

## வலயார் மீட்பு வாரியத்தை உருவாக்கப்படும்

- வலயார் மீட்பு வாரியத்தை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்கும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.
- முத்தரையால் சமூகத்தின் ஆட்சியார்களுக்கான நினைவுச் சின்னங்களை பாதுகாக்க அரசாங்கமும் நடவடிக்கை எடுத்து வருவதாக திரு பழனிசாமி கூறினார். சட்டமன்றத்தில் அறிவித்தபடி திருச்சியில் உள்ள பேரரசர் பெரம்பிடுகு முத்தராயரின் சிலைக்கு அடித்தளம் அமைத்துள்ளது.

## மாணவர்களுக்கும் 2 ஜிபி டேட்டா: முதல்வர் தொடக்கி வைத்தார்

- கல்லூரி மாணவர்களுக்கு 2 ஜிபி டேட்டா வழங்கும் திட்டத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தொடக்கி வைத்தார்.
- இந்த அட்டைகள் பிப்ரவரி மாதம் முதல் நான்கு மாதங்களுக்கு நாளொன்றுக்கு 2 ஜிபி டேட்டா பெற்றிட முடியும்.

## காணாமல் போன குழந்தைகளை மீட்க "ஆபரேஷன் ஸ்மைல்" திட்டம்

- சென்னை பெருநகரில் சாலையோரம் சுற்றித் திரியும் குழந்தைகள், காணாமல் போன குழந்தைகள், கடத்தப்பட்ட குழந்தைகள், பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவும் வகையில் 'ஆபரேஷன் ஸ்மைல்' என்ற திட்டத்தை சென்னை காவல் ஆணையர் தொடங்கி வைத்தார்.

## அரசு ஊழியர், ஆசியரியர் மீதான நடவடிக்கை, வழக்குகள் வாபஸ்

- தமிழகத்தில் கடந்த 2019–ல் நடந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள், குற்றவியல் வழக்குகள் அனைத்தையும் அரசு கைவிடுவதாக முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.
- மத்திய அரசு, 7–வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று ஊதிய உயர்வு வழங்கி உத்தரவிட்டதுடன் நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகத்திலும் ஊதியக்குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளை உரிய காலத்திலேயே பெற்று, ஒரே மாதத்தில் பரிசீலித்து மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது.

## "மெட்ரோ நியோ" என்ற பெயரில் மெட்ரோ ரயில் திட்டங்கள்

- சென்னை மெட்ரோ ரயிலின் 2-ம் கட்ட திட்டம் ரூ.63,246 கோடி செலவில் 118.9 கி.மீ தொலைவுக்கு அமைக்கப்படும். தற்போது நாடு முழுவதும் 702 கி.மீ தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.
- இதைத் தொடர்ந்து 2-ம் நிலை நகரங்கள் முதல் நிலை நகரங்களின் புறநகர்ப் பகுதிகளை இணைக்கும் வகையில் 2 புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.
- அதன்படி, "மெட்ரோ லைட்" மற்றும் "மெட்ரோ நியோ" என்ற பெயரில் மெட்ரோ ரயில் திட்டங்கள் தொடங்கப்படவுள்ளன.

**சாலைத்திட்டம்**

- மதுரை முதல் கேரளாவின் கொல்லம் வரை நவீன வசதிகளுடன் கூடிய நெடுஞ்சாலை அமைக்க ஒப்புதல் அளிக்கபட்டுள்ளது.
- கன்னியாகுமரி முதல் கேரளாவின் பல பகுதிகளை இணைக்கும் வகையில் நவீன சாலை அமைக்கப்படவுள்ளது.

## நீதி வழங்கலில் தமிழகம் 2-வது இடம்

- டாடா அறக்கட்டளை சார்பில் 'இந்தியா நீதி அறிக்கை-2020' என்ற தலைப்பில், பொதுமக்களுக்கு நீதி வழங்குவதில் சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் பற்றி 2-வது ஆண்டாக கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. நீதித்துறை, சிறைத்துறை, சட்ட உதவிகள் மற்றும் போலீஸ் துறை ஆகிய 4 பிரிவுகளில் தனித்தனியாக கருத்துகள் கணக்கிடப்பட்டன.
- இதில் ஒட்டுமொத்தமாக சிறந்த முதல் மாநிலமாக மராட்டிய மாநிலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.
- 2-வது இடம் தமிழகத்துக்கு கிடைத்தது. கடந்த ஆண்டு தமிழகம் 3-வது இடத்தில் இருந்தது. சிறிய மாநிலங்கள் பிரிவில் திரிபுரா, சிக்கிம் ஆகியவை முதல் 2 இடங்களில் உள்ளன.
- நீதித்துறையை மட்டும் கணக்கில் கொண்டால் நாட்டிலேயே முதல் மாநிலம் தமிழகம் ஆகும்.

## "தோழி" திட்டம்

- தோழி திட்டம் கடந்த 9 நவம்பர் 2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முகத்தில் புன்னகையை கொண்டு வருவதே "தோழி" திட்டத்தின் நோக்கம்.
- பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்-பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலன் காக்க அவர்கள் வசிக்கும் இடம் தேடி நேரடியாக சென்று மன ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் உதவி மற்றும் ஆலோசனைகள் வழங்க சென்னை காவல்துறையில் "தோழி" என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது.

## காவிரி-குண்டாறு இணைப்புக்கான பணிகள் தொடக்கம்

- காவிரி-குண்டாறு இணைப்பு திட்டத்துக்காக ரூ.331 கோடியில் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட ஆரம்பகட்ட பணிகள் நடந்து வருகின்றன. காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு திட்டம், 3 கட்டங்களாக நிறைவேற்றப்பட உள்ளது.
- மத்திய அரசு நிதி, நபார்டு நிதியைப் பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. 6 ஆயிரம் கனஅடி கொள்ளளவு கொண்ட கால்வாய் 262 கி.மீ. தொலைவுக்கு வெட்டப்படும். இந்த கால்வாய் காவிரி, கோரையாறு, அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, விருசுழியாறு, பாம்பாறு, மணிமுத்தாறு, சருகுனியாறு, உப்பாறு, வைகை, கிருதம்மாள் நிதி குண்டாறு வரை செல்கிறது.

**காவிரி**

- மேற்கு தொடர்ச்சி மலையில் பிரம்மகிர் குன்றுகளில் தலைகாவிரி எனும் இடத்தில் உற்பத்தியாகிறது. தமிழ்நாட்டில் 416 கி.மீ. நீளத்திற்கு பாய்கிறது.
- அமராவதி மற்றும் நொய்யல் ஆகிய இரண்டு துணை ஆறுகள் இணைகின்றன. திருச்சி மாவட்டத்தில் இரண்டு கிளையாக பிரிகிறது.
- குண்டாறு தமிழ் நாட்டில் உள்ள தேனி மாவட்டத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரில் அமைந்துள்ள, ஆண்டிப்பட்டி மலையின் மலைச் சிகரங்கலில் உருவாகின்றது.
- குண்டாறானது மதுரை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் வழியாகச் சென்று தெற்கு மூக்கையூர் அருகில் வங்காள விரிகுடாவில் கலக்கின்றது.
- இதன் நீளம் 146 கி.மீ ஆகும். இதன் முக்கிய துணை ஆறுகளாக தெற்காறு காணல் ஓடை கிருதுமால் நதி மற்றும் பரலை ஆறுகள் ஆகும். குண்டாறானது ஒரு பருவ கால ஆறாகும்.
- கடலூர் அருகே தெற்கே வங்ககடலில் கலக்கிறது.

## சென்னை சர்வதேச திரைப்பட விழா

- சென்னை சர்வதேச திரைப்பட விழாவை ஏற்பாடு செய்ய இந்த அமைப்பிடம் ரூ.75 லட்சத்திற்கான காசோலையை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.
- 18வது சென்னை சர்வதேச திரைப்பட விழா பிப்ரவரி 18 முதல் 25 வரை நடைபெறுகிறது.
- சென்னை சர்வதேச திரைப்பட விழா கடந்த 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## தங்க நாணயங்களுடன் திருமண நிதியுதவி

- நிகழாண்டில் 95,000 பேருக்கு தங்க நாணயங்களுடன் திருமண நிதியுதவி அளிக்கும் திட்டத்தை முதல்வர் பழனிசாமி தொடக்கி வைத்தார்.
- இதன்படி இளநிலைப்பட்டம் அல்லது டிப்ளமோ படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.50 ஆயிரம் திருமாங்கல்யத்துக்கு 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவியாக ரூ.25 ஆயிரம் மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது.
- ஏழைப் பெண்களின் திருமணத்துக்காக தங்க நாணயங்களுடன், ரொக்கத் தொகை வழங்கும் திட்டம் 2011–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இதன்படி இளநிலை பட்டம் அல்லத டிப்ளோமா படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.50,000 ஆயிரம் 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.
- படித்த ஏழை பெண்களுக்கு திருமண நிதி உதவியாக ரூ. 25,000 மும் 8கிராம் தங்கம் வழங்கப்படுகிறது.

### தமிழ்நாடு திருமண உதவி திட்டம்

- 1989–மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டம்
- 1981–82. ஈ.வேரா மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதி உதவி திட்டம்
- 1985–1986 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண் திருமண நிதி உதவி திட்டம்
- 1975 டாக்டர். தர்மாம்மாள் அம்மையார் விதவை மறுமண நிதி உதவி திட்டம்
- டாக்டர் முத்துலட்சுமி கலப்பு திருதமண நிதி உதவி திட்டம் – 1967.

## தமிழக "பாரத் நெட்"

- கிராமங்களுக்கு பிராட்பேண்ட் உள்ளிட்ட தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்ல மத்திய தொலைத்தொடர்புத் துறை மாநில அரசுகளுடன் இணைந்து பாரத் நெட்வொர்க் திட்டத்தை இரண்டு கட்டங்களாக நாடு முழுக்க மேற்கொண்டு வருகிறது.

### தமிழ்நெட் திட்டம் (TANFINET)

- தமிழகத்தின் குக்கிராமங்கள் முதல் பெருநகரங்கள் வரை அனைத்து மக்களையும் இணைக்கும் அமைப்பு "தமிழ்நெட்" எனும் தமிழக அரசின் அதிவேக இணையதள சேவை ஆகும்.
- கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிவேக இணைய வசதியை அளிக்கும் "பாரத்நெட்" திட்டத்தின் நீட்சிதான் இது.
- "தமிழ்நெட்"–ஐ "தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்பரேஷன்" என்ற அமைப்பு உருவாக்கி உள்ளது. ஒரு ஜி.பி.பி.எஸ் வேகத்தில் இணையதள சேவை கிடைக்கிறது.
- 14–07–2017 அன்று தொடங்கப்பட்டது.

## தமிழகத்தில் ஐந்து நகரங்களில் விமான நிலைய பணி

- தமிழகத்தில் உதான் திட்டத்தின் கீழ் புதிய விமான நிலையங்களை விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் **சேலம், நெய்வேலி, வேலூர், ராமநாதபுரம், தஞ்சாவூர்** ஆகிய நகரங்களில் இந்திய விமானநிலைய ஆணையகம் மூலமாக இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### உதான் திட்டம்

- கடந்த 2017 ஆம் ஆண்டு ஹிமாச்சல பிரதேசத்தின் சிம்லா பகுதியில் தொடங்கப்பட்டது. உதான் என்றால் மக்களும் பறக்கலாம் என்பதாகும். பிராந்திய விமான இணைப்பு திட்டமாகும்.

## "Agricultural and Processed Products Export Development Authority" அலுவலகம் சென்னையில் திறப்பு

- தமிழகத்தின் ஏற்றுமதி திறனை முழுவதும் பயன்படுத்தும் நோக்கில், மத்திய அரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி, மேம்பாட்டு ஆணையம் (அபேடா), தனது மண்டல அலுவலகத்தை சென்னையில் திறந்துள்ளது.

## 69% இடஒதுக்கீடு சட்டம்

- தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்குக் கல்வி, அரசுப் பணிகளில் 69 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் 1994–ஆம் ஆண்டில் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.
- மாநிலத்தில் உள்ள சாதிகள், இனங்கள், பழங்குடியினர் தொடர்புடைய தரவுகளைச் சேகரிப்பதற்காக உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற **நீதிபதி எ.குலசேகரன் தலைமையிலான ஓர் ஆணையத்தை தமிழக** அரசு நியமித்துள்ளது.
- கடைசியாக 1983–ஆம் ஆண்டு இதுபோன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அறிக்கை 1985–இல் சமர்பிக்கப்பட்டது.
- அதன் அடிப்படையில்தான் மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், அட்டவணைப் பட்டியல் சாதியினர், பழங்குடியினர் ஆகியோருக்கு 69 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- இந்தக் சட்டத்தின்படி பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 சதவீதம், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 சதவீதம், பட்டியலினத்தவர்களுக்கு 18 சதவீதம், பழங்குடியினருக்கு ஒரு சதவீதம் என இடஒதுக்கீடு முறை வழங்கப்படுகிறது.
- மாநிலத்தில் இடஒதுக்கீட்டுக் கொள்கை 1921–இல் இருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. 19.7.1994–இல் இயற்றப்பட்ட இந்த 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு வகை செய்யும் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 31–சி–இன் கீழ் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்றுள்ளது.
- இது அரசமைப்புச் சட்டத்தின் 9–ஆவது அட்டவணைப்பட்டியலின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

## ரூ.12,110 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி

- கூட்டுறவு வங்கிகளில் 16.43 லட்சம் விவசாயிகள் பெற்றிருந்த ரூ.12,110 கோடி பயிர்க்கடன் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படும் என்று சட்டப்பரேவையில் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

### கூட்டுறவு என்ற சொல் இணைக்கப்படுதல்

- கூட்டுறவு என்ற தொழிற்சங்கள் மற்றும் சங்கங்களுக்கு அரசியலமைப்பின் மூன்றாம் பாகத்தின் அடிப்படை உரிமையின் கீழ் 19(1)(e) சேர்க்கப்பட்டது.

## விழுப்புரம் புதிய பல்கலைக்கழகத்தில் ஜெயலலிதா பெயர்

- விழுப்புரத்தில் அமைக்கப்பட உள்ள புதிய பல்கலைக்கழகத்துக்கு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெயர் சூட்டப்பட உள்ளது. இந்தப் பல்கலைக்கழகமானது, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படும்.

## காட்டுப்பள்ளி துறைமுகம்

- காட்டுப்பள்ளி துறைமுகம் விரிவாக்கம் தொடர்பான கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது.
- காட்டுப்பள்ளி துறைமுகம் சென்னையிலிருந்து 35கி.மீ தொலைவில் பழவேற்காட்டை ஒட்டியிருக்கிறது.

### தேசிய விசாரணை அமைப்பு (NIA)

- இயக்குநர் :Y.C. மோடி
- அமைச்சகம் : உள்துறை அமைச்சகம்

## விழுப்புரம் புதிய பல்கலைக்கு ஜெயலலிதா பெயர்

- விழுப்புரத்தில் அமைக்கப்பட உள்ள புதிய பல்கலைக்கழகத்துக்கு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பெயர் சூட்டப்பட உள்ளது.
- இந்த பல்கலைக்கழகமானது, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படும்.

## சொற்குவைத் திட்டம்

- தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்கம் சார்பில் சென்னையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு "சொற்குவை மாணவத் தூதுவர்" பயிற்சித் திட்டம் நான்கு நாள்கள் நடைபெற்றது.
- முன்னதாக, அகரமுதலித் திட்ட இயக்கத்தின் சார்பில் ஏற்பளிக்கப்பட்ட 10, 700 கலைச்சொற்களுக்கான குறுந்தகட்டையும், அதற்கான அரசாணையையம் வெளியிடப்பட்டது.

## தமிழ்நாட்டில் அந்நிய நேரடி முதலீடு ஈர்ப்பு அதிகம்

- தமிழ்நாட்டில் அந்நிய நேரடி முதலீடு ஈர்ப்பதில் அதிகம் கவனம் செலுத்துவதாக 15வது நிதி குழு தெரிவித்துள்ளது.

- விமான நிலையங்கள், சாலைகள், துறைமுகங்கள் போன்ற தொழில் துறைகளை விரிவப்படுத்த அதிக அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- தற்போது இந்தியாவில் உள்ள அந்நிய நேரடி முலீட்டில் 7% பங்கை தமிழ்நாடு கொண்டுள்ளது.

அந்நிய நேரடி முதலீடு

- இந்தியாவில் அதிக அளவு அந்நிய நேரடி முதலீடு கொண்ட நாடு – சிங்கப்பூர்
- மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீடு பெறுநர் – அமெரிக்கா
- மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீடு கொண்ட மாநிலம் – குஜராத்.

## உலக முதலீட்டாளர் மாநாடு

- முதல் உலக முதலீட்டாளர் மாநாடு 2015ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது
- இம்மாநாட்டில் 30% சதவீத ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாடு கடந்த 2019 ஆம் ஆண்டு Jan 23, 24 ல் சென்னை வணிக மையத்தில் நடைபெற்றது. இதில் 64% சதவீத ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 13–வது யானைகள் நலவாழ்வு முகாம்

- கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் 13–ஆவது யானைகள் நலவாழ்வு முகாம் தொடங்கியது. யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் கடந்த 2003–ஆம் அண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

## இ–சலான் மூலம் செலுத்தும் புதிய திட்டம்

- நிதித்துறை சார்பில் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தில் பொதுமக்கள், அரசுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை அரசுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை கருவூலத்துக்கு இ–சலான் மூலம் செலுத்தும் திட்டத்தை முதல்வர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.
- அரசுப் பணிகள் சிறப்பாக நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தை கடந்த 2019–ஜனவரி 10–ம் தேதி முதல்வர் தொடங்கிவைத்தார்.
- இதன்மூலம் பொதுமக்கள், அரசுதுறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை அரசுக்கு செலுத்த வேண்டிய வரவிணங்களை, மின் வரவுகளாக 24 மணி நேரமும் தங்குதடையின்றி, 'www.karuvoola.,tn.gov.in' என்ற இணையதளம் மூலம் செலுத்த முடியும்.

## நெமிலிச்சேரி–மீஞ்சூர் ஆறு வழிச்சாலை

- நெமிலிச்சேரி முதல் மீஞ்சூர் வரையில் அமைக்கப்பட்டுள்ள ஆறு வழித்தட பிரதான சாலையை முதல்வர் பழனிசாமி திறந்த வைத்தார்.

## கொத்தடிமை முறை ஒழிப்பு தினம்

- தமிழகத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம் பிப்ரவரி 9 அனுசரிக்கப்பட்டது.
- கொத்தடிமை தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிடவும் தமிழகத்தை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9ம் தேதி கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்க கடந்த 2020 ஆண்டு செப்டம்பர் 23ம் தேதி தமிழக அரசு உத்தரவிட்டது.
- இந்த ஆண்டு முதல் முறையாக கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினம் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப்பட்டது.

## குடிமராமத்துப் பணி விவரங்களை இணையத்தளத்தில் வெளியிட தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

- தமிழகத்தில் நடைபெறும் குடிமராமத்துப் பணிகள் குறித்த விவரங்களை இணையதளத்தில் வெளியிட தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டது.

குடிமராமத்து திட்டம்

- தமிழகத்தில் நீர்நிலைகளைப் பராமரித்து துர்வாருவது உள்ளிட்டப் பணிகளை மேற்கொள்ள குடிமராமத்து திட்டம் தொடங்கப்பட்டது.
- குடிமராமத்து திட்டம் கடந்த 2017 மார்ச் 13 அன்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தொடங்கி வைத்தார். இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியுதவி வழங்குகிறது.
- முதல் கட்டமாக 100 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

## மதுரை மரிகொழுந்துக்கு புவிசார் குறியீடு சேர்க்க விண்ணப்பம்

- மதுரை மரிகொழுந்துக்கு புவிசார் குறியீடு கேட்டு மதுரை மீனாட்சி சுந்தரரேஷ்வர் மலர்மொட்டு வியாபாரிகள் நல சங்கம் விண்ணப்பித்துள்ளது.
- இந்தியாவில் அதிக அளவு புவிசார் பெற்றுள்ள மாநிலம் கர்நாடகா மாநிலம் (47) ஆகும். இதற்கு அடுத்ததாக தமிழ்நாடு மாநிலம் 37 பொருள்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுள்ளது.

புவிசார் குறியீடு

- பொருள்களுக்கு புவிசார் குறியீடு வழங்குவதால் போலிகள் உற்பத்தி தடுக்கப்பட்டு அப்பொருள்களுக்கு சட்டப் பாதுகாப்பும் கிடைக்கிறது. புவிசார் குறியீடு சரக்கு பதிவு மற்றும் பாதுகாப்பு சட்டம் 1999–கீழ் வழங்கப்படுகிறது. தொழில் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.
- இந்தியாவில் புவிசார் குறியீடு அளிக்கப்பட்ட 365 பொருட்கள் உள்ளன. முதன்முறையாக டார்ஜிலிங் தேநீர்க்கு கடந்த 2004–2005 ஆம் ஆண்டு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மருத்துவ பண்புகளைக் கொண்ட புதிய தாவர இனங்கள்

- சென்னையைச் சேர்ந்த தாவரவியலாளர்கள் ஒரு தாவர இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர். sithiravaraiensis (Karumthumbai or Senthumbai or Sakkaraithumbai) கிழக்குத் தொடர்ச்சி மலையின் எல்லைகளில் ஒன்றான ஜிங்கி மலைகளில் உள்ள ரூபியாசி குடும்பத்தின் ஆபத்தான இனம் இது.
- ஆரம்பத்தில் இந்த இலை லாமியேசி (புதினா) குடும்பத்தைச் சேர்ந்தது என்று கருதப்பட்டது. ஏனெனில் மஞ்சரி (மலர் தலை) குடும்பத்தின் இனங்களை ஒத்திருந்தது.

## மொழி சிறுபான்மையினருக்கான சமூக–பொருளாதார மேம்பாட்டுக் கழகம் உருவாக்கம்

- மொழி சிறுபான்மையினருக்கான சமூக–பொருளாதார மேம்பாட்டுக்கான தனி கழகத்தை தமிழக அரசு உருவாக்கியுள்ளது.
- Tamil Nadu Linguistic Minorities Social and Economic Development Corporation (TALMEDCO).
- தமிழகத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது மற்றும் சௌராஷ்டிர மொழிகளைப் பேசும் மக்கள் அதிகம் வசிக்கின்றனர்.
- விரும்பும் மொழியில் கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் ஆகியவற்றில் பிரதிநிதித்துவம் கிடைப்பதிலும், பொருளாதார வாய்ப்புகளிலும் அவர்கள் பின்தங்கி உள்ளனர்.
- இந்தக் கழகமானது 16 பேரைக் கொண்டு இயங்கும். சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் இந்தக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக இருப்பார்.
- மதம் மற்றும் மொழி சிறுபான்மையினருக்கான தனி சான்றிதழ் வருவாய்த் துறையின் மூலமாக அளிக்கப்படும்.

## தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு ரூ.3,113 கோடி வழங்கி மத்திய அரசு ஒப்புதல்

- இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியாக தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு ரூ.3,113 கோடி வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- கடந்த ஆண்டில் ஏற்பட்ட மழை வெள்ளம், நிரவி புயல், புரெவி புயல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தமிழகம், புதுச்சேரி, ஆந்திரம், பிகார், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்படும். உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## 6 முதல் 8–ம் வகுப்பு மாணவர்களுக்கு "டேப்"

- மத்திய அரசின் உதவியோடு, 6 முதல் 8–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு மடிக்கணினிக்கு அடுத்த நிலையில் உள்ள 'டேப்' வழங்கப்படும் என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் கரோனா தடுப்பூசி போடும் திட்டம் ஒருங்கிணைப்பு பணியில் மதராஸ் ரோட்டரி சங்கம்

- தமிழக சுகாதாரத் துறை மேற்கொண்டு வரும் கரோனா தடுப்பூசி போடும் திட்டத்தை ஒருங்கிணைக்கும் பணியில் மதராஸ் ரோட்டரி சங்கம் ஈடுபட அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- தமிழகத்தில் தட்டம்மை மற்றும் போலியோ தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தில் அரசு சுகாதாரத் துறையுடன் இணைந்து மதராஸ்ரோட்டரி சங்கம்

பணியாற்றி, அந்நோய்களை தமிழகத்திலிருந்து ஒழிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

## வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் மெட்ரோ ரயில்

- சென்னையில் வண்ணாரப்பேட்டை–திருவெற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிப்ரவரி 14 பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.

## சென்னையில் சீர்மிகு நகர திட்டப் பணிகள்

- பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்று வரும் சீர்மிகு நகர திட்டப் பணிகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரத் துறை செயலர் ஆய்வு செய்தார்.

### சீர்மிகு நகர திட்டம்

- மத்திய அரசின் முதன்மை முயற்சியான "ஸ்மார்ட் சிட்டி" (சீர்மிகு நகரம்) கடந்த 2015–ம் ஆண்டு ஜுன் மாதம் 25–ந் தேதி நகர்ப்புற மேம்பாட்டுத் துறையினரால் மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 100 சீர்மிகு நகரங்களை நாடு முழுவதும் 5 ஆண்டுகளில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## மக்களின் குறைதீர்க்க புதிய தொலைபேசி எண் "1100" தொடக்கம்

- தமிழகத்தில் பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக புதிய தொலைபேசி எண் "1100" என்ற புதிய கட்டணமில்லாத தொலைபேசி எண்ணை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தொடக்கி வைத்தார்.

## ஓசூரில் இருச்சக்கர வாகன உற்பத்தி ஆலை

- கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் – தனி சாலை மதகொண்டப்பள்ளி கிராமத்தில் ரூ.635 கோடி முதலீட்டில் சுமார் 1.23 லட்சம் சதுர அடி நிலப்பரப்பில் மின்சார இருசக்கர வாகனம் தாயரிக்கும் தொழிற்சாலையை ஏத்தர் எனர்ஜி என்ற தனியார் நிறுவனம் அமைத்துள்ளது.
- தொழிற்சாலைக்கான பெரும்பாலான உதிரிபாகங்கள் வழங்குவோர் தமிழ்நாட்டில் உள்ளனர்.

## அகழ் வைப்பகம்

- கீழடியில் 7–ஆம் கட்ட அகழாய்வுப் பணி தொடங்கியது.
- மணலூர், அகரம், கொந்தகை ஆகிய பகுதிகளிலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.
- இங்கு கண்டெடுக்கப்படும் தொல் பொருள்களை காட்சிப்படுத்தும் வகையில் கீழடி அருகே கொந்தகை வருவாய் கிராமத்துக்கு உள்பட்ட இடத்தில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.21 கோடி மதிப்பீட்டில் உலகத் தரத்திலான அகழ் வைப்பகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## ஔவையார் – பாரதியார் பாடல்களை நினைவுகூர்ந்த பிரதமர்

"வரப்புயர, நீர் உயரும்
நீர்உயர, நெல் உயரும்
நெல் உயர, குடி உயரும்
குடிஉயர, கோல் உயரும்

- கோல் உயர, கோன் உயர்வான்" என்ற ஔைவையின் பாடலை தமிழில் கூறினார்.
- 'ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
- ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
- ஓயுதல்செய்யோம் தலைசாயுதல் செய்யோம்" என்ற பாரதியார் பாடலை தமிழில் பாடினார்.
- ஓயுதல்செய்யோம் தலைசாயுதல் செய்யோம்" என்ற பாரதியார் பாடலை தமிழில் பாடினார்.

## "ஆபரேஷன் ஸ்மைல்" திட்டம்

- சென்னையில் சாலையோரம் சுற்றித் திரியும் குழந்தைகள், காணாமல் போன குழந்தைகள், பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவும் வகையில் சமூக பாதுகாப்பு துறையுடன் இணைந்து 'ஆபரேஷன் ஸ்மைல்' என்ற திட்டத்தை காவல் துறை தொடங்கியது.
- "ஆபரேஷன் ஸ்மைல்" திட்டம் நிறைவடைய உள்ளது. தனிப்படைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக சென்னையில் 300–க்கும் மேற்பட்ட குழந்தைகள் மீட்கப்பட்டனர்.

## 100 பள்ளிகளில் மாண்டிச்சோரி கல்வி

- சென்னை மாநகராட்சி சார்பில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ், 'சிட்டீஸ்' (City Investments to Innovate, Integrate & Sustain) என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இதன் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் தரமான உள்கட்டமைப்புகளை கொண்ட வகுப்பறைகளை

கொண்ட வகுப்பறைகளை ஏற்படுத்துதல், கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான ஸ்மார்ட் வகுப்பறைகளை எற்படுத்துவது, பள்ளிகளில் மேம்பட்ட விளையாட்டு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- "சிட்டீஸ்" திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சியில் 100 மழலையர் பள்ளிகளில் மாண்டிச்சேரி கல்வி முறையை புகுத்த மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஆராய்ச்சி வசதிகளுடன் ஐஐடி–யின் கண்டுபிடிப்பு வளாகம்

- சென்னை அடுத்த தையூரில் உலகத்தரத்திலான ஆராய்ச்சி வசதிகளுடன் உருவாகும் சென்னை ஐஐடி கண்டுபிடிப்பு வளாகத்தை (டிஸ்கவரி கேம்பஸ்) பிரதமர் மோடி திறந்துவைத்தார்.
- இதற்காக கடந்த 2017–ல் தமிழக அரசு கேளம்பாக்கம் அடுத்த தையூரில் 163 ஏக்கர் நிலத்தை ஐஐடி–க்கு ஒதுக்கினார்.
- தேசிய துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் கடலோர தொழில்நுட்ப மையத்தில் துறைமுகங்கள், கடல்சார்ந்த ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

- நாகப்பட்டினம் மாவட்டம் காவிரிப் படுகையில் ரூ.31,500 கோடியில் அமையவுள்ள கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டுகிறார்.
- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் ராமநாதபுரம்–தூத்துக்குடி வரையில் 143 கி.மீ. தூரத்துக்கு ரூ.700 கோடி மதிப்பில் குழாய் மூலம் இயற்கை எரிவாயு கொண்டு செல்லும் பணி தொடங்கப்பட்டு தற்போது முடிவுற்றுள்ளது.
- சென்னை மணலியில் ரூ.500 கோடியில் பெட்ரோலில் கந்தகத்தை அகற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

## பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்ட முதிர்வுத் தொகை

- முதல்வரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் 1,598 பயனாளிகளுக்கு அவரவர் வங்கி கணக்கில் முதிர்வு தொகை செலுத்தப்பட்டுள்ளதாக சமூக நலத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
- முதல்வரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் கடந்த 1992–ம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்ததிட்டத்தின்படி, குடும்பத்தில் ஒருபெண் குழந்தை இருந்தால் ரூ.50 ஆயிரம் ஆரம்ப முதலீட்டு தொகையாக சமூகநலத் துறை சார்பில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் செலுத்தப்படும்.
- 2 பெண் குழந்தைகள் இருந்தால் ரூ.25 ஆயிரம் ஆரம்ப காலமுதலீடாக செலுத்தப்படும். பெண் குழந்தையின் 18 வயதுக்கு பிறகு வட்டியுடன் கூடிய முதிர்வு தொகை வழங்கப்படும்.

## சிப்காட்டின் 4 புதிய தொழில் பூங்காக்கள்

- சிப்காட் நிறுவனத்தின் நான்கு புதிய தொழிற்பூங்காக்களுக்கு முதல்வர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.
- சிப்காட் நிறுவனத்தின் மணப்பாறை, மாநல்லூர், ஓரகடம், தருமபுரி ஆகிய நான்கு இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட உள்ளன. இதன் மூலம், ஆட்டோ உதிரி பாகங்கள், உணவு பதனிடுதல், மின்சார வாகன உற்பத்தி, தானியங்கி ஊர்திகளுக்கான உதிரி பாகங்கள், பொது பொறியியல் தொழில்கள் மற்றும் துணி உற்பத்தி ஆகிய சேவைகளுக்கான உதவிகள் அளிக்கப்படும்.
- பொன்விழா ஆண்டு: சிப்காட் நிறுவனத்தின் பொன்விழா ஆண்டை ஒட்டி, தபால் தலையை முதல்வர் பழனிசாமி வெளியிட்டார். 1971–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சிப்காட் நிறுவனம், 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- சிட்கோ நிறுவனத்தின் சார்பில் 6 புதிய தொழிற்பேட்டைகள் ரூ.200 கோடியில் அமைக்கப்பட உள்ளன. அதன்படி, செங்கல்பட்டு மாவட்டம் ஆலத்தூர், சேலம் மாவட்டம் சீரகப்பாடி, உமையாள்புரம், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, திருவண்ணாமலை மாவட்டம் பெரிய கோலப்பபாடி, நாமக்கல் மாவட்டம் ராசம்பாளையம் ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்க முதல்வர் பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.

## கண்புரை நோய்க்கான மொபைல் பயன்பாடு

- தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNEGA) கண்புரை நோய்க்கான செயற்கை நுண்ணறிவு முறையில் சோதனை மேற்கொள்ள மொபைல் பயன்பாட்டை அறிமுகம் செய்துள்ளது.

- இப்பயன்பாட்டை தமிழ்நாடு குருட்டுத்தன்மை கட்டுப்பாட்டு சமூகம் சில மாவட்டங்களில் சோதனை முறையில் பரிசேதனை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

- இதன் கீழ் "நமது அரசு' என்ற போர்டல் உருவாக்கப்பட்டது. மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவும், தங்கள் கருத்துகளை தெரிவிக்கும் இப்போர்டல் உதவும்.
- இந்த இணையதளம் தேசிய மின்–ஆளுமை உதவியுடன் உருவாக்கப்பட்டது.

## புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பதவியிலிருந்து கிரண் பேடி விடுவிப்பு

- புதுச்சேரி துணைநிலை ஆளுநராக இருந்த கிரண் பேடி அப்பதவியில் இருந்து விடுவிக்கபட்டுள்ளார்.
- அவருக்குப் பதிலாக, மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தெலங்கானா ஆளுநர் தமழிசை சௌந்தராஜன், புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பொறுப்பையும் கூடுதலாகக் கவனிப்பார்.

## ரூ.10 லட்சம் கோடி முதலீடு இலக்கு

- தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட புதிய தொழில் கொள்கையில் ரூ.10 லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த முதலீடுகள் மூலம் 10 லட்சம் பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறும் என தொழில் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.ஃ
- உற்பத்தி துறையில் 15 சதவீத வளர்ச்சியை எட்டுவதும், அதன் மூலம் ரூ.10 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்ப்பதும் தொழில் கொள்கையின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## புதிய திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் மோடி

- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில், மணலியில் ரூ.500 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு உள்ள பெட்ரோல் கந்தகம் அகற்றும் பிரிவு, ரூ.700 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு உள்ள ராமநாதபுரம்–தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் பாதைஆகியவற்றை நாட்டுக்கு அர்ப்பணித்தல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடியில் ரூ.31,500 கோடி மதிப்பில் நிறுவப்பட உள்ள காவிரிப்படுகை சுத்திகரிப்பு ஆலையின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.
- "ஒரே நாடு, ஒரே எரிவாயு தொகுப்பு' திட்டத்தின்கீழ், 5 ஆண்டுகாலத்தில் எண்ணெய் மற்றும் எரிவாயு கட்டமைப்புத் திட்டங்களுக்கு ரூ.7.5 லட்சம் கோடி செலவிட திட்டமிடப்பட்டு உள்ளது.

## சென்னை சர்வதேச திரைப்பட விழா

- சென்னை சர்வதேச திரைப்பட விழா தொடங்குகிறது. இந்த ஆண்டு 18–வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவை நடத்துகிறது.

## உயர்கல்வி படிப்போர் அதிகம் உள்ள மாநிலம் தமிழகம்

- நாட்டிலேயே உயர்கல்வி படிப்போர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

கல்வி

- உயர்கல்வி தொடர்பான அனைத்திந்திய ஆய்வுத் தகவலில் (AISHE 2018–19) தமிழ்நாடு மாநிலம் மொத்த சேர்க்கை விகிதத்தில் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- இந்த விகிதம் (GER) 18–23 வயது வரையுள்ள மாணவர்களுக்கு கணக்கிடப்படுகிறது.

தமிழ்நாட்டின் மாநில மொத்த சேர்க்கை விகிதம்

- மொத்த விகிதம் – 49%
- ஆண்கள் – 49.8%
- பெண்கள் – 48.3%
- SCs – 41.6%
- STs – 37.8%

சிறந்த மாநிலங்கள்

- சிக்கிம் (53.9%)
- சண்டிகர் (50.6%)
- தமிழ்நாடு (49%)
- இந்த விகிதத்தில் "முக்கிய மாநிலங்கள்" வரிசையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- மத்திய அரசு 2030–ம் ஆண்டுக்குள் மொத்த சேர்க்கை விகிதத்தில் 50% இலக்கு வைத்துள்ளது.

## தலைவாசலில் கால்நடைப் பூங்கா 22–இல் திறப்பு

- சேலம் மாவட்டம், தலைவாசலை அடுத்துள்ள வி.கூட்டுச்சாலையில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடைப் பூங்கா அமைக்க தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.

## புதிய திட்டங்கள்

- தமிழகத்தின் புகளூரில் இருந்து கேரளத்தின் திருச்சூருக்கு ரூ. 5,070 கோடியில் 320 கிலோ வாட் மின்சாரத்தை பகிர்வதற்கான திட்டம் (புகளூர்–திருச்சூர் மின்பகிர்வு திட்டம்), காசர்கோடியில் 50 மெகாவாட் சூரி மின்னுற்பத்தி திட்டம், அருவிக்கரை அருகே நாளொன்றுக்கு 7.5 கோடி லிட்டர் நீரை சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திரகரிப்பு திட்டம் ஆகியவற்றை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.

## கோதாவரி – காவிரி இணைப்பை தேசிய திட்டமாக்க வேண்டும்

- கோதாவரி – காவிரி நதிகள் இணைப்பு திட்டத்தை தேசிய திட்டமாக அறிவிக்க வேண்டும் என்று நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடியிடம் முதல்வர் பழனிசாமி வலியுறுதினார்.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நிதி ஆயோக் அமைப்பின் 6வது நிர்வாகக் குழு கூட்டம் டெல்லியில் நேற்று காணொலி வாயிலாக நடந்தது. இதில் துணை நிலை ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
- தேசிய அரசு வெளியிட்ட ஆளுமை குறியீட்டில் முதல் இடத்தில் தமிழகம் உள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை நாட்டில் அதிக அளவான 10 சதவீத முதலீடுகளை தமிழகம் பெற்றுள்ளது. ஆன்லைனில் திட்டத்தில் ரூ. 25.00 கோடி முதலீடுகள் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சென்னை அருகே 210 ஏக்கர் நிலத்தில் பல பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது.
- குடிமராமத்து திட்டத்தில் இது ரூ. 1.413 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- "நவாமி கங்கா" திட்டம் போல தமிழகத்தில் காவிரி நதியை சீரமைக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்து நிதியுதவியும் வழங்க வேண்டும்.
- தமிழகம் தரமான மின்சாரம் வழங்குவதற்கான கட்டமைப்பை பெறுவதுடன் மாநிலமாகவும் திகழ்கிறது. கற்றாலை மின் உற்பத்தியில் முதல் இடத்தில் சூரிய ஒளியின் உற்பத்தியல் 5வது இடத்தில் தமிழகம் உள்ளது.
- உதவி மேலாண்மை திட்டம் மூலம் 1100 என்ற தொலைபேசி எண் வாயிலாக குறைகளை தெரிவித்தால் தீர்வு காணும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இதன்மூலம் தெலுங்கானா, ஆந்திரம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் பயன்பெறுவர், தூய்மை கங்கை திட்டத்தின் கீழ், காவிரி மற்றும் அதன் துணை நதிகளைப் புனரமைக்கும் திட்டத்தை மத்திய அரசு எடுக்க வேண்டும்.

## கருமந்துறையில் கலப்பினப் பசுக்கள் ஆராய்ச்சி மையம்

- சேலம் மாவட்டம், கருமந்துறையில் ரூ.100 கோடி மதிப்பில் கலப்பினப் பசுக்கள் ஆராய்ச்சி மையம் தொடங்கப்படும். கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க தலைவாசலில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி நிலையம், கால்நடை மருத்துவக் கல்லூரி சுமார் ரூ.1,022 கோடி செலவில் மிக பிரம்மாண்டமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவிலேயே மிக பெரியதாக 1,102 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

## தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம்

- மாப்பேடுவில் (Mappedu) பல மாதிரி தளவாட பூங்கா அமைக்க தமிழக அரசும், இந்திய தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையமும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- தொடக்கம் – 1998
- தலைமையிடம் – டெல்லி
- தலைவர் – சுக்பீர் சங்சிந்து

## வடசென்னை மிக உய்ய அனல்மின் திட்டம்

- திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டில், வடசென்னை அனல்மின் நிலைய வளாகத்தில் 250 ஏக்கர் பரப்பளவில், ரூ.6,376 கோடி மதிப்பீட்டில் நிலக்கரியில் இயங்கும் 800 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை மிக உய்ய அனல்மின் திட்டம் நிலை–3 அமைப்பதற்கு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அடிக்கல் நாட்டினார்.
- மிக உய்ய அனல் மின்தொழில் நுட்பத்தில் 800 மெகாவாட் திறனுடைய அலகு தமிழ்நாட்டில் அமைக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

## தமிழகத்தைச் சேர்ந்த இரு நிறுவனங்களுக்கு தேசிய தொழில்நுட்ப விருது

- உள்ளூர் தொழில்நுட்பங்கள், சிறு குறு நடுத்தர நிறுவனங்கள், புதிய தொழில்முனைவோர் ஆகிய

3 வகைகளில் தொழில்களை மேற்கொண்டு வெற்றிகரமாக வர்த்தகங்களை மேற்கொண்ட 12 நிறுவனங்கள் தேசிய தொழில்நுட்ப விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதில் தமிழகத்தை சேர்ந்த 2 நிறுவனங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியத்தால் தொழில்நுட்ப நிபுணர்களால் தேர்வு செய்யப்பட்டனர்.
- குறு, சிறு, நடுத்தர தொழில் பிரிவில் சென்னையைச் சேர்ந்த எஸ்.வி.பி.லேசர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்நிறுவனத்தின் ஆட்டோகேம் 2டி கேம் மென்பொருள் மற்றும் நகை, பர்னிச்சர் தயாரிப்பில் இந்நிறுவனத்தின் இயந்திர தொழில்நுட்பங்கள் கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமன், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
- குறு, சிறு, நடுத்தர தொழில் பிரிவில் தஞ்சாவூரைச் சேர்ந்த அல்ஹல் ஆர் நியூட்ரா பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் தேசிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்நிறுவனம் நுண்நீர் பாசிகளில் இருந்து டோகோசஹெக்ஸெனோயிக் அமிலம் (Decosahexaenoic acid) என்ற ஒமேகா–3 என்ற கொழுப்பு அமிலத்தைத் தயாரிக்கும் பசுமை தொழில்நுடபத்தை உருவாக்கி உள்ளது.

## 'ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை" திட்டம்

- அனைவருக்கும் பொது விநியோக திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முழுமையாக உறுதி பூண்டுள்ளது. "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டம் தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் இருந்து பிற மாநிலங்களுக்கு புலம்பெயரும் தொழிலாளர்களும், பிற மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு புலம்பெயரும் தொழிலாளர்களும் அந்தந்த மாநிலங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் அவர் பொருட்களை பெறலாம்.

### ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை

- 2014ம் ஆண்டில் துவங்கப்பட்டது.
- மத்திய நுகர்வோர் விவகார அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது.
- 2013ம் அண்டு உணவு பாதுகாப்பு சட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல்

- தமிழகத்தின் மொத்த வருவாய் வரவுகள் நிகழ் நிதியாண்டின் முடிவில் ரூ.1 லட்சத்து 33,530.30 கோடியாக இருக்கும் எனவும், செலவினங்கள் ரூ.2 லட்சத்து 46,694.69 கோடியாக இருக்கும் எனவும் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், வருவாய்ப் பற்றாக்குறை ரூ.65,994.06 கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு எடுத்த பல்வேறு நடபடிக்கைகளின் காரணமாக, நிகழ் நிதியாண்டிலேயே 2.02 சதவீதம் அளவுக்கு நேர்மறை வளர்ச்சியை மாநிலம் பதிவு செய்யும் என பட்ஜெட்டில் துணை முதல்வர் தெரிவித்துள்ளார். இது அகில இந்திய பொருளாதார வீழ்ச்சி விகிதமான 7.7 சதவீதத்துக்கு மாறாக இருப்பதாக அவர் குறிப்பிட்டள்ளார்.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுக்கு ரூ.2,634 கோடி ஒதுக்கீடு

### அரசு ஊழியர்களுக்கான மருத்துவ காப்பீட்டு தொகை ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும்

- தற்போது செயல்பட்டு வரும் விரிவாக்கப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம், ஜூன் மாதம் நிறைவடைகிறது. மேம்படுத்தப்பட்ட சலுகையுடன் இத்திட்டம் நீட்டிக்கப்படும். தற்போதைய ஒட்டுமொத்த காப்பீட்டு தொகையான ரூ.4 லட்சம் ரூ.5 லட்சமாக அதிகரிக்கப்படும். குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கான காப்பீட்டு தொகை ரூ.7.5 லட்சத்தில் இருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தப்படும்.

### முக்கிய அம்சங்கள்

- கரோனா பெருந்தொற்று மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்கு ரூ.13,352 கோடி
- நிரந்தர இயலாமைக்கு ரூ.2 லட்சம் காப்பீடு
- அம்மா சிறு மருத்துவமனைகள் அமைக்க ரூ.144 கோடி
- சத்துணவுத் திட்டத்துக்கு ரூ.1953.98 கோடி.
- பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்துக்கு ரூ.3700 கோடி.
- அம்ருத் திட்டத்திற்கு ரூ.1450 கோடி.
- ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ.22618.58 கோடி.
- நீர்வள ஆதார துறைக்கு ரூ.6 ஆயிரத்து 453 கோடி. சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.300 கோடி.

## மின்வாரிய இழப்புகளை ஈடு செய்ய ரூ.7217 கோடி

- 2021–22ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மானியக் கட்டணங்களுக்காக ரூ.8,834.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. "உதய்" திட்டத்தின் கீழ், 5 ஆண்டு காலத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடன்களை மானியமாக மாற்றுவதற்கான ஐந்தாவது மற்றும் இறுதிக் கட்ட மானியமாக ரூ.4,563 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**உதய் மின் திட்டம்**

- UDAY (Ujjwal DISCOM Assurance Yojana)
- துவங்கப்பட்ட வருடம் – 2015
- நோக்கம் – மின்சார பகிர்மான கழகங்களின் நஷ்டத்தை குறைத்து கட்டமைப்பை மேம்படுத்துதல்
- அமைச்சகம் – மத்திய மின்சார அமைச்சகம்
- தமிழ்நாடு அரசு இந்த திட்டத்தில் 2016ல் இணைந்தது.

## கங்கைகொண்டானில் உணவுப் பூங்கா

- திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் புதிதாக அமைக்கப்பட உள்ள உணவுப் பூங்காவுக்கு முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.
- இந்தப் பூங்காவில் உணவுப் பொருள் சோதனை ஆய்வகம், 5,000 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு 7,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, சிப்பம் கட்டும் மையம் போன்ற கூட்டமைப்புகளும் அமைக்கப்பட உள்ளன.

## வேளாண்மை, சுகாதாரம், தொழிலாளர்துறை சார்பில் பணிகள்

- திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் வளாகத்தில் ரூ.78 கோடியே 52 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட உள்ள உணவுப் பூங்காவுக்கும் அடிக்கல் நாட்டினார். மேலும், 2019–20 ஆண்டுக்கான எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதுக்கான முதல் பரிசை நாமக்கல்லைச் சேர்ந்த சக்திபிரகதீசுக்கும், 2ம் பரிசை சேலத்தைச் சேர்ந்த எஸ். வேல்முருகனுக்கும், 3–ம் பரிசை சிவகங்கையைச் சேர்ந்த உ.சிவராமனுக்கும் வழங்கினார்.
- முதல்வர் பழனிசாமி முன்னிலையில், வங்கி நிதிச்சேவைகள் மற்றும் காப்பீடு பிரிவில் ரூ.20 கோடி மதிப்பிலான உயர் நிலை திறன் மேம்பாட்டு மையம் அமைக்க எம்எஸ்இ ஃபைனான்சியல் சர்வீசஸ் நிறுவனத்துக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- சமூகவளை தள நிர்பயா உதவி எண் 181 என்ற பயன்பாட்டையும் முதல்வர் துவங்கி வைத்தார்.

## உலகத் திருக்குறள் மாநாடு

- தஞ்சாவூரில் மூன்றாவது உலகத் திருக்குறள் மாநாடு தொடங்கி தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு அரசின் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர் பாரத் அறிவியல்–நிர்வாகவியல் கல்லூரி, ஆஸ்திரேலியா மெல்போர்ன் தமிழ்ச் சங்கம், இளங்காடு நற்றமிழ்ச் சங்கம், தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை சார்பில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.

## நகராட்சி பள்ளி மாணவர்களுக்கு இலவச நீட் பயிற்சி வகுப்பு

- சென்னை நகராட்சி பள்ளி மாணவர்களுக்கு இலவச நீட் பயிற்சி வகுப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முதல் நூறு மாணவர்கள் கொண்டு என்னால் முடியும் (Ennal Mudium (Icon)) என்ற நிகழ்ச்சி மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.
- ஸ்மார்ட் வகுப்புகள் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.

## மேட்டூர் அணை உபரி நீரை ஏரிகளில் நிரப்பும் திட்டம் தொடக்கம்

- சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து வெளியேறும் உபரி நீரை 100 வறண்ட ஏரிகளுக்கு கொண்டுச்செல்ல 565 கோடி ரூபாய் செலவில் திட்டம் வகுக்கப்பட்டது.
- அதன்படி, மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய தொகுதிகளில் உள்ள 100 ஏரிகளுக்கு கொண்டுச் செல்லும் திட்டப்பணிகள் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டன.

**மேட்டூர் அணை**

- இது இந்தியாவில் மிகப் பழமையான அணைகளில் ஒன்றாகும்.
- இது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம்

ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 2,71,000 ஏக்கர் விளை நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கிறது.

## பாரத் நெட் திட்டம்: 4 நிறுவனங்களுக்கு அனுமதி

- தமிழகத்தில் பாரத் நெட் திட்டத்தைச் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்ட நான்கு நிறுவனங்களுக்கு உத்தரவுகளை முதல்வர் பழனிசாமி அளித்தார்.
- தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் தமிழகத்தில் பாரத்நெட் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- திருச்சி மாவட்டம் மொண்டிப்பட்டியில் அமைந்துள்ள காகித அட்டை ஆலை விரிவாக்கத் திட்டத்தின் முதல் கட்டமாக ரூ.1,100 கோடியில் மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, ரசாயன மீட்பு கொதிகலன் உற்பத்திக்கான பணிகளை முதல்வர் பழனிசாமி தொடக்கி வைத்தார்.

## விழுப்புரத்தில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகம் திறப்பு

- விழுப்புரத்தில் டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி காணொலி மூலம் திறந்து வைத்தார்.
- வேலூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் கீழ், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கலை, அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.
- இந்த நிலையில், திருவள்ளுவர் பல்கலைக்கழத்தைப் பிரித்து, கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக இருந்து வரும் விழுப்புரம் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய பல்கலைக்கழகம் தொடங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்தார். அதற்கான அரசாணையும் வெளியிட்டப்பட்டது.
- புதிய பல்கலைக்கழகத்துக்கு மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நினைவாக "டாக்டர் ஜெ.ஜெயலலிதா பல்கலைக்கழகம்" என பெயர் சூட்டப்பட்டது.
- விழுப்புரத்தில் புதிய பல்கலைக்கழகம் திறக்கப்பட்டதற்கு மாணவ, மாணவிகள், பொது மக்கள், அரசியல் கட்சியினர் வரவேற்பு தெரிவித்தனர்.

## அருணாஜெகதீசன் ஆணையம்

- தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018 மே 22, 23ஆம் தேதிகளில் நடைபெற்ற போராட்டத்தில் போலீஸார் துப்பாக்கியால் சுட்டதில் 15 பேர் உயிரிழந்தனர்.
- ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் ஆணையத்தை தமிழக அரசு அமைத்தது.

## சென்னையில் இந்திய வர்த்தக போட்டி ஆணையத்தின் தென் மண்டலக் கிளை

- சென்னையில் இந்திய வர்த்தக போட்டி ஆணையத்தின் தென் மண்டலக் கிளையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடக்கி வைத்தார்.
- 2003-ஆம் ஆண்டில் வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது தில்லியில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.
- நிறுவனங்களுக்கு இடையே உள்ள போட்டியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் நடைமுறைகளை அகற்றல், ஆரோக்கியமான போட்டிகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து நுகர்வோர் நலன்களை பாதுகாத்தல் மற்றும் இந்திய சந்தைகளின் வர்த்தக சுதந்திரத்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு 2003-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் இந்திய வர்த்தக போட்டி சட்டங்கள் உருவாக்கப்பட்டது.

## பதவியில் இருக்கும் போது உயிரிழக்கும் எம்எல்ஏவின் குடும்பத்துக்கான நிதி ரூ.5 லட்சமாக உயர்வு

- சட்டப்பேரவை உறுப்பினர் தனது பதவிக் காலத்தில் இறந்தால் அவரது குடும்பத்துக்கு வழங்கப்படும் படித்தொகை ரூ.2 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக அதிகரிக்கப்படும். சட்டப்பேரவை மற்றும் சட்டமேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாகவும், உறுப்பினர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.12,500 ஆகவும் அதிகரிக்கப்படும்.

## வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு

- கல்வி, அரசுப் பணிகளில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வழங்கும் சட்ட மசோதா பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
- 1993 இட ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழ் தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடக்கி கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கையிலும் அரசின் கீழ் வரும் பணிகளில் பதவிகளும் மற்றும் நியமனங்களிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினருக்காக முறையே 30 மற்றும் 20 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது.
- பிற்பட்டோருக்கான ஒதுக்கீட்டில் ஜாதிகளுக்கான உள் ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான கோரிக்கைகளை முதல்வராக இருந்த ஜெயலலிதா, நீதிபதி ஜனார்த்தனம் தலைமையிலான ஆணையத்துக்கு அனுப்பி, அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து, உள் ஒதுக்கீடு தொடர்பாக அளிக்கை அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.
- அதை ஆணையம் பரிசீலனை செய்து, சமர்பித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்துவந்த நிலையில் அந்தப் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு உரிய சட்டம் இயற்றி நடைமுறைக்கு கொண்டு வர அரசு கருதியது.

| வகுப்பின் பெயர் | பிரிவுகள் | உள்ஒதுக்கீடு (சதவீதத்தில்) | மொத்த ஒதுக்கீடு (சதவீதத்தில்) |
|---|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | முஸ்லிம் அல்லாதவர்கள் | 25.5 | 30 |
| | முஸ்லிம்கள் | 3.5 | |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | வன்னியர்கள் | 10.5 | 20 |
| | குறிப்பிட்ட ஜாதிப்பிரிவுகள் | 7 | |
| | மற்ற ஜாதிப் பிரிவுகள் | 2.5 | |
| பட்டியலினத்தவர் | பட்டியலினத்தவர் மட்டும் | 15 | 18 |
| | அருந்ததியர் | 3 | |
| | பழங்குடியினர் | | 1 |
| மொத்தம் | | | 69 |